**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், நம் தமிழகத்திலுள்ள தமிழர்கள் கோதுமையை ரொம்ப நல்ல முறையில் ருசித்துச் சாப்பிட ஆரம்பித்தார்கள். ஆகவே மத்திய சர்க்காரிலிருந்து நமக்குக் கொடுக்க வேண்டிய கோட்டாவை முறையாகக் கொடுக்கிறார்களா ? அல்லது குறைத்துக் கொடுக்கிறார்கள் என்று சொன்னால் வற்புறுத்தி அதைவாங்குவதற்கு முயற்சியை அமைச்சரவர்கள் எடுத்துக்கொண்டுள்ளார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை கோதுமையின் நிலை இப்பொழுது இந்த மாதத்திலிருந்து அபிவிருத்தியடைந்திருக்கிறது. (குறுக்கீடு) விநாயகம் அவர்கள் ரேஷன் கடைக்குப் போகவில்லை என நினைக்கிறேன். நம்முடைய டிபார்ட்மெண்டல் ஸ்டோர்கள் மூலம் கடந்த வாரத்திலிருந்து கோயம்புத்தூரிலும், சென்னை நகரிலும் கோதுமை கொடுக்கப்பட்டு வருகிறது.

முதலில் மாதத்திற்கு பத்தாயிரம் டன் என்று ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், நம்முடைய மத்திய சர்க்கார் உணவு அமைச்சரவர்களுடன் நம்முடைய கனம் முதலமைச்சரவர்களும், நானும் டெல்லிக்குச் சென்றிருந்தபொழுது அவர்களுடன் பேசியதின் விளைவாக நம்முடைய மாநிலத்திற்கு பத்தாயிரமாக இருந்த ஒதுக்கீடு 12,500 ஆக மாற்றப்பட்டது. அதுமட்டுமல்லாமல், கேரளாவிற்கு நாம் அவசரமாக வழங்கியிருந்த பத்தாயிரம் டன் அரிசிக்கு மாற்றுப் பொருளாக பத்தாயிரம் டன் கோதுமை அல்லது "வீட் ப்ராடெக்ட்ஸ்" 14,000 டன் கிடைக்கும். இந்தக் கோதுமை மொத்தம் 12,500 டன்னும், இதில் 14,000 டன்னுமாகச் சேர்ந்து ஏறக்குறைய 27,000 டன் கோதுமையை இந்த மாநில அரசாங்கம் பெற்றிருக்கிறது. இவைகளைப் பரவலாகப் பகிர்ந்து வெளியிலே கொடுப்பதற்கும் யோசிக்கிறோம். அந்த நிலைமை சீராக இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** சார், கோதுமையைப் பற்றியே பேச்சாகயிருந்தாலும் இந்த அரிசி விநியோகம் பற்றி அப்பொழுதுள்ள, சர்க்காரில் எல்லா ஊர்களிலும் போட்ட மாதிரியே பழைய ஆர்டர்களையே "ரெஸ்டோர்" செய்வதற்குச் சர்க்கார் கவனிக்குமா? பின்னர், மந்திரிகள் கோதுமை உணவு ஜாஸ்தியாக உட்கொள்ளுகிறார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மந்திரிகள் எந்த அளவுக்குக் கோதுமை உணவை உட்கொள்ளுகிறார்கள் என்பதற்குத் தனியாக விவரங்கள் கிடையாது. ஆனால் கனம் உறுப்பினரவர்கள், பழைய அரசாங்கத்தினுடைய உத்தரவுகளை "ரெஸ்டோர்" செய்துவிடுவது சம்பந்தமாகச் சொன்னார்கள். பழைய அரசாங்கத்தினுடைய உத்தரவுகள் என்று என்ன உத்தரவுகளைக் கருதுகிறார்கள் என்று தெரியவில்லை.

**MR. SPEAKER :** Now the hon. Member, Dr. Hande will put a question which does not involve a question of policy.

**DR. H. V. HANDE :** Are the Government aware of the fact that a large number of bags of rice and other commodities are lying idle on the railway yard near Chidambaram and they are being wasted and spoiled ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவர் சொல்லுகிற இந்தப் புகார் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, ரயில்வே மந்திரியவர்களை டெல்லிக்குச் சென்றிருந்தபொழுது சந்தித்துப் பேசியதன் விளைவாக 100 வாகன்கள் 150 வாகன்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையின் காரணமாக பெரிய அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவரவர்களே, கோதுமையைப்பற்றி நமது அமைச்சரவர்கள் பேசும்பொழுது நமது மத்திய அரசாங்கம் பன்னிரண்டாயிரம் டன் கொடுத்தது என்று கூறுகிறார்கள். சமீபத்தில் ரஷ்யாவிலிருந்து இங்கு கோதுமை பெறப்பட்டதாக பத்திரிகைகளிலே படத்துடன் செய்தி வந்தது. அது தனியாக வாங்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பொதுவாக இந்தியாவிற்கு வரும் கோதுமை ஒவ்வொரு மாநிலத்திற்கும் மத்திய அரசாங்கத்தால், நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்படுகிறது.

**THIRU K. S. KOTHANDARAMIAH :** Is there any proposal to introduce statutory rationing in rural areas ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்த நிலை ஒன்றும் எழவில்லை. விவசாயம் செய்யப்படாத இடத்தில், விவசாயத்தில் ஈடுபடாத மக்கள் இருக்கக்கூடிய இடத்தில் உணவுப் பொருட்களை விநியோகிக்கவேண்டிய கடமை இருக்கிறது. அந்த இடத்தில்தான் ஸ்டாச்சுடரி ரேஷனிங் முறையும், குடும்பக் கார்டு முறையும் இருக்கிறது.





**THE HON. THIRU C. N. ANNADURAI :** The general idea is that there should be rationing in non-producing areas, and rural areas are considered to be producing areas. Therefore the question of statutory rationing in rural areas does not arise.

## கொத்துக் கடலை

*** 120 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பச்சைக் கடலை (கொண்டைக் கடலை) நமது ராஜ்யத்துக்கு எவ்வளவு வருகிறது ?

(இ) அதில் வெளி ராஜ்யங்களிலிருந்து, வெளி நாடுகளிலிருந்து வரவழைக்கப்படும் அளவு முறையே எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) வட பகுதியில் உள்ள மாநிலங்களிலிருந்து 1966-67-ம் ஆண்டுக்காக 16,600 டன் கொத்துக் கடலையைத் தமிழகத்திற்கென இந்திய அரசு ஒதுக்கியுள்ளது. இதில் 8,600 டன் கடலைதான் இதுவரை நமது மாநிலத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

(இ) வட பகுதியில் உள்ள ராஜஸ்தான், பஞ்சாப், உத்திரப் பிரதேசம், மத்தியபபிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து நமக்கு வரவேண்டிய கொத்துக் கடலை முழுவதும் வந்து சேர்ந்து விட்டது. வெளி நாடுகளிலிருந்து இம் மாநிலத்திற்குக் கொத்துக் கடலை இறக்குமதி செய்யப்படுவதில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** போதுமான அளவிற்குக் கொத்துக் கடலை நமது ராஜ்யத்திற்குக் கிடைக்காத காரணத்தினால், அந்தக் கொத்துக்கடலையைக் கொண்டு கடலை வறுத்துக்கொண்டிருந்த அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருந்த தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் தொழில் நடத்திக்கொண்டிருப்பவர்களுக்குக் கொத்துக் கடலை கிடைக்காததால், அதன் விலையும் ஐந்தாறு மடங்கு உயர்ந்திருக்கிறது. ஆகவே, கொத்துக் கடலையை அதிகப்படியாகக் கொண்டுவருவதற்கான தீவிர ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஐயா, இந்தப் பிரச்சினையில் மூன்று அம்சங்கள் அடங்கியிருக்கின்றன. முதலில், இந்த மாநிலத்தில் பருப்பு, கடலை வகைகளைப் பொறுத்த வரையில், துவரம்பருப்பு 1 லட்சத்து 50 ஆயிரம் டன்னும், கடலைப் பருப்பு ஒரு லட்சம் டன்னும், ஆக மொத்தம் இரண்டரை லட்சம் டன் நமக்குத் தேவையாக இருக்கிறது. ஆனால், நம் மாநிலத்தில் உற்பத்தியாவது 1,000 டன் தான். இது முதலாவது அம்சம். இரண்டாவது அம்சம் — இதை ஒதுக்கித் தருவதிலே மத்திய அரசாங்கம் நிரம்ப சிரமத்தைக் கொடுக்கிறது. இதுவும் ஒரு காரணம். 33 ஆயிரம் டன் நமக்கு முதலில் ஒதுக்கினார்கள். அதற்குப் பிறகு, அதையே திருப்பி, 16 ஆயிரம் சொச்சம் டன்னாகக் குறைத்து ஒதுக்கி, அதிலும், எண்ணாயிரம் சொச்சம் டன் தான் வந்து சேர்ந்திருக்கிறது. இப்படியெல்லாம் பெரிய இடைஞ்சல் ஏற்படுகிறது. இந்தவிதமான காரியங்கள் இருக்கிற வரையில் நெருக்கடி தீருவதற்கில்லை.

**திரு ஈ. ஆர். கிருஷ்ணன் :** ஐயா, வட புலத்திலிருந்து தருவிக்கும் கடலையை விநியோகிக்கும் உரிமை எப்படி வழங்கப்பட்டிருக்கிறது ? வியாபாரிகள் தனியாக விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களுக்குத் தனியாக உரிமை அளிக்கப்படுகிறதா ? அல்லது, சர்க்காரே கொள்முதல் செய்து, வியாபாரிகள் மூலம் விநியோகிக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 1965-ம் ஆண்டிலிருந்து பருப்பு பல்வேறு கட்டங்களே அடைந்துள்ளது. மெட்ராஸ் ஸ்டேட் கோவாபரேடிவ் மார்க்கெட்டிங் சொஸைட்டி மூலமாகச் சில காலம் இந்த வியாபாரம் நடைபெற்றது. பிறகு, சென்னே மாநில அரசாங்கமே பொறுப்பேற்று, சிவில் சப்ளேஸ் டிபார்ட்மெண்ட் மூலமாக மூன்றரை கோடி ரூபாய்க்கு இந்த வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். கடைசி கட்டமாக இப்பொழுது ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இண்டியா மூலமாக, இது கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. கூட்டுறவு சொசைட்டிகள் மூலமாக வும் நம்முடைய அரசாங்கத்தின் பங்கீட்டுக் கடைகள் மூலமாகவும்தான், ரேஷன் ஆர்ட்டிகிள்ஸ் ஆக இவை கருதப்பட்டு, விநியோகம் செய்யப்படு கிறது. ஆனுல், தனி வியாபாரிகளுக்குக் கொடுக்கப்பட்டது என்பது, 1965-ம் ஆண்டிலிருந்து ஸ்டாக் பண்ணி வைத்து கிடங்குகளில் கெட்டுப் போன சரக்குகள், வெளிச் சந்தைக்கும் நாம் நிர்ணயித்த விலேக்கும் மாறுபாடு இருந்த காரணத்தால், அரசாங்கத்திற்கு ஏற்படுகிற பெருத்த நஷ்டத்தைத் தவிர்ப்பதற்காக சில வியாபாரிகளுக்கு, 1965-ம் வருஷத்தி லிருந்து வாங்கி கிடங்குகளில் வைத்திருந்த பழைய சரக்கு கொடுக்கப் பட்டது. ஆனுல், இன்றைய தினம் அரசாங்கக் கடைகள் மூலமாகவும், கூட்டுறவு சொஸைட்டிகள் மூலமாகவும்தான் அவை கொடுக்கப்படுகின்றன.

**திரு. க. கோமதிசங்கர தீட்சதர் :** சபாநாயகர் அவர்களே, உளுந்து பற்றி நான் ஒரு கேள்வி கேட்க வேண்டும். அரிசி எவ்வளவு முக்கியமோ அதேமாதிரி, தமிழ்நாட்டில் உளுந்தும் மிக முக்கியமானது. உளுந்து இருந்தால், இட்லி, தோசை போன்றவற்றைத் தயார் செய்து, அதன் மூலமும் உணவுத் தேவையை ஏழை மக்கள் பூர்த்தி செய்துகொள்ள லாம். ஆகையால், இந்த மாநிலத்திற்குத் தேவையான உளுந்து சப்ளே செய்ய வேண்டிய நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த அரசாங்கம் அதிலே தீவிரமான முயற்சி செய்து கொண்டிருக்கிறது. ஹரியாளு, உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து நமக்குப் பெருமளவு ஒதுக்க வேண்டும் என்று நேற்று முன் தினம் கூட, நானும் மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களும் மத்திய உணவு அமைச்சர் மாண்புமிகு திரு. ஜகஜீவன்ராம் அவர்களிடம் மிக முக்கியமான காரியமாக வற்புறுத்தி யிருக்கிறோம்.

**THIRU K. VINAYAKAM:** May I know what are all the special difficulties or handicaps which this Government has got in persuading the Central Government to set apart the adequate quota which we deserve or is it due to fall in production in those States or is it the niggardly policy of the Central Government that is standing in our way ?

**THE HON. THIRU K. A. MATHIALAGAN:** There is a fall in production—that is one reason. Another reason is that the States of Uttar Pradesh, Haryana and the Punjab have imposed a ban on the movement of pulses to other States.

**THE HON. THIRU C. N. ANNADURAI:** In that connection I want to give this information. Whereas the Central Government's policy with regard to foodgrains like rice and wheat is to procure from surplus areas, they are not following the policy of procuring pulses from the surplus areas and supplying them to deficit areas. That policy was advocated by the Chief Minister of Andhra Pradesh at the Chief Ministers' Conference, but the Central Government did not accommodate itself into thinking on that line.





## மீன் எண்ணெய்.

***121 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) ஷார்க்லீவர் ஆயில் எங்கெங்கே தயார் செய்யப்படுகிறது ?

(இ) இதுபோன்ற ஆயில் என்னென்ன மீன்களிலிருந்து தயாரிக்கப் படுகின்றது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) செப்பனிடப்படாத சுறு மீன் எண்ணெய் கீழ்க்கண்ட இடங்களில் தயாரிக்கப்படுகிறது :—

1. தேவனும்பட்டினம்.
2. ஆர்க்காட்டுத்துறை.
3. அதிராமப்பட்டினம்.
4. மல்லிப்பட்டினம்.
5. சேதுபாவாச்சத்திரம்.
6. அம்மாப்பட்டினம்.
7. பரம்பன்.
8. தூத்துக்குடி.
9. பின்னகாயல்.
10. ஒவரை.
11. இடிந்தகரை.

(இ) சுறு மீன்களிலிருந்து மாத்திரம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இதை மேலும் அதிகப்படுத்து வதன் மூலமாக, ஆஸ்பத்திரிகளில் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு இன்னும் அதிகப்படியாகக் கொடுத்து உதவுவதற்குப் பேருதவியாக இருக் கும். ஆகவே, அதை அதிகப்படுத்த உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நமது மாநிலத்தில் நான் மேலே குறிப்பிட்ட இடங்களில் தயாரிக்கப்படுகிற மீன் எண்ணெய் கனம் அங்கத்தினர் கருதுவது போல — ஆஸ்பத்திரியில் இருக்கும் குழந்தை களுக்கும் மற்றவர்களுக்கும் வழங்குவதாக இல்லே. இங்கே தயாரிப்பது பதனிடப்படாதது. இந்த எண்ணெயை நாம் கேரளாவிற்கு அனுப்பி வைக்கிறோம். நாம் கேரளாவிற்கு அனுப்பி வைக்கும் எண்ணெயை, கேரளா ஸ்டேட்டில் கள்ளிக்கோட்டையில் சுத்தம் செய்து அங்கிருந்து விற்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுறு மீன் எண்ணெயை ஒட்டிய இந்த வினுவைப்பற்றித் திரு. வேழவேந்தன் அவர்கள் ஒரு துணே வினு கேட்பார்கள்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, சுறு மீன் எண் ணெய் தயாரிப்பதற்கு வேண்டிய சுறு மீன்களேப் பிடிப்பதற்கு "டெரி டோரியல் வாட்டர்ஸ்"ஸைக் கடந்து பிடிக்க வேண்டுமானுல், அதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற வேண்டும் என்று விதிமுறை இருக்கிறதா ? ஆழ்கடல் மீன் பிடிப்புத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு அனுமதி வழங்கியிருக் கிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சுரு மீனைத் தனியாகப் பிடிப்பதில்லை. நம் மாநிலத்தில் நான் ஏற்கெனவே குறிப்பிட்ட 11 இடங்களில்தான் கிடைக்கின்றன. சுரு மீனைத் தனியாகப் பிடிக்காமல். மற்ற மீன்களோடு சேர்ந்து பிடிக்கிறார்கள். அவற்றிலிருந்து சுரு மீனைத் தனித்தெடுத்து இந்த எண்ணெய் தயாரிக்கப்படுகிறது.

**MR. SPEAKER :** Regarding this question relating to shark liver oil, the hon. Member Thiru Martin will ask a supplementary question.

**THIRU T. MARTIN :** May I request the Hon. Minister to state whether there is any proposal to extend these activities to very good fishing centres like Periathalai and Manapad in Tirunelveli District ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அம்மாதிரி யோசனை இப்பொழுது இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் கருத்து தெரிவிப்பாரானால், அது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அங்கு போதுமான மீன் கிடைக்குமானால் அந்தத் திட்டத்தை அங்கே கொண்டுவருவதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, இந்த மீன் எண்ணெயைக் குடிப்பதற்கு நாற்றம் ஏற்படுகிறது. வெளிநாடுகளில் 'இதை மாத்
முற் பகல் 10-00 திரையாகச் செய்து விடுகிறார்கள். ஆகவே, அதுபோலவே நாற்றத்தைப் போக்கி, மாத்திரைகளாகச் செய்து தருகிற ஏற்பாடு இருக்கிறதா ? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இங்கே மீன் எண்ணெய் தயாரிக்கப்படுவதில்லை. செப்பனிடப்படாத மீன் எண்ணெய்தான் குறிப்பிட்ட அளவுதான் தயாரிக்கப்படுகிறது. அதுவும் கேரளப் பகுதிகளில்தான் அந்த எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. ஆகவே, அங்கு வேண்டுமானால் உங்கள் திட்டத்தை அவர்கள் அமல்படுத்திப் பார்ப்பார்கள். போதுமான மீன்கள் கிடைக்காத காரணத்தால் நாம் மீன் எண்ணெய் தயாரிப்பதில்லை.

### தானியங்களை எடைபோட இயந்திரங்கள்.

***122 வினு—திரு. க. இராமமூர்த்தி :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயது செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள ஒழுங்குப்படுத்தப்பட்ட விற்பனைக் கூடங்களில் (Regulated Market Committees) விவசாயிகளின் தானியங்களை எடைபோட இயந்திரங்கள் (Weighing Machines) வழங்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** தென் ஆற்காடு மாவட்டத்திலே குறிப்பாக திண்டிவனத்திலே வியாபாரிகள் பண்டங்களை எடைபோடும்போது, எடையில் ஏமாற்றுகள் இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? இதனைப் போக்க எடைபோடும் இயந்திரங்கள் மார்க்கெட் கமிட்டிகளில் வைக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் உறுப்பினர் கேட்ட கேள்வி தவறானது. ஒவ்வொரு மார்க்கெட் கமிட்டியிலும் எடை போடுகின்ற மெசின் வைக்கப்பட்டிருக்கிறது. 1950-ம் வருடத்திய சென்னை மார்க்கெட் கமிட்டி சட்டத்தின்கீழ் ஒவ்வொரு மார்க்கெட் கமிட்டியும் ஒரு "வேயிங் மெஷினை"யும் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் மார்க்கெட் கமிட்டிக்குப் போகாமலே இந்தத் தகவலைக் கேட்கிறார்கள்.





### பஞ்சாயத்து யூனியன்கள்

***123 வினு—திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா.—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கமுதி பஞ்சாயத்து யூனியனுக்கு ஏப்ரல் மாதம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் விஜயம் செய்து ஏதேனும் பைல்கள் எரிக்கப்பட்டது சம்பந்தமாக விசாரணை செய்தாரா ?

(இ) ஆம் என்றால், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) இதற்குக் காரணமாக இருந்த சம்பந்தப்பட்ட அலுவலர்களின் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** அங்கே தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக, சில பஞ்சாயத்துத் தலைவர்கள் பதவியிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மீதும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பணத்தைக் கையாடல் செய்ததாகத் தகவல் இல்லை. சில தேவைகளுக்காக பணத்தை எடுத்து செலவழிக்காமல் வைத்திருந்ததாக கோட்டாட்சித் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. முழுத் தகவல்கள் கிடைத்ததும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** தலைவர் அவர்களே, கமுதி பஞ்சாயத்து யூனியன் தலைவர் செங்கல் கால்வாய் நடத்தியதாகவும், மூன்று பஞ்சாயத்துத் தலைவர்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு பதவியிலிருந்து நீக்கப்பட்டார்கள். யூனியன் தலைவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கனம் அங்கத்தினருடைய கேள்விக்கு நான் ஏற்கெனவே பதில் கூறியிருக்கிறேன். தகவல் கோட்டாட்சித் தலைவரிடமிருந்து வந்ததும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** சார், பஞ்சாயத்து யூனியன் தலைவர் எந்தெந்த அயிட்டமான பணங்களை எடுத்துக் கையிலே வைத்திருந்தார் என்பதை அமைச்சர் அறிவாரா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : :** இதுபற்றிய முழு விவரமும் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், பெரிய பிரமுகர்கள் பைல்களை எரித்தபோது அவர்களை விட்டுவிட்டதன் காரணமாக, இது தொடர்ந்து நடக்கிறது என்பது அமைச்சர்களுக்கு தெரியுமா ? இது பற்றித் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா?

** ** ** **

**திரு. கரு. சீமைச்சாமி :** மூன்று ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள செங்கல் காளவாய் நடத்திய மூன்று பஞ்சாயத்து தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, யூனியன் தலைவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கனம் உறுப்பினர் கேள்விக்கு முன் ஒரு கேள்வியில் பதிலளித்துள்ளேன். தகவல்கள் கேட்கப்பட்டுள்ளது. பின்னர் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

*** 124 Q.**—THIRU A. BALASUBRAMANYAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government have considered the recommendation of the District Development Council (Tiruchirappalli South) for bifurcation of Tiruvarangulam Panchayat Union; and

(b) if so, the decision taken by the Government thereof?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) ஆம்.

(இ) அக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, இதுபோன்ற அநேக பெரிய பஞ்சாயத்து யூனியன்களை இரண்டாகப் பிரித்து மாற்றியமைப்பது குறித்து அரசு ஏதாவது ஆலோசனை செய்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** மத்திய அரசாங்கம் இப்போது விஸ்தரிப்பு திட்டத்தின்கீழ் நம்முடைய தமிழ்நாட்டில் 374 ஊராட்சி ஒன்றிப்பு யூனியன்கள் இருக்கின்றன. சில இடங்களில் பெரிய ஊராட்சி ஒன்றியமாக இருப்பதால், வசதிக் குறைவுகள் ஏற்படும் என்று திட்டவட்டமாக கோரிக்கைகள் வந்தால், தகுந்த முடிவு எடுக்கப்படும்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** ஏற்கெனவே இருந்த அரசாங்கம் பஞ்சாயத்து ஏரியாவைத் திருத்தவில்லை. ஒரு ஏரியா ஒரு வட்டத்தில் இருக்கும்போது, அதற்கு அந்தப் பக்கம்கூட ஒரு பஞ்சாயத்து ஏரியாவைப் பிரித்திருக்கிருர்கள். இனி, நல்ல முறையில் பிரிக்க ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு பேரவைத்தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி தெற்கு திருச்சி பற்றிய அபிவிருத்திக் கவுன்சிலைப் பற்றியா? இல்லையென்ருல் இக்கேள்வி அனுமதிக்கப்படமாட்டாது.

*** 125 Q.**—THIRU M. WILLIAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to withdraw the Panchayat Union Commissioners and the Extension Officers from the panchayat unions?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஊராட்சி ஒன்றிப்பு ஆணையாளர்களை தற்போது நீக்க வேண்டுமென்ற உத்தேசம் இல்லை. சில பொறுப்பான பதவிகளை மாற்றியமைப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

THIRU K. VINAYAKAM: As this question involves the general policy of the Government regarding Panchayats and their employees, may I know whether the Special Officer who has been appointed to go into this matter and who had been sent to other States to study it, has submitted his report and if so, what action has been taken? What is its future set-up and will there be a change or will it continue to be as before?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இதுபற்றிய முழுத் தகவல்களைத் தெரிந்துக்கொள்வதற்காக மத்தியப் பிரதேசத்திற்குச் சென்று வந்த தனி அதிகாரி ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிருர். எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து அதுபற்றிப் பேசுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிருர்கள். தேவையான மாற்றங்கள் செய்வது குறித்து ஆலோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திலே, சில மாற்றங்கள் செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். எந்தெந்த அதிகாரிகள், எப்படி எப்படி மாற்றப்படுவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** மாற்றங்கள் செய்யப்படும் என்று கூறவில்லை. மாற்றங்கள் செய்வது குறித்து ஆலோசிக்கப்படும் என்று கூறினேன்.

THIRU K. VINAYAKAM: Sir, pending a final decision on the report, will the Government assure this House that *status quo* will be maintained as far as the employees are concerned and if so, why are the employees like Grama Seavks and Grama Sevikas disturbed from the existing position?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** கிராம சேவகர்கள் இதுவரையிலும் தொந்தரவு செய்யப்படவில்லை. கிராம சேவிகைகளைப் பற்றித்தான் பரிசீலிக்க வேண்டும். இவர்களை வேறு துறையிலே மாற்றலாமா என்பது குறித்து, ஹரிஜன நலத்துறை அமைச்சருடன் பேசினேன். அவர்களும் ஒரு குறிப்புத் தந்தார்கள். ஆகவே, கிராம சேவிகைகள் பற்றிய விஷயந்தான் பரிசீலிக்கப்பட வேண்டியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினுக்கள், விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

MR. SPEAKER: The Hon. Member, Dr. H. V. Hande has asked for and received consent under Rule 185 of the Assembly Rules to raise a privilege matter. Dr. Hande will now raise it.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** ஆன், எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்களுடைய பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன?

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** திரு. கோதண்டராமன் அவர்கள் கேள்வி கேட்டபோது உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்பு சபையில் நடந்த ஒன்றைப் பற்றி இப்போது சபையில் நடைமுறைக் கேள்வி எழுப்ப முடியாது. நம்முடைய பேரவை விதி 83(4)-ல் "A point of order may be raised in relation to the business before the House at tne moment" என்பதாக இருக்கிறது. ஆகவே தற்போது மாண்புமிகு உறுப்பினரை அருள்கூர்ந்து உட்காரும்படியாக அன்புடன் கேட்கிறேன்.

**திரு. எஸ். ஜே. இராமசாமி:** சார், நான் இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்புவதற்குக் காரணமே அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்பதற்காகத்தான். நான் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் நடவடிக்கை தடைபடக்கூடாது என்பதற்காகத்தான் பேரவையில் எப்போது நடைமுறைக் கேள்வி கொண்டு வரலாம் என்பது பற்றி விதி தெளிவாக இருக்கிறது. விதிப் புத்தகத்தைத் தங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். தாங்களே அந்த விதியைப் படியுங்கள். இந்த நேடத்தில் நடைமுறைக் கேள்வியை எழுப்ப முடியுமா என்பதை நீங்களே உணர்ந்து கொள்ளலாம்.

**திரு. எஸ். ஜே. இராமசாமி:** இதற்கு முன்பு இந்தச் சட்டமன்றத்திலேயே இதுபோன்று ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதற்கு முன்னால் இந்தப் பேரவை
யில் வேறு வேறு காலகட்டத்தில் இதுபோன்று எழுப்பப்பட்டிருக்கிறது.
என்றாலும், அது விதிக்கு முரணாக இருக்குமானால் நான் அனுமதிப்பதற்
கில்லை. நான் மாண்புமிகு உறுப்பினரை விதி 83 (4)ஐப் படிக்கும்
படியாகக் கேட்டுக்கொள்கிறேன். பேரவையின் நடவடிக்கைகளைப் பாதிக்கக்
கூடிய முறையில் எழுப்பப்படுகிற கேள்விகளை நான் அனுமதிக்க
முடியாது.

## 2. உரிமைப் பிரச்சினை.

### சட்டப் பேரவைத் தலைவருடைய குறிப்புரைகள் பற்றி மேலவையில் எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினை.

MR. SPEAKER : I have given consent under Rule 185 to the hon. Member Dr. Hande to raise a point of privilege and I ask him to raise it.

*DR. H. V. HANDE : Sir, I wish to raise a matter of privilege against the Leader of the Opposition, Madras Legislative Council, and also the Hon. the Chairman, Madras Legislative Council, in regard to the issue of privilege raised on Thursday, the 29th June 1967, in that House on certain observations made by the Hon. Speaker in the Madras Legislative Assembly on the 24th June 1967 afternoon.

In this connection I would like to briefly point out how this is a matter of privilege. Hon. Members know that there are two Houses—the Legislative Council and the Legislative Assembly. In view of the fact that the Assembly Rules are silent about the exact relation between the Legislative Council and the Legislative Assembly I shall go into the practice......

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்
களே, மேல் அவையில் உரிமைப் பிரச்சினை கொண்டுவரப்பட்டபோது
அதன் தலைவர் அதை பரிசீலனை செய்து தம் முடிவைத் தெரிவிப்பதா
கத் தெரிவித்துள்ளார்கள். அதுபோலவே இங்கும் அந்தத் தீர்மானத்தை
தாங்கள் பரிசீலனை செய்து அத்தீர்மானத்தைக் கொண்டு வருவதுபற்றி
தீர்ப்பு அளிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஹாண்டே அவர்கள் என்ன
சொல்கிறார்கள் என்பதைக் கேட்டு ஆய்ந்து, அவர் கொடுத்துள்ள தீர்
மானத்தின் மீது முடிவு செய்வது என் பொறுப்பு. அவர் சொல்வதற்கு
முன்னால் அது என்ன என்று எப்படித் தெரிந்துகொள்ள முடியும் ?

**திரு. பி.ஜி. கருத்திருமன் :** சார், சபை முதல்வர் சொன்னதனால்
நான் எனது அபிப்பிராயத்தைச் சொல்லலாம் என்று இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பின்னால் உங்களுக்கு வாய்ப்பு
கொடுக்கப்படும். இப்போது திரு ஹாண்டே அவர்கள் என்ன சொல்லு
கிறார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டாமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் சொல்வது—மேல்
சபையில் உரிமைப் பிரச்சினை கொண்டுவந்தபோது அதுபற்றி விளக்கங்
கள் எதுவும் கொடுக்க அனுமதிக்கப்படவில்லை. அதைப் பரிசீலித்துச்
சொல்வதாகத் தலைவர் சொல்லியுள்ளார். அதைப்போலவே இங்கும்
விளக்கங்கள், பேச்சுக்கள் எழுவதற்கு முன்மேல் சபைத் தீர்ப்பும் வரட்டும்;
கொஞ்சம் ஆழ்ந்து பரிசீலித்து எடுத்துக்கொள்ளலாம் என்பது தான்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஹாண்டே அவர்கள் என்ன
சொல்லுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இப்போது. திரு.
ஹாண்டே அவர்கள் பேசுவார்கள்.

DR. H. V. HANDE: Hon. Speaker, Sir, the relationship between the House of Lords and the House of Commons is a matter to be discussed here, because the Assembly Rules are silent about the relationship between the Council and the Assembly. In the House of Commons we have the Labour Party as the majority party and in the House of Lords we have the Conservative Party as the majority party. Similarly in the Madras State the Dravida Munnetra Kazhagam is the majority or ruling party in the Assembly and the Congress is the majority party in the Council. In this context we have to consider the matter. A similar situation arose in the House of Commons and the House of Lords. The War Damage Bill was brought in the House of Commons, and the Bill was sent to the House of Lords. The House of Lords made certain amendments. With the amendments the War Damage Bill went back to the House of Commons. The House of Commons refused to accept the Lords' amendments and the Bill again went to the House of Lords. I shall quote very briefly from the book 'Parliament in perspective' by David Monhonnet and John Palmer.

"There exists widespread agreement to-day that the two Chambers must not function as rivals. They are Partners—but the success of the partnership depends on the inequality of the two bodies."

In other words the power of one House must be slightly higher than the powers of the other House.

In the House of Lords the Marquess of Salisbury said :

"I rise to urge your Lordships, with all diffidence, not to insist further on our amendments. If I do this, I can assure your Lordships that it is not because I do not realise the importance of the issues raised by the War Damage Bill. The position now is quite different and is far more formidable. If we insist further we shall in my view, be provoking a first-class crisis between the two Houses of Parliament and that, after all is no light matter."

The question that was brought up was whether the Speaker was making any remarks about the other House. Whatever remarks are made in this august House should not be discussed or a matter of privilege raised in any other House especially the Upper House which has for all practical purposes less powers than this House. As far as money bills are concerned, this is quite clear. My submission is that, when the Hon. Speaker of this august House has made some remarks in this House, those remarks should not at all be considereds as a matter of privilege. Anything that is discussed in this House should not be brought before the courts of law.

[Dr. H. V. Hande] [1967, ஜூன் 30

Harold Wilson became the Prime Minister, just like the Chief Minister of Madras from the D.M.K. Party, ousting the Conservative Party from power. He said in his election manifesto that the House of Lords was obstructing the work of the House of Commons.

The dangers and frustrations of such a situation were certainly in Mr. Harold Wilson's mind when, in a speech at Blackpool in March 1965, he warned the House of Lords that if they decided to obstruct the Government's programme the Labour Party would seek a mandate at the next General Election to amend the Parliament Act so as to end the Lords' power to block Commons' legislation.

Mr. SPEAKER : Is the word used 'obstruct'?

Dr. H. V. HANDE : 'Obstruct' has been used and it is there in the election manifesto.

Mr. SPEAKER : Is it held that that word can be used?

Dr. H. V. HANDE : Yes, Sir. In the House at least we have got protection. He has used the word outside the House.

One year later, the Labour Party's Election Manifesto announced that legislation will be introduced to safeguard measures approved by the House of Commons from frustration by delay or defeat in the House of Lords.

My submission before this august House is that our Speaker's statement has been questioned. There is no question of party in this matter. I request all the Members including the Members of the Congress Party to raise in one voice and join us, becuase the Speaker's privilege is involved."

When the prestige of the Hon. Speaker is involved, it is the prestige of every hon. Member of this House. So, I request the Hon. Speaker to refer this matter to the Committee of Privileges and take necessary action.

Mr. SPEAKER : On the merits of this matter I do not propose to go into, at present. This House is vested with extensive powers and rights. It may rightly be said that this is the most powerful body in this State, consisting as it does of the elected representatives of the people. This House can, at its pleasure, punish any one for contempt and direct any person to imprisonment without limit of time. But although this House has the giant's powers, it does not mean that the powers should be exercised like a giant. Punishment for the breach of privilege is a weapon of enormous potentialities and it should be exercised with care and restraint and with a sense of responsibility. I have already held that this weapon should not be used in the case of a merely trifling matter. It may be that this weapon should not be used when there are wider implications and when there are milder and sweeter ways.



1967, ஜூன் 30] [Mr. Speaker]

The Speaker is the custodian of the rights and privileges of this House. I have announced on the day I assumed Office that I am the custodian of the rights and privileges of this House and will endeavour to uphold the rights of the House. As the guardian of the privileges, I am in duty bound to protect the rights of the Members of this House and even without raising or referring a matter to the Privilege Committee in an appropriate case, the Speaker will refuse consent to any amendment or proposal coming from the Upper House. Even if the Minister asks for leave to bring in a motion to consider an amendment which has been suggested by the Upper House the Speaker may have in duty bound to uphold the rights of the House. Once it has been decided by the House to uphold that right, the Speaker will refuse consent to the Hon. Minister to move any motion concerning the amendment or suggestion or reference made by the other House. But these matters must be carefully considered. The notice consists of two parts. One is against the Hon. Chairman of the Upper House and another is against the Hon. Leader of the Opposition in the Council Mr. R. Venkataraman which will have to be dealt with separately. The Hon. Chairman of the Upper House might have certain privileges. The Hon. Leader of the Opposition in the Legislative Council, Mr. Venkataraman, might or might not have certain other privileges. I would have to consider this matter most carefully with a sense of responsibility and with a view to protect the rights of every Hon. Member of this House and I will announce my decision at a later date.

Thiru P. G. KARUTHIRUMAN : Sir, I would explain my point. The Hon. Speaker has stated that he would allow me......

Mr. SPEAKER : Unfortunately I have already stated that on this matter I would announce my decision at a later date.

Thiru P. G. KARUTHIRUMAN : Sir, on a point of order.

Mr. SPEAKER : The point of order can be raised provided it is not a point of order for the obstruction of the business of the House. Now the Hon. Member can state his point of order.

*திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, சபை முன்பு உரிமைப் பிரச்சினைக் கொண்டுவரப்பட்டு, அதைப்பற்றிய விளக்கங்களை பிரச்சினையை எடுத்துக் கொள்கிற சமயத்தில் வைத்துக்கொள்ளலாம் என்ப தாக சபை முதல்வர் பெருந்தன்மையோடு குறிப்பிட்டபோது எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நானும் எனது கருத்தைத் தெரிவிக்க எழுந் திருந்தேன். அப்போது தாங்கள் எனக்குப் பின்னால் பேச சந்தர்ப்பம் அளிப்பதாகச் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இப்போதே வாய்ப்புக் கொடுக்கிறேன் என்று சொல்லவில்லை. பின்னால் இதை எடுத்துக்கொள் கிறபோது வாய்ப்பு அளிப்பதாகச் சொன்னேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பின்னால் ஐந்து மாதம் கழித்தோ, 6 மாதம் கழித்தோ விவாதத்திற்கு வருகிறபோது சந்தர்ப்பம் கொடுப்பதாகச் சொன்னதாக எப்படி ஆகும்?

சபை முதல்வர் தம் கருத்தைச் சொன்னார். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நான் என் கருத்தைத் தெரிவிக்க முன்வருகிறபோது பின்னால் பேச சந்தர்ப்பம் அளிப்பதாக தாங்கள் சொன்னீர்கள். இப்போது எனக் குச் சந்தர்ப்பம் இல்லை என்பதே என்னுடைய, எங்களுடைய உரிமையைப் பாதித்திருக்கிறது.

**மாண்புமிகு போவைத் தலைவர் :** தங்களுக்கு வாய்ப்புக் கொடுக் கிறேன் என்று சொன்னது இதை பின்னர் எடுத்துக்கொள்கிறபோது தரப்படும் என்பதுதான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மீண்டும் நான் வற்புறுத்திச் சொல்வது சபை நடவடிக்கைகளுக்கு பாதகம் இல்லாத பாயிண்ட் ஆப் ஆர்டராக வேண்டும் என்றால், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் தாங்கள் எனக்குத் தருவதாகச் சொன்ன சந்தர்ப்பத்தை அளிக்க மறுத்துவிட்ட தன் மூலம் என் உரிமை பாதிக்கப்படுகிறது. தங்களுக்குள்ள உரிமை எங்களுக்கும் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

மேல் அவையில் ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டுவரப்பட்டது. நம்மு டைய பேரவை முதல்வர் அதுபற்றி இங்கே ஒரு உரிமைத் தீர்மானம் கொண்டு வரப்பட்டவுடனேயே கண்ணியமாகவும், கௌரவமாகவும் சொன்னார்கள். "இந்த நேரத்தில் எவ்வித விளக்கமும் யாரும் கொடுக்க வேண்டாம்" என்றார்கள். அங்கே உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருப்பது காங்கிரஸ் கட்சி உறுப்பினர். இந்த அவையில் காங்கிரஸ் கட்சி உறுப்பினராக நாங்கள் இருக்கிறோம். அந்த வகையில் எங்களுடைய உரிமையைப் பாதிக்கிறது, அந்த வகையில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் என் அபிப்பிராயத்தைச் சொல்ல நிச்சயமாக எனக்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சார் ஆன் ய பாயிண்ட் ஆப் ஆர்டர். தாங்கள் இதுபற்றி ஒரு தீர்ப்புச் சொல்கிறேன் என்று சொல்லி விட்ட பிறகு, மீண்டும் அதை இங்கு எதிர்க் கட்சித் தலைவர் எழுப்புவதற்கு அனுமதி உண்டா என்று கேட்கிறேன்.

**திரு. பி. ஜி கருத்திருமன் :** மாண்புமிகு சபாநாயகருடைய தீர்ப்பு தவறு என்றோ சரியானதல்ல என்றோ நான் சொல்லவில்லை. சபா நாயகர் தீர்ப்பு தீர்ப்புத்தான். அதை நான் கௌரவிக்கின்றவன். எல் லோரும் கௌரவிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறவன். ஆனால் எனக் குப் பேச சந்தர்ப்பம் அளிக்கிறேன் என்று சொல்லிவிட்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் அளிக்காதது என்னுடைய உரிமையைப் பாதிப்பதாகும். எங் களுடைய உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பது என் அபிப்பிராயம்.

**MR. SPEAKER :** I have already stated that I would not go into the merits of the matter. I have merely pointed out the position and the legal implications. I will go into them thoroughly and then give a decision. I have stated that I would give an opportunity to the Hon. the Leader of the Opposition to speak before I give my final decision. He has stated that that would take six months but I would say that it may be earlier. In any case he will be given the right to speak on the matter before a final decision is given.

**THE HON. THIRU C. N. ANNADURAI :** Mr. Speaker, Sir, I do not want to enter into the technicalities because the Hon. Speaker is going to give his ruling later. But I cannot but regret the uncom-





fortable situation that has been caused by this. Here is what May says with regard to this problem :—

"The leading principle which appears to pervade all the proceedings between the Houses of Parliament is that there shall subsist a perfect equality between them, and that they shall be, in every respect, totally independent one of the other. Hence it is that neither House can claim, much less exercise, any authority over a member of the other. Neither House of Parliament can take upon itself to punish any breach of privilege or contempt offered to it by any member of the other House.' மு. பக. 10-30

(Thiru T. Martin came from his seat and was conversing with Thiru P. G. Karuthiruman from behind the latter's seat.)

**MR. SPEAKER :** Members must keep to their seats. The hon. Member must keep to his seat.

**THIRU K. VINAYAKAM :** There is no such rule.

**MR. SPEAKER :** There is a rule. I will show it in my Chamber.

**THIRU K. VINAYAKAM :** Does it mean that Members should keep to their seats even when not speaking or putting questions ?

**MR. SPEAKER :** Even at other times Members must keep to their seats.

**THIRU K. VINAYAKAM :** We can sit anywhere. Only when we speak or put questions, we have to sit in the allotted seats.

**MR. SPEAKER :** I am holding that in the present circumstances Members must keep to their seats.

**THIRU P. G. KARUTHIRUMAN :** I object to it. I know what the Hon. Speaker means by it. Any member is entitled to sit anywhere except when he is putting questions or speaking. You just show me the rule that every Member should stick to his seat all the five hours that the Assembly is in session. Will you please show that rule ? I want that.

**THIRU V. GEORGE :** Only when a Member is speaking, he should stick to his seat.

**THIRU P. G. KARUTHIRUMAN :** I am very sorry . . .

**MR. SPEAKER :** I am holding that the Members should sit in their allotted seats under the present circumstances when the Hon. Chief Minister is making an explanation. I will discuss this matter later.

**THIRU P. G. KARUTHIRUMAN :** I want you to show me the rule.

**THIRU K. VINAYAKAM :** The Chief Minister and Members are just Members of the House. There is no distinction between the Chief Minister and the Members.

[1967, ஜூன் 30

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், சபையினுடைய விதிகள் தாங்கள் எழுந்து நிற்கும்பொழுது மற்றவர்கள் எழக் கூடாது, தாங்கள் அமர்ந்த பிறகுதான் பேசவேண்டு மென்பதுதான் சபையின் கண்ணியம் ஆகும் என்பது, இது விதியில் இருக்கிறது, விதியைக் கேட்கிறார்கள் நான் கொடுக்கிறேன். ஆனால் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இடம்விட்டு வரலாமா என்று விவாதிக்க ஆரம்பித்தார்கள். நம்முடைய சபையிலே பண்பாடாகவும் பழக்கமாகவும் அப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறதே தவிர, விதிகள் ஒருபுறம் இருக்கிறது. ஆனால் சபையினுடைய தலைவர் எழுந்து நிற்கின்ற நேரத்தில் அவர்கள் தங்களுக்குரிய மரியாதையைக் கொடுக்காமல் இடத்திலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அவர்களுடைய கட்சிக் கொறடாவும் அமராமல் இருப்பது சபையின் கண்ணியத்தைப் பாதிப்பது ஆகாதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**THIRU T. MARTIN :** On a point of order, Sir.

**MR. SPEAKER :** You (Thiru P. G. Karuthiruman) asked me to quote the rule. I am reading Rule 62 :—

'The members shall sit in such order as the Speaker may fix.

I have fixed the order in which the Members are to sit in this House, and the Members shall sit in their seats.

(Thiru P. G. Karuthiruman and Thiru K. Vinayakam rose.)

**MR. SPEAKER :** I have read the rule. I have already fixed the places and they shall sit in their seats. (Interruption) When standing, it is a different question.

A challenge was thrown to the Speaker. It is a good thing and I was glad that this opportunity was taken to test the knowledge of the Speaker about the rules and procedure. The rule says '*shall*' and I am not going to permit any breach of the rule. Under rule 63 (3), a member shall not interrupt a member while speaking. The Hon. Chief Minister is speaking. Under rule 63 (3) I rule that no one has got the authority to interrupt when a member is speaking

(Thiru P. G. Karuthiruman rose.)

**MR. SPEAKER :** I have already ruled.

(Thiru P. G. Karuthiruman and Thiru K. Vinayakam rose.)

**MR. SPEAKER :** I have permitted the Hon. Chief Minister, and after his speech is over I shall allow . . .

**THIRU P. G. KARUTHIRUMAN :** If you think this is interference with the business of the House, with due respect to you we walk out.

(The Members of the Congress Party then walked out of the House.)

**THE HON. THIRU C. N. ANNADURAI :** I was reading from May's 'Parliamentary Practice':

'If any complaint is made against any individual Member or against any of the officers of the other House the usual mode of proceeding is to examine into the fact and then lay a statement of



1967, ஜூன் 30] [Thiru C. N. Annadurai]

that evidence before the House of which the person complained of is a Member or officer.'

**MR. SPEAKER :** I have already announced that the decision will be given on a later date.

## 3. கவன ஈர்ப்பு.

### திருப்பூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் கதர் நெசவுக்கு வேண்டிய கஞ்சிக்குத் தேவைப்படும் அரிசி கிடைக்காமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. துரைசாமி அவர்கள் 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை உணவுத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

***திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 41-வது விதியின்கீழ் கொண்டுவருகின்ற கவன ஈர்ப்புத் தீர்மானம் சம்பந்தமாக இரண்டொரு கருத்துக்கள் பேச அனுமதிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலில் தீர்மானத்தைப் படியுங்கள்.

**திரு. சு. துரைசாமி :** "திருப்பூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் உள்ள இடுவாய், இடுவம்பாளையம், சின்னாண்டிபாளையம், சொக்கனூர் மற்றும் உள்ள ஊர்களில், கதர் நெசவுத் தொழிலுக்கு இன்றியமையாத அரிசிக் கஞ்சிக்குத் தேவையாகும் அரிசி கடந்த இரண்டு மாதங்களாகக் கிடைக்கப் பெறாமல் அவர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படும் நிலைமையால் பல குடும்பங்கள் இன்னலுற்றிருக்கின்றன என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, திருப்பூர் சர்வோதய சங்கத்தின் ஆதரவில் அப் பகுதியில் 786 தறிகள் செயல்பட்டு வருகின்றன. மேற்படி சங்கத்துடன் இணைந்துள்ள நெசவாளர்களைத் தவிர, திருப்பூர் தாலூகாவில் சுமார் 2,500 தறிகள் தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தறிகளுக்குத் தேவைப்படும் கஞ்சிக்காக திங்கள் ஒன்றிற்குச் சுமார் 68 டன் அரிசி நொய் தேவைப்படுகிறது. சென்னை மாநகருக்கு அடுத்தபடியாக கோயம்புத்தூர் மாவட்டத்திற்குப் புறத்தேயிருந்துதான் பெருமளவில் நெல் ஒதுக்கப்படுகிறது. எனவே, அந்த மாவட்டத்திற்குள்ளேயே கணிசமான அளவில் அரிசி நொய் கிடைக்கக்கூடும். தவிர, கஞ்சி காய்ச்சுவதற்கான அரிசி நொய் கிடைக்கவில்லை என்பது திருப்பூர் தாலூக்காவிற்கு மட்டுமே தனிப்பட உள்ள சிக்கல் அல்ல. ஆனால் நெசவுத் தொழில் நடைபெறும் சேலம், மதுரை, இராமநாதபுரம் ஆகிய பிற மாவட்டங்களிலும் இதே நிலைதான் உள்ளது. அம்மாவட்டங்களிலுள்ள நெசவாளர்கள் உள்ளூரில் கிடைக்கும் நொய்யைக் கொண்டே தங்கள் தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர். அதேபோல, திருப்பூர் பகுதியில் உள்ள நெசவாளர்களும் உள்ளூரில் கிடைக்கும் நொய் இருப்புக்களைக் கொண்டே தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். அம்மாவட்டத்திற்கு நெல் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டு அம்மாவட்டத்திற்குள்ளேயே அரிசி அரைக்கப்படுவதால், அங்கு கிடைக்கும் அரிசி நொய் குறைவாக இருப்பதற்கில்லை. இருப்பினும், உள்ளூரில் அவர்களுக்குப் போதிய அளவில் அரிசி நொய் கிடைக்காமல் தொல்லைப்பட நேர்ந்தால் தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்தோ, அரிசி நொய் கிடைக்கக்கூடிய வேறு மாவட்டத்திலிருந்தோ

குறிப்பிட்ட அளவில் அரிசி நொய்யை எடுத்துச் செல்வதற்கான அனுமதிச் சீட்டைப் பெறுவதற்கு அவர்கள் நெசவாளர் சங்கங்களின் மூலமாக உணவு வழங்கல் ஆணையருக்கு (Civil Supplies Commissioner) விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சு. துரைசாமி அவர்கள் ஒரு கேள்வி கேட்கலாம்.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, நான் இதன் மீது கேள்வி கேட்க விரும்பவில்லை.

## 4. 1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த அலுவல் கோரிக்கைத் தீர்மானங்கள். மூன்று கோரிக்கைத் தீர்மானங்கள் இருக்கின்றன. இன்னும் மூன்று மணி நேரம் இருக்கிறபடியால் ஒவ்வொரு தீர்மானத்திற்கும் ஒரு மணி நேரம் என்று வகுத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். அவைமுன்னவர் அவர்களுடைய கருத்துக்கு உட்பட்டு அவ்வாறு ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் VI என்பதற்கு ஒரு மணி நேரமும், கோரிக்கை எண் VII, VIII இரண்டுக்கும் சேர்த்து 2 மணி நேரமும் எடுத்துக் கொள்ளலாம்.

### கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் பேரவை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலிலே நிதிக் கோரிக்கை எண் VI எடுத்துக் கொள்ளப்படுகிறது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கோரிக்கையைக் கொண்டு வருவார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் பேரவை என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,27,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் பேரவை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 19,27,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, லெஜிஸ்லேடிவ் கவுன்சிலைக் கலைத்துவிடுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்ட—

"கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் போரவை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 19,27,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுப் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, மாநிலச் சட்ட மன்றத்தை (மேல்சபை) கலைக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட—

"கோரிக்கை எண் VX—மாநிலச் சட்டப் பேரவை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 19,27,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.





**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, சட்டசபை அங்கத்தினர்களுக்கு இலவசமாக இரயில்வே பாஸ் கொடுக்காததைப்பற்றி எடுத்துக் கூற—

"கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் பேரவை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 19,27,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்", என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, இதர ராஜ்யங்களில் இருப்பதைப் போல் சட்டசபைக் கூட்டம் நடக்கும்போது அறை வாடகை (Room Rent) வாங்காமலிருக்கும் அவசியத்தை எடுத்துக் கூற—

"கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் பேரவை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 19,27,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, சட்டசபை உறுப்பினர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் பேரவை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 19,27,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, சட்டசபை உறுப்பினர் விடுதியில் சட்டசபை அங்கத்தினர்களுக்குப் போதுமான வசதிகளைச் செய்து கொடுக்காததைப் பற்றி எடுத்துக் கூற—

"கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் பேரவை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 19,27,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்", என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, ஒட்டளித்த மக்கள், சட்டசபையின் நடவடிக்கைகளைக் கவனிக்க முடியாத கட்டிடத்தை மாற்றி நல்ல வசதியான ஒரு கட்டிடத்தைக் கட்டுவதைப் பற்றி எடுத்துக் கூற—

"கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் பேரவை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 19,27,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்", என்ற வெட்டுப் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கொடுக்கும் மாதச் சம்பளத்தை ஸ்காலர்ஷிப் விஷயத்திலும் மருத்துவ விஷயத்திலும் அலவன்சாகப் பாவிப்பது போல் இதர எல்லா விஷயங்களிலும் அலவன்சாகப் பாவிக்க வேண்டியதைப் பற்றிக் கூற—

"கோரிக்கை என்ன VI—மாநிலச் சட்டப் பேரவை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 19,27,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்", என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

***திரு. க. ர. நல்லசிவன் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் வந்திருக்கக் கூடிய இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது வந்திருக்கக் கூடிய சட்டசபை அங்கத்தினர்களிலே பெருவாரியான பேர் புதியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சட்டசபை சம்பந்தமாகவும், நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் பலவேறு விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இதைப் பற்றிய அறிவை எல்லோரும் பெறுவதற்கு ஒரு வழி செய்வது நல்லது. "மசோதா என்றால் என்ன? சட்டசபையின் நடைமுறைகள் என்ன?" என்பது போன்று பலவற்றையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இவை பற்றி அறிந்து கொள்ளும் வகையில் விதிப் புத்தகம் கொடுக்கப்பட்டிருந்தாலும், ஆங்கிலத்தில் உள்ளது. இந்த இலாகா மூலம் இதைப் பற்றிய புத்தகங்கள்

எல்லாம் வழங்கப்பட்டாலும் அவை ஆங்கிலத்திலே இருப்பதால் பலரும் புரிந்துகொள்ள முடியவில்லை. அவை தமிழிலும் இருக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டப் பேரவை விதிகள் தமிழாக்கம் செய்யப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால் என் அறையில் வந்து பார்க்கலாம். அதை முடிப்பதற்குச் இன்னும் கொஞ்சகாலம் பிடிக்கும்.

**திரு. க. ர. நல்லசிவம் :** இது போன்ற நடவடிக்கைகளைப் பற்றி எல்லாம் அங்கத்தினர்கள் நன்றாகப் படித்துக் தெரிந்து கொண்டால் சபாநாயகருக்குக் கூட வேலை குறைவாக இருக்கும். பேச்சுக் கூட குறைவாக இருக்கக் கூடிய அளவுக்கு நடவடிக்கைகளை நடத்த சந்தர்ப்பம் ஏற்படும்.

இன்று, ஏறத்தாழ எல்லா நடவடிக்கைகளும் சரிபாதி தமிழாகவும் சரி ஆங்கிலமாகவும் இருக்கிறது. இங்கிருக்கக் கூடிய யாருக்கும் தமிழ் தெரியாது என்று சொல்ல முடியாது. டாக்டர் ஹாண்டே அவர்கள் மட்டும்தான் (**டாக்டர் எச். வி. ஹண்டே:** தமிழ் தெரியும்)—தெரியாது என்று சொல்ல வரவில்லை—தாய் மொழி வேறாக இருந்தாலும் கூட நம்மைவிட நல்ல முறையில் தமிழைப் புரிந்து கொள்ளும் நிலையில் இருக்கிறார்கள். நடவடிக்கைக் குறிப்புகள் முழுவதும் தமிழில் இருப்பது சிறப்பாக இருக்கும். சட்டசபை நடவடிக்கைகளில் முழுமையாகத் தமிழைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு பெரிய பிரச்சினை. கடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு ஆட்சி மாறி அமைச்சர்கள் மாறியிருக்கிறார்கள். அமைச்சர்கள் சுற்றுப் பயணத்தை எந்த அளவுக்குக் குறைத்துக் கொள்ள முடியுமோ அந்த அளவுக்குக் குறைத்துக் கொள்வது நல்லது. வெள்ளைக்காரன் காலத்திலே அதிகாரிகளும் சரி, ஆள்பவர்களும் சரி, ஜனங்கள் கண்ணுக்கு எட்டாத தூரத்தில் இருந்தார்கள். சுதந்திரம் பெற்றதற்குக் பின்னால் மக்களிடத்தில் தாராளமாகப் பழக வேண்டும். அடிக்கடி பார்க்க வேண்டும், குறைகளை நேரில் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு சுற்றுப் பயணத்தை அதிகமாக மேற்கொண்டார்கள். இன்று நம்முடைய நாட்டை நாமே ஆளுகிறோம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இது சட்டப் பேரவை மானியக் கோரிக்கை. அமைச்சர்கள் பற்றிய மானியக் கோரிக்கை வரும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது பற்றியெல்லாம் பேசலாம்.

**திரு. க. ர. நல்லசிவன் :** சட்டப் பேரவையைப் பொருத்த வரையிலே, மிக முக்கியமாகத் தேவையானது எல்லா நடவடிக்கைகளும் தமிழிலே நடக்க வேண்டுமென்பது தான். இங்கிருக்கக் கூடியவர்களுக்கு இதிலே கருத்து வேறுபாடு இல்லையென்பது என்னுடைய அழுத்தந்திருத்தமான கருத்து. பட்ஜெட் உரை தமிழிலே இருந்தாலும் அது பற்றிய குறிப்புகள் எல்லாம், விவரங்கள் எல்லாம் ஆங்கிலத்திலேதான் இருக்கின்றன. குறிப்பாக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய விவரங்கள் தான் தமிழிலே கொடுக்கப்பட்டது. வருகின்ற வருஷத்தில் இருந்தாவது எல்லாவற்றையும் தமிழிலே கொடுப்பதற்கான முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழிலே வார்த்தைகள் கிடைக்கவில்லை யென்றால் ஆங்கில வார்த்தைகளைக் கூட அப்படியே எடுத்துக் கொண்டு தமிழிலே எழுதலாம். வேறு மொழியிலுள்ள வார்த்தைகளையும் எடுத்துக் கொண்ட காரணத்தால்தான் பல மொழிகள் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. ஆகவே, இந்தச் சட்டசபை முழுக்க முழுக்க தமிழிலே நடக்க வேண்டுமென்று கூறி இந்த மானியத்தின் மீது சொல்லக்கூடிய கருத்து அதுதான் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.





* **திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, இப்போது நாம் எடுத்துக் கொண்டிருக்கிற மானியக் கோரிக்கை ஓரளவுக்கு அரசியல் பிரச்சினைகள் இல்லாமல், நம்முடைய பெரு மதிப்புக்குரிய இந்தமாமன்றத்தினுடைய அலுவல்களைப் பற்றியும், நமக்கு வேண்டிய வசதிகளைப் பற்றியும், உறுப்பினர்களுக்கு என்னன்ன வசதிகளை அதிகமாக்க வேண்டுமென்பதைப் பற்றியும் எடுத்துச் சொல்லுவதற்கு நல்ல வாய்ப்பு அளிக்கிறது. பொதுவாக, இந்த மாமன்றத்தில் ஆளும் கட்சியும் சரி, எதிர்க்கட்சிகளும் சரி, கடந்த காலங்களில் பல மானியக் கோரிக்கைகள் வருகின்ற நேரத்திலே இங்கே புயல் எழுப்பியதுண்டு. தீவிரமான வாதங்கள் ஏற்பட்டதுண்டு.

ஆனால், சட்டப் பேரவை சம்பந்தமான மானியக் கோரிக்கை வருகிற நேரத்தில் ஆளும் கட்சியில் இருந்தவர்களும், எதிர்க்கட்சியில் இருந்தவர்களும் மிகவும் ஆனந்தமாகவும், ஒரு சுமுகமான நிலையிலும் நாட்டிற்காக பணியாற்றுகிற இந்த மாமன்றத்தின் பிரச்சினைகள் பற்றி விவாதிக்கிறோம் என்ற கருத்தோடு விவாதித்து வருகிற ஒரு காட்சியை நாங்கள் கண்டு வந்தோம். முன்பு எதிர்க்கட்சியில் இருந்த நாங்கள் இன்றைய தினம் ஆளும் கட்சிக்கு வந்திருக்கிறோம். எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் இந்த மாமன்றத்தின் பணியினை திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அளவிற்கு கண்ணியத்தோடும் கருத்தோடும் கடைபிடித்து வந்தது என்பதை இந்தியாவில் இருக்கிற எல்லோரும் பாராட்டியிருக்கிறார்கள். அந்த அளவிற்குப்பாராட்டைப் பெறுகிற அளவிற்கு இப்போது எதிர்க்கட்சியாக இருக்கிற காங்கிரஸும் நடந்து கொள்ளும் என்பதில் இந்தத் தரப்பில் இருக்கிற எங்களுக்கெல்லாம் கொஞ்சம்கூட சந்தேகம் கிடையாது. ஆனால் எதிர்க்கட்சியில் இருக்கிற நேரத்தில் பல பல பிரச்சினைகள் கொஞ்சம் போபத்தையும், கொஞ்சம் சூட்டையும் எழுப்பிவிடக் கூடும். நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் பலமுறை பல கஷ்டங்களுக்கு ஆளாயிருக்கிறோம். இருந்தாலும் அவைகளை எல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டிய இடத்தில் எடுத்துச் சொல்லும் முறையில் சொல்லி அவைகளுக்குப் பரிகாரங்கள் கண்டிருக்கிறோம்—நானும் கண்டிருக்கிறேன்—என்பதை இந்தச் சபை நன்கு அறியும். ஆனந்தத்தோடு இம்மாமன்றத்தின் பிரச்சினைகள் பற்றி விவாதிக்க வேண்டிய இந்த நேரத்தில் மிகவும் கட்டுப்பாடோடும், பொறுப்புணர்ச்சியோடும் எதிர்க்கட்சியாக இயங்கப் போகிறோம் என்று சொல்லி வருகிற காங்கிரஸ் நண்பர்கள்—இம்மாமன்றத்தைப் பற்றிய பிரச்சினை, வேறு மானியங்களைப் பற்றிய பிரச்சினை இல்லை—நம் ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கிற சட்டமன்றக் கோரிக்கையைப் பற்றி விவாதிக்கிற நேரத்தில் அவர்கள் இல்லாமல் இருப்பது எனக்கும், இந்தத் தரப்பில் இருப்பவர்களுக்கும் வருத்தத்தைக் கொடுத்தாலும் ஜனநாயகக் கடமையை சரிவர அவர்கள் எதிர்காலத்தில் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையும் ஆசையையும் அதிகமாக்குகிறது.

நம் மாமன்றத்தைப் பொறுத்த வரையில் இந்திய நாட்டிலேயே பலயிடங்களில் சட்டமன்றங்கள், சட்டப் பேரவைகள் எப்படி நடக்கின்றன, எப்படி நடந்திருக்கின்றன என்பதும் தெரியும். கடந்த ஐந்தாண்டுகள் மட்டுமல்ல, அதற்கு முன்னால் இருந்தே ஒரு பத்து ஆண்டுகளாக எங்கள் கட்சி இந்த மன்றத்தில் அடி எடுத்து வைத்த நாளிலிருந்து சபாநாயகர் அவர்கள் எத்தகைய தீர்ப்புகளை வழங்கினாலும் அந்தத் தீர்ப்புகளைப் பற்றி விவாதிப்பதற்கு ரூல்ஸ் கமிட்டி இருக்கிறது என்பதை உணர்ந்த காரணத்தினால் அந்தத் தீர்ப்புகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு மிகவும் நல்லமுறையில் ஜனநாயகம் வளர வேண்டும், அதற்கான பங்கினை நாம் செய்ய வேண்டுமென்ற பொறுப்போடுதான் நாங்கள் நடந்து வந்திருக்கிறோம். இதை நாடு நன்கு அறியும். அப்படி நடந்து வந்த காரணத்தால்தான் முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் கூட தமிழ்நாட்டுச் சட்டமன்றம் உலகிற்கே வழி காட்டக் கூடிய அளவிற்குச் சிறந்ததாக விளங்கி வருகிறது என்று எடுத்துச் சொன்னார்கள். நான் இவ்வளவு தூரம் இதைப் பற்றி எடுத்துச் சொல்லக் காரணம், எதிர்காலத்தில் நம் மாமன்றம் இந்த மாமன்றத்தில் பலதரப்பட்ட கட்சிகள் இருந்தாலும், பலதரப்பட்ட கொள்கைகளைக் கொண்டவர்கள் இருந்தாலும் இந்த மாமன்றத்தின் ஜனநாயகப் பண்பு சிறிதுகூட வழுவாமல் ஜனநாயகத்தைக் காத்து

[திரு. இராம. அரங்கண்ணல்] [1967, ஜூன் 30

வருகிற அளவிற்கு கண்ணியத்தோடும், கட்டுப்பாடோடும் இயங்கவேண்டு மென்ற என் அவாவினை இந்த நேரத்தில் இங்கு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாங்கள் எந்த அளவிற்கு முன்பு எதிர்க்கட்சியாயிருந்த நேரத்தில் பேசியிருக்கிறோம் என்று சொன்னால் சபாநாயகராக இருக்கிறவர்—அவர் கள் விரும்பினால்—எல்லோரும் ஒத்துக்கொண்டால்—அவர்கள் தேர்தலில் போட்டி போடாமல்கூட விட்டு விடுவதற்கும் நாங்கள் தயார் என்று இந்த மன்றத்தில் எடுத்துப் பேசியிருக்கிறோம். கடந்த முறை பிரிவு உபசாரக் கூட்டம் நடந்தபோது அப்போதிருந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்றைய மன்றத் தலைவர்—அவர்களாக இருக்கிற கல்வி அமைச்சர் அவர்கள் அந்த உறுதியை நல்ல முறையில் எடுத்தளித்தார் கள். கட்சி சார்ப்பற்றவராக இயங்கவேண்டுமென்று சொல்கிறீர்கள். சபா நாயகர் அவர்களைப் பற்றி இன்றைய தினம் இருப்பது கட்சி அரசியல். எந்தக் கட்சியிலாவது இருந்துதான் சட்டமன்ற உறுப்பினராக வந்து பிறகு சபாநாயகராக வரவேண்டியிருக்கிறது. அதில்லாமல் ஒரு முறை சபாநாயகராக வந்தவர் மறுபடியும் அவர்கள் தேர்தலுக்கு நிற்க விரும்பி னால் அவருக்குப் போட்டி இல்லாமல்கூட விடுவதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தயாராயிருக்கிறது என்றும் காங்கிரஸ் கட்சி அதற்குத் தயாரா என்றும் அன்றைய தினம் அறைக்கூவல் விடுத்தோம் அதைத் தட்டிக் கழித்துவிட்டார்கள். இந்த மன்றத்தின் சபாநாயகர்களாக இருந்தவர் களுக்குக் கீர்த்தியும் இருக்கிறது. பெருமையும் இருக்கிறது. அவை இரண் டையும் காப்பாற்றுகிற வகையில் அதோடு புது உணர்ச்சியையும் தமிழ் நாட்டில் பரப்புகிற வகையில் இன்றைய தினம் இம்மாமன்றத்தின் தலைவர் அவர்களாக இருக்கும் தாங்கள் பணியாற்றி வருவதை நாங்கள் எல்லோரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில் தாங்கள் தீர்ப்புகள் வழங்குகிற நேரத்திலும், விதிகளில் தாங்கள் காட்டும் அக்கறையைக் காணும் போதும் எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இதே நிலை சுமுகமான அனுபவ உணர்வோடும் நடைபெறவேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க் கிறோம்.

இந்த மன்றத்தைப் பொறுத்த வரையில் இங்கு பணியாற்றுகிற அதி காரிகளையும், அலுவலர்களையும் நாம் பாராட்டித்தான் தீரவேண்டும். நமது சட்டமன்ற அலுவலகத் துறை, சபாநாயகர் அவர்களுக்குக் கட்டுப் பட்ட தனித்துறை என்பது எல்லோருக்கும் தெரியும். இங்கு பணியாற்று கிறவர்கள் எவ்வளவு விழிப்போடும், எவ்வளவு பொறுப்போடும் பணி யாற்ற வேண்டுமோ அந்தளவிற்குப் பணியாற்றி வருகிறார்கள். இதில் சிறிதுகூட ஐயமில்லை எங்களுக்கு. இருக்கிற ஒரே ஒரு குறை, போது மான இடவசதி இல்லாமல் இருந்து கொண்டிருப்பதுதான். நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் எங்களுக்கு ஆனந்தமாக உட்காருவதற்கு நல்ல நல்ல இடங்கள் எல்லாம் இருந்தன. ஆனால் இன்றைய தினம் ஆளும் கட்சியாக வந்த பிறகு இங்கு வந்தால் எங்கு உட்காருவது, எங்கு உட்கார்ந்து யாராவது ஒரு அதிகாரியோடு டெலிபோனில் பேசுவது அதி லும் இரகசியமாகப் பேச வசதியில்லை என்ற ஒரு குறை எங்களுக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு என்ன முயற்சிகள் செய்யப் போகி றோம் என்று புரியவில்லை. ஏனெனில் இடம் போதாதாக இருக்கிறது. நாம் வைத்திருக்கிற லைப்ரரிக்கு இடம் போதாத நிலை இருந்து கொண்டி ருக்கிறது. அங்கு தேவையான புத்தகங்கள், நாம் தேடிப் பிடிக்க விரும்பு கிற புத்தகங்கள் ஓரளவிற்கு இன்றைய தினம் நம் அலுவலகத்தில் வாங்கப்படுகிறது என்றாலும் எதிர்ப்பார்க்கப்படும் அளவிற்கு நாம் போனால் எதையும் பெற்றுவரலாம் என்று கருதுகிற அளவிற்கு நூல்கள் இல்லா மல் இருக்கிறது. அந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, முன்பெல்லாம் சட்டமன்ற அங்கத்தினர்கள் மன்றத்திற்கு வருகிறபோது இங்கு வழங்கப்படுகிற தாள்கள், மற்றும் பல குறிப்பேடு களை எதில் கொண்டு வருவது என்ற சங்கடம் இருந்து கொண்டிருந்தது. ஆனால் இந்தத் தடவை எங்களுக்கெல்லாம் பச்சை வர்ணத்தில் அழகான ஒரு பை வழங்கப்பட்டிருக்கிறது. அதற்காக இத்துறையைப் பாராட்டக்



1967, ஜூன் 30] [திரு. இராம. அரங்கண்ணல்]

கடமைப்பட்டிருக்கிறேன். இத்துறையைப் பொறுத்த வரையில் ஒரு செக்ஷனை அதிகமாக விரிவுபடுத்த வேண்டுமென்ற அபிப்பிராயம் எனக்கு நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. அதுதான் "ரிசர்ச் அண்ட் ரெஃபரன்ஸ் செக்ஷன்" செயலாளர் அவர்களும், அலுவலர்களும் காட்டு கிற ஆர்வத்தை நான் பாராட்டுகிறேன். பத்திரிகைகள் குறிப்புகளை எடுப் பதும், அதே நேரத்தில் ஒரு அங்கத்தினருக்கு ஒரு தகவல் வேண்டு மென்று சொன்னால் உடனடியாக எடுத்துக் கொடுப்பதும் அந்த செக்ஷ னின் கடமையாக இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் சில சமயங்களில் ஒரு தகவலை உடனடியாகப் பெற வசதிக் குறைவு இருந்து கொண்டிருக் கிறது. அதைப் போக்கும் முறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

நீண்ட காலமாக உறுப்பினர்களுக்கு இருந்து வருகிற ஒரு குறை ஏதாவது ஒரு கடிதம் டைப் செய்ய வேண்டும் அல்லது ஆங்கிலத்தில் அல்லது தமிழில் டைப் செய்யவேண்டுமென்றால் அதற்காக யாரை அணுகு வது என்ற சங்கடம் இருந்து கொண்டு வருகிறது. அஸிஸ்டெண்ட் செக்ரடரியைப் பார்ப்பதா அல்லது செக்ரட்ரரியைப் பார்த்து ஒரு கடிதம் டைப் செய்து கொடுங்கள் என்று கேட்பதா என்று தெரியாத நிலை இருக்கிறது. இங்கு வருகிற அங்கத்தினர்கள் எங்கு போய் என்ன செய் வது என்று புரியாத நிலை இருக்கிறது. அதைப் போக்கும் வகையில், அங்கத்தினர்களுக்கு நான் சொன்ன வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு டைப்ரைடிங் தெரிந்த இரண்டு கிளார்க்குகளை நியமித்தால் நன்றாயிருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்து, இங்கிருக்கிற வாச் அண்ட் வார்ட். இவர்கள் குறைகள் பற்றி பல தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவர்களுக்கு வழங்கப்படு கிற "பாட்டா" மிகவும் குறைவாக இருக்கிறது என்ற குறை இருந்து கொண்டிருக்கிறது. சில சமயங்களில் நாம் காலை நேரத்திலும், மாலை நேரத்திலும் மன்றத்தை நடத்துகிறோம். மாலை நேரத்தில் பணியாற்று கிற நேரத்தில் அவர்கள் சாப்பாட்டிற்குச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி ஏற்படும்போது அவர்களுக்கு அதற்கு ஏதாவது பரிகாரமோ அல்லது அதற்கான பாட்டா ஏதாவது வழங்கப்படுகிறதா என்று பார்த்தால் அப்படி வழங்கப்படுவதாகத் தெரியவில்லை. அந்த சிறிய குறையையும் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மொத்தத்தில் நம்முடைய மாமன்றம் நல்ல முறையிலே பணியாற்றிக் மு. ப.
கொண்டு வருகிறது. அதிலே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், நம் 11-00
முடைய மாமன்றத்தினால் நியமிக்கப்பட்டிருக்கிற பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி, எஸ்டிமேட்ஸ் கமிட்டி, அஷ்யூரன்ஸஸ் கமிட்டி, சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டி போன்றவைகள், இந்திய நாட்டிலேயே நம் முடைய மாநிலத்தில் மிகவும் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது என்று சொன்னால் மிகையாகாது. ஒவ்வொரு சப்ஜெக்ட்டிலும், ஒவ்வொரு துறையிலும் இந்தக் கமிட்டிகள் வழங்கியிருக்கிற அறிக்கைகளைப் படித்துப் பார்த்தால், அத்தனை பேர்களும் பாராட்ட வேண்டிய அளவுக்கு நல்ல முறையில் அமைந்திருக்கின்றன. அதற்கான பெருமை அத்தனையும் நம் அலுவலாளர்களையும் கமிட்டி உறுப்பினர்களையும் சாரும். கமிட்டி களினால் வழங்கப்படுகிற கருத்துக்கள் அரசாங்கத்தினால் பரிசீலிக்கப் படாமலும், அவைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படாலும் இருக் கின்றன என்ற புகார் இருந்து வருகிறது. நம்முடைய மாமன்றத்தினால் நியமிக்கப்பட்டிருக்கிற கமிட்டிகள் வழங்குகிற ஆலோசனைகளை, கருத்துக்களை அரசாங்கம் ஏற்றுச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, இது நம்முடைய சொந்த மானியம்; நம்முடைய மாமன்றத்தின் மானியம்—இந்திய நாடும், உலகமே புகழ்ந்து பாராட்டுகிற அருமையான ஒரு சட்ட மன்றத்தைப் பற்றிய மானியம். இந்தச் சட்ட மன்றம் புகழ் பெற்ற சட்ட மன்றம். அந்தப் புகழை அதிகமாக்கும் வகையில் இன்றையதினம் ஆளும் கட்சியாகிய நாமும் நடந்து வருகிறோம்; எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் நடந்து வருகிறார்கள். சில நேரங்களில் கோபம் ஏற்படலாம் என்றாலும், அந்தக் கோபம் என்றும் நிலைக்காது. அப்படி ஒரு அன்பு வழியை உருவாக்குவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

பாராட்டுக்குரிய அலுவலாளர்களும், மற்றவர்களும் தங்கள் சேவை களைச் செய்ய வேண்டும், உறுப்பினர்களுக்கு இன்னும் வசதிகளைப் பெற்றுத் தரவேண்டும்—இருக்கின்ற குறைகளை உறுப்பினர்கள் எடுத்து விளக்கு வார்கள்—என்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கையை மனப்பூர்வ மாக ஆதரிக்கிறேன்.

**திரு. ம. பொ. சிவஞானம்** : மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தை நான் ஆதரிக்கின்ற நிலையில் சில குறிப்புகளை இந்த மன்றத்தில் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்தப் புதிய மன்றம் அமைந்ததற்குப் பின்னர், மன்ற நட வடிக்கைகள் தமிழிலேயே நடைபெறுகிற முறையும், குறிப்புகள் கொடுக் கிற வழியும் கூடுதலாக நடந்திருப்பதைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக, தங்களையும், திறமையான முறையில்,—நல்ல முறையில் குறிப்புகளைத் தயாரித்துத் தருகிற சட்ட மன்ற அலுவலகச் செயலாளர் களையும், அமைச்சரவையையும் பாராட்டுகிறேன். அதே நேரத்தில், இருக்கக் கூடிய சில குறைகளையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இங்கு இந்த மன்றத்திலே தமிழிலேயே குறிப்புகள் சில தரப் பட்டாலும், இன்னும் பெரும்பாலான குறிப்புகள் ஆங்கிலத்தில்தான் வருகின்றன. குறிப்பாக, மசோதாக்கள் ஆங்கிலத்திலேயே வருகின்றன. இதற்குக் காரணம், செக்ரட்டேரியட் தமிழிலேயே நடைபெறவேண்டுமென்று அரசாங்கம் அறிக்கை வெளியிட்டு, அது நடைமுறைக்கு வராததால், ஒவ்வொரு துறையினாலும் ஆங்கிலத்திலேயே தயாரித்துக் கொடுக்கப் படும் குறிப்புகள் இங்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிலை சட்ட மன்ற அலுவலகத்திற்கு இருப்பதைப் பார்க்கிறேன். இந்தச் சட்ட மன்றம் முழு அளவில் தமிழிலேயே நடைபெறவேண்டுமென்றால் அதற்கு முன்னால் தலைமைச் செயலகத்தில் எல்லாம் தமிழிலேயே நடைபெற வேண்டும். இல்லாவிட்டால், சட்ட மன்றத்தில் பூராவும் தமிழிலேயே நடைபெற வாய்ப்பு இல்லை என்ற நினைப்போடு, நான் முதலமைச்சரையும், அமைச்ச ரவையையும் கேட்டுக்கொள்கிறேன், உடனடியாக, எவ்வளவு விரைவில் முடியுமோ, அவ்வளவு விரைவில்—தலைமைச் செயலகத்தில் நிர்வாகம் தமிழிலேயே நடக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த மன்றத்தில் பண்பாடு, சிறந்த முறையில் கடந்த காலத்தில் காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது. இப்போது ஆளும் கட்சியாக இருக்கக் கூடிய கட்சி, 10 ஆண்டுகளாக எதிர்க்கட்சியாக இருந்த நாளிலும், இம் மன்றத்தின் பண்பாடு, மன்றத்திற்கு வெளியே மக்கள் கடைப் பிடிக்கும் நாகரிகத்திற்கு ஏற்ப இருந்து வந்திருக்கிறது. இன்னமும் அப்படியே இருக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த மன்றத்தில் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட போது ஆங்கிலத்தில் பேசுவது பற்றி ஒரு விளக்கம் தந்தீர்கள். "சட்ட மன்ற நடவடிக்கைகள் முழுவதும் தமிழில் தான் நடக்கும். தமிழ் தெரியாதவர்கள் ஆங்கிலத்தில் பேச அனுமதிக்கப்படுவார்கள்" என்று சொன்னீர்கள். இந்த மன்றத்திலே ஆங்கிலத்தில் பேசுகிற மாண்புமிகு அங்கத்தினர்கள், ஆங்கிலத்திலும் தமிழிலும் விருப்பம் போல விளையாட முடிகிறது. தமிழில் பேச முடியாத வர்கள்தான் ஆங்கிலத்தில் பேசுவது—பாராளு மன்றத்திலும் ஏதேனும் ஒரு மொழியில்தான் பேச அனுமதிக்கப்படுகிறார்கள்—என்ற நடை முறையை வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி இல்லையென்றால் சட்ட மன்றத்தில் நடவடிக்கை மொழி தமிழ்தான் என்ற விதிக்கு மாறாக இருக்கும். தமிழ் தெரிந்தவர்கள் ஆங்கிலத்தில் பேச முயற்சிக்காமல் தாங்களாகவே விட்டு விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லை யென்றால், தலைவராகிய தாங்களே முன்வந்து ஒரு முறையை வகுத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





இங்கே சட்ட மன்ற நடவடிக்கைகளுக்குப் பயன்படும் அளவில் சட்டப் பேரவையின் விதிகள் தமிழில் மொழிபெயர்த்துத் தரப்படும் என்று தாங்களே குறிப்பிட்டீர்கள். அது மாத்திரம் போதாது என்று நான் நினைக்கிறேன். அதோடு, "மேஸ் பார்லிமெண்ட்டரி புராக்டீஸ்" என்ற அந்தப் புத்தகம் தான் நம்முடைய சட்டப் பேரவை விதிகளை விட அதிகப்படியான அளவுக்கு மரபுகளை நிர்ணயிக்கும் வேதப் புத்தகம் போல ஆகிவிட்டது. அதனையும் தமிழில் மொழிபெயர்த்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அது ஒன்றும் பல வால்யூம்களைக் கொண்டது அல்ல—ஒரே வால்யூம் தான். "தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம்" என்ற புத்தக வெளியீட்டு நிலையம் அரசாங்க உதவியுடன் ஜெனரல் புக்ஸ் என்று சொல்லப்படுகிற பொதுஅறிவு நூல்களை வெளி யிட்டு வருகிறது. அவர்களிடம் சொன்னாலும், இதைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டுத் தந்துவிடுவார்கள். அதுவும் தமிழில் வந்தால் தான் சட்டம் மன்ற நடவடிக்கைகளை முழு அளவில் தமிழில் நடத்துவதில் சட்டப் பேரவை விதிகளோடு துணையாக இருக்கும். சட்டப் பேரவை விதிகள் புத்தகம் எவ்வளவு அவசியமோ, அதே அளவுக்கு மேஸ் பார்லி மெண்ட்டரி ப்ராக்டீஸ் புத்தகமும் தமிழில் வந்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றும் வேண்டும், பண்பாட்டில் நம்பிக்கை உள்ளவர்களுக்கு, என்னதான் அரசியல் சட்டத்தில் மரபுகள் இருந்தாலும், மேஸ் பார்லி மெண்டரி ப்ராக்டீஸில் மரபுகள் இருந்தாலும், நாமாக புதிய மரபுகளை நிர்மாணிக்கும் முறையில் மேஸ் பார்லிமெண்ட்டரி ப்ராக்டீஸ் ஓரளவுக்குத் தடையாக இருக்கிறது என்பது என்னுடைய நம்பிக்கை. கூடுமான வரை யில் அதைத் தாங்களும் மாமன்ற உறுப்பினர்களும் கூட ஒரு அளவோடு உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பது என் விருப்பம். அந்தப் புத்தகம் நமக்கென மரபுகளை வளர்ப்பதற்குத் தடையாகவும் இருக்கிறது. இதற்கு ஒரு சான்று சொன்னால், அது தவறாக இருக்காது என்று நினைக்கிறேன். அது தவறு என்று எடுத்துக் காட்டினால், அதை விட்டு விடத் தயாராக இருக்கிறேன். இந்த மன்றத்தில் ஒரு முறை ஒரு தீர்ப்பு வழங்கப் பட்டது. "குறட்டை விட்டுத் தூங்கலாமா ?" என்று எழுந்தது வினா. "தூங்கலாம். ஆனால், குறட்டை விடக் கூடாது" என்று தீர்ப்புக் கொடுத்தார்கள். சான்றாக, மேஸ் பார்லிமெண்டரி ப்ராக் டீஸைக் குறிப்புட்டுக் கூறியிருக்கிறார்கள். இங்கிலாந்திலே இரவில் பாராளு மன்றத்தை நடத்துகிறார்கள். ஆகையால், அங்கு தூங்குவது சகஜம். ஆனால், குறட்டை விட்டுத் தொல்லை கொடுக்கவேண்டாமென்ற சூழ் நிலையில் அந்தத் தீர்ப்பு அங்கு ஏற்பட்டது. நாம் இங்கே பகலிலே நடவடிக்கைகளை நடத்துகிறோம் ; அதுவும் காலை நேரத்தில் நடத்து கிறோம். இங்கு அதை அப்படியே பின்பற்ற வேண்டியதில்லை. மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டீஸ் என்பது அந்த நாட்டுப் பழக்கம். நம் பழக்கத்திற்கு ஒத்து வருகிறதா என்று பார்க்க வேண்டும். அரசியல் சட்டம் அதனைப் பயன்படுத்த அனுமதித்தாலும் கூடுமான வரையில் அதைக் குறைவாக உபயோகப்படுத்தி, நம்முடைய சொந்த மரபுகளை ஏற்படுத்திக் கொள்ள அந்தப் புத்தகம் தடையாக இருக்க அனுமதிக்கக் கூடாது என்பது எனது வேண்டுகோள்.

முன்பு இருந்த மன்றத்தைவிட, இந்த மன்றத்தில் அதிக அளவில் தமிழை உபயோகித்து, அந்தத் தமிழும் நல்ல தமிழாக வழங்கத் தாங்களும், தங்கள் செயலாளரும், அமைச்சரவையும் ஏற்பாடு செய்து வருவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

கடைசியாகத் திரும்ப நான் வலியுறுத்துவது, தலைமைச் செயலக நிர்வாகம் முழு அளவில் தமிழில் நடந்தாலொழிய, மன்றத்தில் குறிப்புக ளெல்லாம் தமிழில் வராது. ஆங்கிலம் தெரியாதவர்கள் ஆங்கிலத்தில் நடைபெறும் விவாதத்தினால் பயன் பெற முடியாது. இப்போது அண்மை யில் ஒரு விவாதம் நடந்தது. பேரவை விதிகளை, பார்லிமெண்டரி ப்ரொஸீஜரை எடுத்துச் சொல்லும்போது நூற்றுக்கு நூறு பின்பற்ற

பத்திரிகையில் பார்த்தேன். இன்னும் கொஞ்சம் ரேட்டைக் கூடுதலாக்கி அரசாங்கமே அந்த உணவு விடுதியை நடத்தலாம். இப்பொழுது ஹாஸ்டலில் இருக்கக்கூடிய உணவு விடுதியை அரசாங்கத்தின் மேற்பார்வையிலேயே நடத்தவேண்டும். அப்பொழுது தான் உறுப்பினர்களுக்கு நல்ல முறையில் உணவு கிடைக்கும். நல்ல வேளையாக இப்பொழுது சட்டமன்ற விடுதியில் இருக்கக்கூடிய உணவு விடுதிக்குப் பக்கத்திலேயே ஒரு ஆஸ்பத்திரியையும் அமைத்திருக்கிறார்கள். இந்த உணவு விடுதியில் சாப்பிடுகிறவர்கள் இந்த ஆஸ்பத்திரிக்குப் போய் உடனே ஏதாவது மருந்து சாப்பிடவேண்டிய நிலைதான் இருக்கிறது. கனம் சபாநாயகர் அவர்களே, நான் சொல்வதில் தங்களுக்கு ஏதாவது .. .. ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா-விடை நேரத்தில் எப்படிப்பட்ட கேள்விகள் கேட்கக்கூடாது என்று 16 விதமான தடைகள் இருக்கின்றன. விவாத நேரத்தில் அப்படி தடைகள் கிடையா. ஆதலால், உறுப்பினர் அவர்கள் தாராளமாகப் பேசமுடியும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** ஆகவே, இந்த உணவு விடுதியை நல்ல முறையில் சீரமைக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடுதான் நான் இந்தக் கருத்தைச் சொன்னேன்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாஸ்கள் வழங்கப்படுவதுபோல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழகம் முழுவதும் போய்வருவதற்கு ரயில்வே பாஸ்கள் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இல்லாவிட்டால், மோட்டார் டிரான்ஸ்போர்ட்டை அரசாங்கம் வைத்திருக்கிறது. பஸ்களிலாவது போய் வருவதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாஸ்கள் வழங்கப்படவேண்டும். அப்பொழுதிருந்த அமைச்சரவையைக் கேட்டதற்கு இது உறுப்பினர்களுக்கு சங்கடம் விளைவிக்கும். ஆகவே கூடாது என்று சொன்னார்கள். இந்த அமைச்சரவை அப்படி கருதக்கூடாது. ஏதாவது ஒரு வகையில் உறுப்பினர்களுக்கு பாஸ் வழங்கவேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

லைப்ரரியைப் பற்றி எனக்கு முன்பு பேசிய பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். தமிழரசுக்கழகத் தலைவர் எனக்கு முன்பு பேசும்பொழுது சாத்தியப்பட்டவரையில் லைப்ரரியில் இருக்கக்கூடிய நூல்களையெல்லாம் தமிழில் மொழிபெயர்க்கவேண்டும் என்று சொன்னார். லைப்ரரியில் ஆங்கிலத்தில் நிறைய புத்தகங்கள் இருக்கின்றன. அவை நல்ல பயனுள்ள புத்தகங்கள். முடிந்தவரையில் அவைகளை தமிழிலேயே மொழிபெயர்த்து எல்லா அங்கத்தினர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கேள்வி நேரம் இந்த மன்றத்தில் ஒரு பொன்னான நேரம். அந்த நேரத்தை அனாவசியமாக வளர்த்தாமல், எவ்வளவு சுருக்கமாகவும், எவ்வளவு தெளிவாகவும் கேட்கமுடியுமோ, அப்படி கேட்கவேண்டும் என்ற ஒரு நிலைமையை தாங்கள்தான் அனுசரிக்கும்படிச் செய்யவேண்டும். குறிப்பாக அவைத் தலைவர்தான் இதை அங்கத்தினர்களுக்கு நல்ல முறையில் சுட்டிக்காட்டி, அந்த நேரத்தை வீணாக்காமல், இன்னும் கொஞ்சம் நல்ல முறையில் அங்கத்தினர்களுக்கு இந்த நேரத்தை விரிவுபடுத்திக்கொடுக்கவேண்டும். எப்படியென்றால், இந்தக் கேள்விகள் கேட்கும்போது, உறுப்பினர்களைத் தாங்கள் அவர்களுடைய பெயரோடு, இனிஷியலை மட்டும் குறிப்பிட்டுச் சொன்னால் போதுமானது. அவர்களுடைய தொகுதியைச் குறிப்பிடுவது அவசியம் இல்லை. காலதாமதத்தை தவிர்க்க வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தொகுதியைச் சொல்வது ஏன் என்றால், ஒரே பெயரில் இரண்டு மூன்று உறுப்பினர்கள் இருக்கும் போது அது தேவையாக இருக்கிறது. கோவிந்தராசன் என்றால், நெல்லிக்குப்பம் கோவிந்தராசன், புரசைவாக்கம் கோவிந்தராசன், மதுரை





கோவிந்தராசன், கோவை கோவிந்தராசன் என்று ஒரே பெயருள்ள உறுப்பினர்கள் இருக்கும்போது, தொகுதியைக் குறிப்பிட வேண்டிய நிலை ஏற்படுகிறது. பெயர்களையே சொல்லாமல் தொகுதியை மட்டும் சொல்லி உறுப்பினர்களைக் குறிப்பிடவேண்டும் என்பது இங்கிலாந்து பாராளுமன்ற மரபு. நம் நாட்டில் சில நேரங்களில் தொகுதியைச் சொல்லவேண்டிய அவசியம் இருக்கிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மரபு அப்படித்தான், சம்பிரதாயம் அதுதான். நேரம் வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். பெயர்களோடு, இனிஷியல் சேர்த்துக் கூப்பிட்டால் அதிக நேரம் பிடிக்கும் என்று சொல்லுகிறேன். காலதாமதம் இல்லாமல் இருக்கவேண்டும் என்பதற்காக அதைத் தங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும், சட்டப் பேரவைத் நடக்கும் காலங்களில் சட்டமன்ற விடுதியில் தங்குவதற்கு போதுமான இடம் இல்லை. அதேநேரத்தில் சட்டமன்றம் நடக்கும் காலத்தில் உறுப்பினர்கள் தங்குவதற்கு இனாமாகவே தங்குவதற்கு இடம் கொடுக்கலாம். இந்த வாடகையாக வாங்கப்படும் ரூ. 2½ வந்து இந்த சர்க்காருக்கு பிரமாதமான பிரயோசனம் வரப்போவதில்லை. 200 கோடி ரூபாய் அளவில் இருக்கும் பட்ஜட்டில், அங்கத்தினர்களுக்கு இந்தச் சலுகை கொடுப்பதால் எந்தப் பெரிய நஷ்டமும் வந்துவிடாது. ஆகவே, இந்தச் சலுகை கொடுப்பது பற்றி அரசாங்கம் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எவ்வளவோ இனங்களில் செலவழிக்கும் அரசாங்கத்திற்கு இந்தச் சிறிய செலவு அதிகம் இல்லை. ஆகவே சட்டமன்றம் நடக்கும் காலத்தில் மட்டும் உறுப்பினர்களுக்கு இந்த விடுதியில் தங்க இனாமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மற்ற சமயங்களில் தங்குவதானால், அதற்கு வாடகை வாங்கலாம், என்பதைக் கூறிக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

***ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத் துறை மானியத்தின்மீது கருத்துக்களைக்கூற வாய்ப்பு அளித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நம்முடைய தமிழக சட்டமன்ற நடவடிக்கைகளெல்லாம் பெரும்பாலும் தமிழிலேயே நடைபெறுவது பாராட்டத் தக்கதாகும். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் கூறியதுபோல, மசோதாக்கள் ஆங்கிலத்தில் அச்சடித்து வருவதால், ஆங்கிலத்தில் திறமை குறைவாக உள்ள உறுப்பினர்கள் மசோதாவிற்குள்ளே இருக்கும் பல உண்மைகளை ஆராய்ந்து, தெளிந்து பேசும் நிலை முடங்கியிருக்கிறது. திரு. ம. பொ. சி. அவர்கள் குறிப்பிட்டதுபோல, முடக்கப்பட்டு இருக்கிற நிலைதான் உண்டாகிறது. நம் இன்பத் தமிழ் மொழி, தரணியாண்ட மொழி ; ஆகவே, நம்முடைய தமிழ் மொழியிலேயே எல்லா மசோதாக்களையும் கொடுக்கும் நிலை சீக்கிரமே ஏற்பட்டால், சட்டமன்றத்திலே எல்லா உறுப்பினர்களும் பங்குபெறும் வாய்ப்பும், மசோதாக்களின் உள்ளே இருக்கும் பல உண்மைகளை, நன்மைகளைத் தெரிந்து தெளிந்து பேசுவதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கேரள மாநிலத்திலே, அங்கேயிருக்கின்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு, ஒரு சலுகை யிருக்கிறது. கேரள மாநில அரசினர் தங்களுடைய போக்குவரத்துச் சாதனங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் இலவசமாக சென்றுவருவதற்கு பாஸ் கொடுத்திருக்கிறார்கள். எப்படி நடாளு மன்ற உறுப்பினர்களுக்கு, இந்தியாவெங்கிலும் சென்றுவர ரெயில்வே பாஸ் கொடுத்திருக்கிறார்களோ, அதே போன்று கேரள மாநில சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்க பஸ் போக்குவரத்திலே இலவசமாக போய் வர பாஸ் கொடுத்திருக்கிறார்கள். அதே போன்று தமிழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுப்பதால், அவர்கள் தன்னுடைய தொகுதி மட்டுமல்ல, மாநிலமெங்கும் பரந்த அளவில் பல்வேறு இடங்களுக்கும் சென்று உண்மை நிலைகளைக் கண்டு மாநிலத்தின் நன்மைகளை உத்தேசி

சித்து நடக்கக் கூடிய வகையில், சட்டமன்றத்தில் செயல்படுவார்கள். அந்த நிலைகளை உருவாக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு படுத்துகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, என்றைக்கு இங்கே தமிழகம் என்று போர்டு மாட்டப்பட்டதோ, அன்றையலிருந்தே எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே நடக்கும் முறையைக் கொண்டு வரவேண்டும். ஆனால், உடனே எல்லா நடவடிக்கைகளையும் தமிழிலேயே கொண்டுவருவது எந்த அளவுக்குத் சாத்தியம் என்பதைப் பார்க்கும்போது, அப்படிக் கொண்டுவருவது சாத்தியமாக இருக்காது என்பதை உணர்ந்து கொள்ளும் அதே நேரத்தில் அதில் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதேபோன்று பில்கள் வரும் நேரத்தில், அந்த நேரத்தில் மாத்திரம் கொடுப்பதன் காரணமாக, அவற்றை உடனுக்குடன் படித்து, அதற்கான திருத்தங்களைக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம். ஆகவே, தயவு செய்து குறைந்தபட்சம் மூன்று தினங்களுக்கு முன்னால் படிக்கும் அளவிற்கு ஒரு நிலையை உண்டாக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அதேபோன்று, பில்கள் மீது அமெண்ட்மெண்ட்ஸ், திருத்தங்கள் கொடுக்க, பில்களைப் படித்து, உடனுக்குடன் கொடுக்கக் கூடிய நிலைமையை உண்டு பண்ண வேண்டும், அப்படிக் கொடிக்கப்படும் திருத்தங்களை உறுப்பினர் கொடுத்தவுடனே, உடனுக்குடன் பிரதிகள் எடுத்து எல்லா உறுப்பினர்களுக்கும் கிடைக்கச் செய்யும் நிலைமையும் இருக்கவேண்டும். ஏனென்றால், அந்தத் திருத்தங்களை மன்ற அங்கத்தினர்கள் படித்து, தெளிவுபெற்று, அவர்களும், ஒன்றுபட்ட முடிவுக்கு வர அது உதவியாக இருக்கும் என்கிற அடிப்படையில் அதைச் சொல்லுகிறேன்.

கேள்வி நேரத்தில் எல்லா அமைச்சர்களும் வரவேண்டும் என்பது இல்லாமல், வாரத்தில் இரண்டு, அல்லது மூன்று குறிப்பிட்ட பிரிவுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் மட்டும் வந்து பதிலளிக்கும் முறையைச் செயல்படுத்தலாம். அந்தத் தன்மையில் வாரத்திற்கு ஒரு முறை ஒவ்வொரு அமைச்சரும் பதில் தருவார்கள் என்று ஏற்படுத்தி, அந்த விடைத்தாள்களையும் அங்கத்தினர்களுக்கு கொடுத்துவிட்டால், அவற்றை முன்கூட்டியே படித்துவிட்டு, உப கேள்விகள் கேட்க உதவியாக இருக்கும் என்கிற அடிப்படையில் அமையவேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்கிறேன்.

அதேபோன்று கட் மோஷன்களைக் கொடுக்கின்றோம். கட்மோஷன்கள் மீது பலதரப்பட்ட அதிகாரிகளிடமிருந்து பல தகவல்களை சேகரிக்கிறார்கள். அந்தத் தகவல்களை அங்கத்தினர்களுக்குக் கொடுப்பதன் மூலமாக, உதவியளிக்க வேண்டும், அவற்றை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். இந்த நேரத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர்களை நேரம் போய்ப் பார்ப்பது, அவர்கள் அறையில் பார்ப்பது என்பது லேசில்லை ; முடியவில்லை. கூட்டம் பார்த்து, கும்பலைச் சேர்த்துக்கொண்டு, ஒரு சிலர் இருக்கிற காரணத்தால், ரகஸ்யமான விஷயங்களைக் கூட அவர்கள் முன்னிலையிலேயே பேச வேண்டிய நிலைதான் ஏற்படுகிறது. ஆகவே அமைச்சர்களுடன் அங்கத்தினர்கள் ஏதாவது பேசவேண்டும் என்றால், முதலில் அவர்களுக்கு அனுமதி இருக்க வேண்டும், வசதியிருக்க வேண்டும் அப்படிப்பட்ட தன்மைகளை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட நிலைமைகளை ஒழுங்குபடுத்தவும் செழுமைப்படுத்தவும் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். வாரத்தில் ஒரு முறை அரை தினமாவது, ப்ரைவேட் அங்கத்தினர்களுடைய காரியங்களை சபையில் கொண்டுவரக்கூடிய நிலைமை இருக்கவேண்டும். பல பிரச்சினைகள் விவாதிக்க வேண்டியிருக்கிறது. கேள்விகளுக்குப் பதில் அளிப்பது சரியாக





இல்லாத நேரத்தில் அவ்வப்பொழுது விவரமாக விவாதிக்க அனுமதித்தால் மிகப் பெரும் அளவில் உதவியாக இருக்கும். அந்த எண்ணத்தில் தான் கேள்வி நேரத்தில் இன்று கனம் அமைச்சர் கொடுத்த பதில் சரியில்லை காரணத்திற்காக மதிப்பிற்குரிய அங்கத்தினர் ஒரு காரியத் கிளப்பினார்கள். * * * *
அங்கத்தினர்களுடைய உரிமை பாதிக்கப்படாமல், நியாயமான உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதே அந்த பிரச்சினையைக் கிளப்பியதன் காரணம். அமைச்சர் பதில் கொடுக்கும் நேரத்தில், தயவு செய்து விளக்க வேண்டும், அங்கத்தினர்களுடைய உரிமைகளும் பாதுகாக்கப்படும், அப்படிப்பட்ட தன்மைகள் இருக்கும் என்பது பற்றி, அமைச்சர்களுடைய கவுரவம், உரிமை பாதுகாக்கப்படும் என்பதுபோலவே, அதேபோன்று அங்கத்தினர்களுடைய உரிமைகளையும் பாதுகாக்க வழிவகை இருக்கவேண்டும். என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர்கள், எந்தக் காரியத்தைக் குறித்தும் பேச இடமுண்டு, ஆனால் அதற்கு உரிய நேரத்தில் பேச வேண்டும் ; நடைமுறைக் கேள்வி எழுப்புவது என்றால், அந்தக் கேள்வியை எழுப்ப வேண்டிய நேரத்தில் எழுப்ப வேண்டும், அதேபோல, அவையுரிமைக் கேள்வி என்றால், அதை எழுப்ப வேண்டிய நேரத்தில் எழுப்ப வேண்டும். ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்றால், அதற்குரிய நேரத்தில் கொண்டு வர வேண்டும். வினாக்கள் நேரத்தில் துணை வினாக்களைக் கேட்கலாம். விதி 41-ன் கீழ், கவன ஈர்ப்புத் தீர்மானம் என்றால் அதையும் அதற்குறிய நேரத்தில் கொண்டு வர வேண்டும். காலந்தெறிந்து பேசினால், எல்லாகருத்துக்களையும் கூறமுடியும்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கனம் உறுப்பினரவர்கள் யார் தவறு செய்தாலும் தண்டிக்கப்படுவார்களா என்று கேட்டதற்கு நான் பி. ப. 11–30
வேடிக்கையாகச் சொன்னேனே தவிர, உறுப்பினர் அவர்களை கௌரவக் குறையவாகக் கூறவேண்டுமென்ற கருத்தில் இல்லை என்பதைச் சொல்லி கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் அமைச்சரவர்கள் நகைச்சுவைக்காக அப்படிச் சொல்லியிருப்பார் என்று கருதுகிறேன். எனினும் பிற்காலத்தில் அதைப்படிக்கின்றவர்களுக்கு அது நல்லமுறையில் அமைந்திருக்காது. எனவே அதை நீக்கிவிடுவது நல்லது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தக் கருத்துத் தெரிவிக்கப்பட்ட பகுதியை நமது பேரவை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கிவிட வேண்டும். என்று கட்டளை இடுகிறேன். நீக்கிவிடும்போது பேரவைக் குறிப்புகளில் மட்டுமல்லாமல் பத்திரிகைகளிலும் அது வரக் கூடாதென்று நினைவுப்படுத்துகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், அடுத்து அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணதிட்டத்தைத் தயார் செய்யும்பொழுது அதை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்குக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். காரணம் ஒவ்வொரு மாதத்திலும் முதல் வாரத்தில் அதிகாரிகளுக்கு வேலையிருக்கும். கடைசி வாரத்தில் அந்த அதிகாரிகளுக்கு அலுவலகத்திலே வேலை இருக்கும். இதற்கிடையிலே சுற்றுப் பிரயாணம் போவதாகயிருந்தாலும், இந்த இடையிலுள்ள இரண்டு வாரங்களில் வைத்துக்கொள்வது மிகவும் நல்லதாகயிருக்கும், என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அது மாத்திரம் அல்ல. அவ்வாறு செல்லும்பொழுதும் மிகமுக்கியம் வாய்ந்த காரியங்களுக்கு மட்டுமே போவது விரும்பக் கூடிய தன்மையிலே உள்ளது என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். காரணம், ஹோட்டல்களைத் திறப்பதற்கும், மற்ற திறப்பு விழாக்களுக்கும் போவது சரியல்ல என்ற காரணத்திற்காக அதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படு

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

அமைக்கப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல், அங்கே தட்டெழுத்துப் பொறியொன்றும், கிளார்க் வசதியும் செய்து கொடுத்தாலும், மிகப் பெரிய அளவிற்கு உதவி செய்ததுபோல் ஆகும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. டி. எஸ். ஆதிமூலம்:** மிஸ்டர் ஸ்பீக்கர், ஸார், இந்த மானிய கோரிக்கை பற்றிய விவாதத்தில் பேசும்போது, மெம்பர்களுடைய கஷ்டத்தைக் குறித்து இரண்டொரு முக்கியமான கருத்துக்களை நான் இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

சட்டசபை மெம்பர்கள் என்னும்போது, அவர்கள் செய்யக்கூடிய வேலை மிகவும் பொறுப்பான வேலையாக இருக்கிறது. அதுவும், இப்போது மந்திரிகளுக்கு எவ்வளவு மனுக்கள் வருகின்றனவோ, அவற்றில் பாதி அளவிற்கேனும் மெம்பர்களுக்கும் மனுக்கள் வருகின்றன என்று சொல்லலாம். இப்படிப் பல காரியங்கள் இருக்கின்றன. புருஷன்-பெண்ஜாதி தகராறு, புருஷன் இரண்டாவது கலியாணம் பண்ணி மனைவியைத் தள்ளிவைத்த தகராறு, காதல்பண்ணி, நான்கைந்து மாதங்களாக ஒரு மாதிரி இருக்கிறேன், எங்களைச் சேர்த்து வைக்கவேண்டும், என்று இப்படி பல தகவல்கள், என்னிடம் ஒரு அரை டசன் இருக்கின்றன. இது வேடிக்கையாக இருக்கிறதென்றாலும், உண்மையிலேயே அப்படி ஆறு விவகாரங்கள் இருக்கின்றன.

இப்படிப்பட்ட விவகாரங்கள் மட்டுமல்ல; பிரச்சினைகளும் எவ்வளவோ இருக்கின்றன. சென்னைக்கு வந்து சேர்ந்தால், "திடீரென்று என்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள், அந்த ஆபீசிற்குப் போய் நீங்கள் அது பற்றி விசாரித்துவிட்டு வரவேண்டும்; ப்ரைமரி ஹெல்த் சென்டர் வேண்டும். ரூரல் டிஸ்பென்ஸரி வேண்டும், லிஸ்டிலிருந்து பெயரை எடுத்துவிட்டார்கள், டி.எம்.எஸ். ஆபீசில் போய்ப் பார்க்கவேண்டும்" என்று இப்படி பலவிதமான பெட்டிஷன்கள் மெம்பர்களாகிய எங்களுடைய கவனத்திற்கு வருகின்றன. ஆகவே, நாங்கள் இங்கே வந்து, சட்டசபை வேலைகளைக் கவனித்துவிட்டு, அதற்குப் பிறகு, அந்த ஆபீஸ்களுக்கெல்லாம் போய் கொஞ்சம் வேட்டையாட வேண்டியிருக்கிறது. அப்படி வேட்டையாட வேண்டிய நிலையில், எங்களுக்கு இருக்கும் குறைந்த நேரத்தில், நாங்கள் டாக்ஸிகளைப் பிடித்துதான் போகவேண்டியிருக்கிறது. டாக்ஸி கட்டணமோ முன்னைவிட அதிகமாகிவிட்டிருக்கிறது. டாக்ஸியில் போகும்போது மீட்டரிலேயே கண் போக வேண்டியிருக்கிறது. கனம் நண்பர் திரு. பழனிவேல் ராஜன் போன்றவர்களுக்குச் சொந்த வண்டி உள்ளதுபோல் அல்ல நாங்களெல்லாம். ஆகையால், இதற்கெல்லாம் ரொம்பப் பணம் தேவைப்படுகிறது. டெல்லிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ராஜ்ய சட்டசபை மெம்பர்களுக்கும் சம்பளத்தில் ஏற்றதாழ்வு இருக்கிறது. மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் எப்படி சம்பள விகிதத்திலும், தினசரி படி விகிதத்திலும், "டிஸ்பாரிடி" இருக்கிறதோ, ஏற்றத்தாழ்வு இருக்கிறதோ, அதே போலத்தான் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ராஜ்ய சட்டசபை உறுப்பினர்களுக்கும் சம்பளம், தினசரி பாட்டா இவற்றில் ஏற்றத்தாழ்வு அதிகமாக இருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தினசரி பாட்டா ரூ. 31 என்றும், சம்பளம் மாதம் ரூ. 500 என்றும் இருக்கிறது. சம்பளத்தைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு மாதம் ரூ. 500 என்று இருந்தாலும், நமக்கு ரூ. 250 இருந்தால் போதும். இதிலே கைவைக்காமல் இருக்கவேண்டும் என்று தான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ரேஸ் குதிரை மாதிரி, சர்க்கார் கட்சியும், எதிர்க்கட்சியும் "டாஷ்" பண்ணும்பொது, இதிலே வந்து "சாலஞ்ச்" பண்ணி இதைப் பெரிய சமாசாரமாக எடுத்துக்கொள்ளவேண்டாம் என்று நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சம்பளம் அப்படியே இருக்கட்டும். டெய்லி அலவன்ஸைப் பொறுத்த வரையில், அதைச் சும்மா தைரியமாக "ரூ. 25" என்று போட்டுவிட வேண்டும். இல்லையென்றால், கட்டுபடியாகாது. சாப்பாட்டுக் கடைக்கு இரண்டு, மூன்று நண்பர்களை அழைத்துக்கொண்டு போனேன். அவர்களும் என்னென்னவோ ஆர்டர் பண்ணினார்கள். பில் வந்தது. பில்லைப் பார்த்தால்





"ரூ. 27" என்று இருந்தது. இப்படி கிட்டதட்ட இரண்டு நாள் பாட்டா அளவிற்கு வந்துவிடுகிறது. சுதந்திரா பார்ட்டியில் நான் இருக்கிறேன். என்றாலும், பல பேர்களைப்போல் அஜாக்கிரதையாகச் செலவழிக்கவேண்டும் என்ற அபிப்பிராயம் இல்லை. ஆனால், சட்டசபை வேலையை உருப்படியாக செய்வதற்கு சட்டசபை மெம்பர்களுக்குத் தகுந்த வசதியைச் செய்து கொடுப்பதில் எந்த அரசாங்கமும் தயங்கவேண்டியதில்லை. ஆகவே, "டெய்லி அலவன்ஸ்" என்பதை 25 ரூபாயாக ஆக்கிக்கொள்ளவேண்டும் என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகின்றேன். ஆனால், நான் இதைச் சொல்லும்போது, இதை எங்களுடைய பார்ட்டியினுடைய ஒரு கொள்கை என்ற முறையில் நான் சொல்லவில்லை, சொந்தக் கஷ்டம் என்ற முறையில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, ஹாஸ்டல் வசதியைப் பற்றிப் பொதுவாகச் சொல்லுகிறேன். ஹாஸ்டலிலே ஒரு வசதியும் கிடையாது. காலையில் எழுந்ததும் காபி அவசரமாக வாங்கிச் சாப்பிட்டால்தான் பாத் ரூமுக்குப் போக முடியும். அப்படிச் சில பழக்க வழக்கங்கள். காபி வாங்கிவரச் சொல்லலாம் என்று ப்யூனைப் பார்த்தால் கண்ணுக்குப் ப்யூன்கள் தென்படுவதில்லை. "பக்ஷீஸ்" ஒழுங்காகக் கொடுத்தால்தான் தென்படுகிறார்கள். இதற்காகக் "காலிங்பெல்" வைக்கப்பட்டிருந்தால், "பெல்" சப்தம் கேட்டு யாராவது பியூன் வரக்கூடும். ஆனால், "காலிங் பெல் அரேஞ்ச்மெண்ட்" கிடையாது. அரசாங்க நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், இந்தியாவிலேயே சென்னை ராஜ்யம் தலைசிறந்து விளங்குகிறது என்ற பெயரைப் பெற்றிருக்கிறது. ஆனால், ஹாஸ்டல் வசதியைப் பொறுத்த வரையில், இந்தியாவிலேயே மிக மட்ட ரகமான ராஜ்யம் ஒன்று உண்டு என்றால், அது நம்முடைய சென்னை ராஜ்யம் என்று சொல்லலாம். மைசூரைப்போய் பாருங்கள். மெம்பர்கள் தங்குவதற்குப் பெரிய "பாலஸ்" மாதிரி கட்டடம் கட்டியிருக்கிறார்கள். நமக்குப் "பாலஸ்" தேவையில்லை. இருக்கிற இடத்திலேயே நல்ல வசதிகள் செய்து கொடுக்கலாம். ஃபோன் அரேஞ்ச்மெண்ட், காலிங் பெல் அரேஞ்ச்மெண்ட் போன்ற இப்படிப்பட்ட வசதிகளையெல்லாம் ஹாஸ்டலில் கணிசமாகச் செய்து தரவேண்டும். அதிலும் முக்கியமாகப் புது ஹாஸ்டலுக்குச் சீக்கிரமாகவே எல்லோரையும் கிளப்பி விட்டுவிட வேண்டும். அது எப்படி இருக்கிறதோ' புறாக் கூடு மாதிரி வெளிப் பார்வைக்குத் தெரிகிறது. ஆனால், இப்போதிருக்கும் ஹாஸ்டலைவிட அது வசதியாக இருக்குமென்றே நினைக்கிறேன். ஆகவே, புது ஹாஸ்டலிலே சீக்கிரமாக எல்லோரையும் குடியேற்றக் கூடிய அளவுக்குத் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஜனநாயகத்திலே சட்டசபை நடவடிக்கைகளைப் பார்ப்பதற்கு மக்களுடைய ஆர்வம் இப்பொழுது நாளாவட்டத்தில் பெருகிக்கொண்டே இருக்கிறது. ஆர்வம் கணக்கு வழக்கு இல்லாமல் இருக்கிறது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். இந்த சட்டசபைக் கட்டடம் பழைய காலத்தில்-வெள்ளைக்காரர்கள் காலத்தில்-லெஜிஸ்லேடிவ் கவுன்சில் நடைபெறுவதற்கு, 75 பேர்களுக்குள்ள ஒரு "ஹால்" என்று நினைக்கிறேன். "விஸிடர்ஸ்"க்கு என்று அப்பொழுது தேவைப்பட்ட அளவிற்கு வசதி செய்யப்பட்டது. ஆனால், இன்றையதினம் உள்ள நிலைக்கு ஏற்றபடி, சட்டசபை நடவடிக்கைகளைப் பார்க்கக்கூடிய பார்வையாளர்களுக்கும் மற்ற மெம்பர்களுக்கும் இந்தச் சட்டசபைக் கட்டடம் ரொம்பவும் வசதிக் குறைவாக இருக்கிறது. கோட்டைக்குள்ளேயே ஒரு நல்ல வசதியான கட்டடம் சட்டசபைக்காக என்று ஏற்படவேண்டும். புதிதாகக் கட்டப்படுகிற சட்டசபைக் கட்டடத்தில் நாமே மெம்பர்களாக இருப்போமா, இல்லையா என்பது அல்ல கேள்வி. நாமே வந்தாலும் வரலாம். அதைப்பற்றிக் கவலை இல்லை. நாமே சாசுவதமாக இருப்போம் என்று நினைத்துக்கொள்ளுவோம். எப்படியும், கோட்டைக்குள்ளேயே நல்ல வசதியுள்ள சட்டசபை ஹால் கட்டப்பட வேண்டும். "சில்ட்ரன் தியேட்டர்" இருக்கிறதே, அங்கே இதை மாற்றக் கூடாது. செக்ரடேரியட் இருக்கும் இடத்தில் சட்டசபை ஹால் இருந்தால்தான் வசதியாக இருக்கும். ஆகவே, சட்டசபை ஹால் நல்ல முறையில் நிர்மாணிக்கப்பட வேண்டும். விஸிடர்ஸ் எல்லோரும் வந்து, உரிமையோடு

வசதியாக இருந்து பார்ப்பதற்கேற்ற மாளிகையாக ஒரு கட்டடம் ஏற்பட வேண்டும். இந்த மந்திரிசபை அதற்கு இப்போதிருந்தே கவனம் எடுத்து, ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேல்சபை என்று இருக்கிறது. அதைப்பற்றி யாரோ முன்னால் பேசினார்கள். மேல்சபை என்பது பல இராஜ்யங்களில் இல்லை என்று தெரிகிறது. ஆகவே நம் இராஜ்யத்திலும் மேல்சபை இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதற்கு இந்த சட்டசபை மூலம் ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதையும் இந்த அமைச்சரவை பரிசீலனை செய்யும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால், டாக்டர் லட்சுமணசாமி முதலியார், திரு. பாலசுப்பிரமணிய அய்யர் போன்ற மேதாவிகளுடைய ஆலோசனைகள் கிடைக்காமல் போய்விடக் கூடாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களை நாமினேஷன் முறையில் வேண்டுமென்றால் கவர்னர் நியமித்துக்கொள்ள வழிவகை செய்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இவைகளைப்பற்றியெல்லாம் அமைச்சரவை பரிசீலனை செய்யும்படியாக நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மந்திரிசபையைக் குறித்தெல்லாம் அடுத்த மானியக் கோரிக்கையில் கொஞ்சம் பேசுகிறேன். எங்களுடைய சுதந்திரா கட்சியைக் கொஞ்சம் நல்ல விதமாக-ரொம்ப அன்பாக-நடத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். எதிர்க்கட்சிக்கு ரொம்ப மரியாதை கொடுக்கவேண்டியது அவசியம்தான். எதிர்க்கட்சிக்கு மரியாதை அளிக்கும்போது, எங்களை—சுதந்திராக் கட்சியை-அன்பாக வைத்துக்கொள்ளும்படியாகக்கேட்டுக்கொள்ளுகிறேன். எங்களுக்கும்--சுதந்திரா கட்சிக்கும்--ஒரு ஆபீஸ் கட்டடம்வேண்டும். ஆபீஸ் கட்டடம் என்று ஏதோ சின்ன இடத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதுரொம்ப வசதிக் குறைவாக இருக்கிறது. சட்டசபை வேலைகளைப் பொறுப்பாக பார்ப்பதற்கும், எங்களுடைய கட்சிக் கூட்டங்களை அடிக்கடி நடத்தி, சர்க்காரோடு எப்படி ஒத்துழைப்பது என்பதை விவாதிப்பதற்கும் கொஞ்சம் வசதியான இடம் தேவையாக இருக்கிறது. அதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். என்னுடைய யோசனைகளையெல்லாம் அரசு பரிசீலிக்க வேண்டும். முக்கியமாக, சட்டசபை மெம்பர்களுக்கு ஹாஸ்டல் வசதியைப் பற்றித் தீவிரமாகப் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு வணக்கத்துடன் உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவை நீடித்த காலமாகவே பெயரும் புகழும் மிகுந்து பலருடைய பாராட்டுதலையும் பெற்று வந்திருக்கிறது என்பதை எண்ணும்போது, நாமெல்லாரும் மிக்க மகிழ்ச்சி அடையவேண்டியவர்களாக இருக்கிறோம். பன்னெடுங்காலமாகவே, நல்ல பண்பாட்டை நிலைநிறுத்துவதிலோ, நல்ல மரபுகளை மேற்கொள்ளுவதிலோ, மற்றவர்களுடைய பாராட்டுதலைப் பெறுவதிலோ வெற்றி கண்டுவந்திருக்கிறது என்று கூறுவோமானால், அது மிகையாகாது. அந்தப் பெயரும் புகழும் தொடர்ந்து நிலவுவதற்கான முறையிலேயே இந்த மன்றம் நடைபெறவேண்டும் என்பதிலே இந்த மன்றத்தில் உள்ள அத்தனை உறுப்பினர்களுக்கும் அக்கறை இருக்கிறது என்பதிலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

அந்த வகையிலே பெயரும் புகழும் பெற்று விளங்கிவருகிற இந்தப் பேரவையில் மானியக்கோரிக்கை விவாதத்திற்கு வருகின்றபோது, முக்கியமான எதிர்கட்சி உறுப்பினர்கள் வெளியேறுகின்ற நிலைமை ஏற்பட்டது உள்ளபடியே மிக்க வருத்தத்தை அளிக்கின்ற ஒன்றாகும். அதற்கான காரண காரிய விளக்கங்கள் எப்படியிருந்தாலும், அந்த நிலைமை ஏற்பட்டதற்கு உள்ளபடியே நான் வருந்துகிறேன். ஒருவர் இந்த அவையிலே இருக்க முடியாத நிலை ஏற்படுகிறது என்று எண்ணுவதற்கே இடமில்லாத வகையில் இந்த மன்றம் தொடர்ந்து நடைபெறவேண்டும் என்பதிலே அத்தனை பேரும் அக்கறை கொள்ளவேண்டும் என்பதை நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதில் மிக்க ஆர்வமும் அக்கறையும் கொண்டிருக்கிறார்கள்.





சட்டசபை மரபைப் போற்றிக் காப்பாற்றுவதில், கடைபிடித்து வருவதில ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்கட்சி உறுப்பினர்களும்—இரு சாரா ரும் ஒழுங்குமுறையைக் கடைபிடித்து வரவேண்டும். வெளியேறுவது என்பது சாதாரணமாக, சட்டத்திற்கு முரண்பட்ட ஒன்று அல்ல. நல்ல மரபாகத்தான் ஜனநாயக நாடுகளிலே இருந்து வருகிறது. அந்த நிலைமை ஏற்பட்டதற்குத் தான் நான் வருந்தினேன். மானியக் கோரிக்கை விவா தத்திற்கு வருகிற நிலையில், இந்த நிலை ஏற்பட்டத்தில் எனக்கு மெத்த வருத்தமே. அந்த வருத்தம் நீடித்த நேரம் இருக்கவில்லை. அதைப் போக்குகின்ற வகையில்தான் எதிர்கட்சி நண்பர்கள் மீண்டும் அவைக்கு வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாக இருக்கிறது. அந்த வகையிலே நான் மிகவும் பெருமைப்படுகிறேன். இந்த மன்றத்தினுடைய உரிமையையும் இந்த மன்றத்தினுடைய மாண்பினையும் கட்டிக் காப்பதில் நம் அனை வருக்கும் அக்கறை இருக்கிறது. அந்த நிலைமை நீடித்து வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இங்கே ஏற்பட்டிருக்கிற மரபின்படி கூடி விவாதிப்பதன் மூலமாக நாம் அவைகளை சீர்செய்துகொள்ள முடியும். அந்த விதி விதிமுறைகளும், மற்றவைகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்த மன்றத்தினுடைய மரபினை முறைகளைக் கட்டிக் காப்பாற்றுவதோடு, இந்த மன்றத்தினுடைய சீரான வழியில் செம்மையாக நடத்திச் யும், புகழையும், பெருமையையும் தங்களுடைய கட்டளைக்குத் தலை செல்வது தங்களிடத்திலே இருக்கிறது. அவையிலுள்ள உறுப்பினர்களின் கடமை. தங்களது வணங்கி ஏற்பது தீர்ப்பைப் பொறுத்தவரையில், எப்படியிருந்தாலும், சபாநாயகருக்குத் தலைவணங்குவது என்ற மரபைத்தான் இந்த மன்றம் கொண்டிருக்கிறது. நாங்கள் எல்லாம் எதிர்க்கட்சியில் இருந்தபோதுகூட, அரசினர் போக்குக்கு தெரிவிக்கும் வெறுப்புக்கு அறிகுறியாக " வெளியேறுகிறோம் " என்றுதான் சொன்னோம்.

சபாநாயகருடைய தீர்ப்புக்குத் தலைவணங்குகிற மரபு எப்போதும் இருக்க வேண்டும். என்றாலும்கூட, பல மரபுகளை நாம் விவாதிப்பதன் மூலமாக அதிலுள்ள சங்கடங்களையும், அதிருப்திகளையும் தீர்த்துக்கொள்ள முடியும். அதன்மூலமாக நல்ல தீர்வினைக் காண முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தங்களுடைய சீரிய தலைமையின்கீழ்—தங்களுடைய நடவடிக் கையின்கீழ் பல நல்ல மரபுகள் நடைமுறைப்படுத்தப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. சாதாரணமாக விதிமுறைகளை மட்டும் பின்பற்றி நாம் நடக்க எண்ணமில்லாதவர்களாக இருக்கிறோம். இங்கிலாந்து போன்ற நாடுகளை மேற்கோளாகக் கொண்டு, நாம் நல்ல மரபுகளைக் கடைபிடித்து வருகிறோம். அந்த அவையையொட்டி, நீடித்த காலமாக சிலபல மரப முறைகளையும் நாம் கையாண்டு வருகிறோம். எழுதப்படாத சில மரபுகள் நடைமுறையில் கையாளப்படுகின்றன. சாதாரணமாக சபாநாயகர் வந் தால், எழுந்து நிற்க வேண்டும். இது மரபுதான். எழுதி வைக்கப்படாத விதிமுறை. இதைப் போன்றே நாம் கொண்டிருக்கிற மரபுகளிலே, அவைத் தலைவரே எழுந்து நின்று பேசினால் யாரும் எழுந்திருக்கக்கூடாது, நடக்கக் கூடாது. வெளியில் இருப்பவர்கள் உள்ளே வரக்கூடாது, உள்ளே இருப் பவர்கள் வெளியே போகக்கூடாது—இந்த மரபுகள் எல்லாம் தொடர்ந்து காப்பற்றப்பட்டு—கடைப்பிடிக்கப்பட்டு வரும் என்ற நம்பிக்கையார்வம் நம் அத்தனை பேருக்கும் இருக்கிறது. உறுப்பினர்கள் கேள்வி கேட்கின்றபோது, அவரவர்க்குரிய இடத்திலிருந்துதான் கேட்க வேண்டும், பேசுகிறபோது அவரவர் இடத்திலே இருந்து பேச வேண்டும், எண்ணிக்கை வாக்கெடுப்பு எடுக்கும் சமயத்தில் அவரவர்கள் இடத்தில்தான் இருக்க வேண்டும். ஆனால் மற்றைய நேரங்களில் சபையினுடைய நடவடிக்கைகளுக்கு எள்ளள வேனும் இடைஞ்சல், ஏற்படாத அளவு—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியதுபோல்—மற்ற உறுப்பினர்களைக் கலந்து பேசலாம். தாங்கள் அளித்த தீர்ப்பின் அடிப்படையிலே விவாதம் நடத்துவதன் மூல மாக சிலபல மரபுகளைக் கடைப்பிடிக்கலாம்.

கட்சிக்கொறடா இரண்டு பக்கமும் இருந்தாலும் அவர் எழாமல், இடம் பெயர்ந்து, பலரிடத்தில் பேசுகின்ற கட்டங்கள் ஏற்படக்கூடும். சபை நட வடிக்கைகளுக்கு இடைஞ்சல் ஏற்படாத அளவுக்கு மரபை நாம் கையாண்டு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1967, ஜூன் 30

வருகிறோம். சபாநாயகர் எழுந்து பேசும்போது—அறிக்கை படிக்கும்போது யாரும் இடம்விட்டு நகரக்கூடாது. அமைச்சர்களும், உறுப்பினர்களும் பேசுகின்றபோது அதைப் பெரிய தவருக ஏற்றுக்கொள்வது இல்லை. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இங்கே நடந்த காரியத்தை உற்றுநோக்காத காரணத்தால் இதை எழுப்பினுர் என்று கருதுகிறேன். இதற்காக, விதிகளைத் திருத்த வேண்டுமா என்பதைப் பற்றி, -பின்னர் ஆராய்ந்து செய்யலாம் இங்கே நடந்து கொண்டிருந்த காரியத்தை நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள். என்னென்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி சிந்தித்து தேவைப்பட்டால் விதிமுறைகளைத் திருத்திக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தத் தீர்ப்பைப்பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. மேற்கொள்ளப்பட வேண்டிய மரபைப் பற்றி—பேரவை முதல்வர் என்ற முறையில் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவை. அகில இந்தியாவிலேயே இந்த மாநிலத்தில் தமிழக மாநில சட்ட மன்றப் பேரவை நடவடிக்கைகளைப் புகழ்ந்து பாராட்டிப் பேசாதவர்கள் யாரும் இல்லை. மற்ற மற்ற இடங்களில் ஏற்படுகின்ற நிலைமைகளையெல்லாம் சுட்டிக்காட்டி, இந்தப் பேரவையினுடைய தரத்தைப் புகழ்ந்து பாராட்டுகின்ற நிலைமை—அந்த மரபு போற்றிக் காப்பாற்றப்பட வேண்டுமென்ற முறையிலேயே வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டவனுக இருக்கிறேன்.

மேலும், இந்த மன்றத்தின் நடவடிக்கைகள் எல்லாம் தமிழிலேயே நடைபெற வேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அது மெல்ல மெல்ல நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது. அதற்காக திட்டவட்டமான—நீடித்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. தமிழிலேயே எல்லா நடவடிக்கைகளைக் கொண்டு வருவதற்கும், மசோதாக்களை தமிழிலேயும், தீர்மானங்களை தமிழிலும் மெல்ல, மெல்ல—படிப்படியாகக் கொண்டுவர ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. முழுவதுமே தமிழிலே நாளடைவில் கொண்டு வரப்படும். ஒரு சில உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டால், முழுவதும் நானே தமிழிலே கொண்டுவந்துவிடுவேன். கூடுமான வரையில் 100-க்கு 95 பங்கு நானே கொண்டுவருவதற்கான முயற்சி கொள்ள முடியும். என்னுடைய அளவுக்குத் துறைச் செயலாளர்கள் தமிழிலே ஆர்வம் பெற்றிருக்க வேண்டும், செயலாளர்கள் அளவுக்குத் துணைச் செயலாளர்கள் இருக்க வேண்டும், அந்த அளவிலே மசோதாக்களை உருவாக்குகின்றவர்கள் இருக்க வேண்டும், துறைகளும் இருக்கவேண்டும். அந்தத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு அதற்குத் தகுந்தபடி பயிற்சி இருக்க வேண்டும். அந்த முயற்சிகள் பெருகப் பெருக, இந்தப் பேரவை நூற்றுக்கு நூறு தமிழிலேயே நடத்துகின்ற காலம் ஒன்று வரும். அது உடனடியாக வரா விட்டாலும், மெல்ல, மெல்ல வந்தே தீரும். ஆங்கில இடத்தை மாற்ற தமிழ் குறிப்பிட்ட சில காலத்திற்குத் தமிழிலும், ஆங்கிலத்திலும் பேரவை ஏடுகள் வைக்க வேண்டிய நிலை இருக்கிறது. சில இடங்களில் ஆங்கிலத்தைப் படித்துப் பொருள் அதிலிருந்து தெரிந்துகொள்ளக் கூடிய கட்டம் இருக்கிறது. போகப் போக தமிழிலேயே முழுவதையும் அறிந்து கொள்ளலாம். ஆகவே, தமிழிலேயே எல்லா நடவடிக்கைகளும் கொண்டு வர வேண்டும். எல்லா விவரங்களும், கேள்விகளும் தமிழ் மயமாக்க வேண்டும். எல்லா முயற்சிகளும் தமிழில் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான முறையில் நடவடிக்கைகள் கையாளப்பட்டிருக்கின்றன. அதை மேலும் மேலும் வளர்க்க வேண்டும். அறிக்கைகள், கையெழுத்துக்கள் எல்லாம் தமிழிலேயே நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

மற்ற மாவட்டங்களில் இருக்கிற பலதரப்பட்ட துறைகளில் மூன்று நான்கு கட்டங்களில் நிர்வாகத்தைத் தமிழிலேயே கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழில் வருகிற கடிதங்களுக்கு தமிழிலேயே பதில் அளிப்பது, ஆங்கிலத்தில் வந்தாலும் தமிழில் பதில் தருவது, ஒரு துறை மற்றொரு துறைக்கு எழுதுகிறபோது, தலைமைச் செயலகத்துக்கு எழுதுகிறபோது தமிழில் எழுதுவது என்பதாக இப்படி



1967, ஜூன் 30] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

ஐந்தாறு கட்டங்களை வைத்துக்கொண்டு, இரண்டொரு கட்டங்களில் நிறை வேற்றப்பட்டு வருகின்றன. தலைமை செயலகத்தை பொறுத்தவரை யில் முதல் கட்டமாக தமிழில் வருவனவற்றுக்குத் தமிழிலேயே பதில் அளிப்பது என்று வைத்துக்கொண்டு அதை விரிவுபடுத்தலாம். இப்போது செய்தித் துறையைப் பொறுத்தவரையில் தமிழ் மயமாக ஆக்கலாம் என்ற அளவில் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. படிப்படியாகச் செயல் பட்டு வந்தால் பிறகு சற்று கடினமான நிதித் துறை, மராமத்துத் துறை ஆகியவற்றிலும் கொண்டுவர வாய்ப்பு ஏற்படும். இத்துறையில் அரசு தக்க கவனம் செலுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பினர்களுக்கு வசதிகளை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று சொன்னுர்கள். இன்றைய தினம் பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு தரப்படுகின்ற வசதிகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இல்லை என்பதை நாம் எல்லோரும் அறிவோம். விரலுக்குத் தக்க வீக்கம், மாவுக்கேற்ற பணியாரம் என்ற முறையில் அவர்களுக்கு அதிக நிதி வசதி இருக்கிறது, நமக்குள்ள நிதி வசதி குறைவு, நமக்குள்ள வசதிகளுக்கேற்ப நாம் செய்து கொண்டிருக்கிரேும் என்று சொல்லலாம். குறிப்பாக சட்டமன்ற உறுப் ந. ப. 12-00
பினர்கள் காலையில் எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு சட்டமன்றத்திற்கு வரக்கூட போதிய வசதிகள் விடுதிகளில் இல்லை என்று சொன்னுர்கள். அதன்பேரில் புதிய விடுதி ஒன்றைக் கட்ட முயற்சி எடுக்கப் பட்டிருக்கிறது. அதைக் கட்டிமுடிக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக கட்டி முடித்து விடலாம் என்று சொல்கிருர்கள். 243 பேர்கள் தங்குவதற்காக வசதிகள் இந்தப் புதிய கட்டிடத்தில் செய்யப்படுகின்றன. நமது அவையில் 234 உறுப்பினர்கள் தாம் இருக்கிருர்கள். மேலவை உறுப்பினர்களும் இருக்கிருர்கள். மேலும் நகரத்தில் வேறு இடங்களில் தங்கிக்கொள்ள வசதி உடைய உறுப்பினர்களும் இருக்கிருர்கள். அந்த வகையில் புதுக் கட்டிடம் நமக்குப் போதுமான வசதியை அளிக்கும் என்று கருதுகிறேன். அப்போது வேறு பல கட்டிடங்களும் காலியாகக் கூடும். ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு தனி அறை ஒதுக்கக்கூட அப்போது இடவசதி ஏற்படும். அத்தகைய வசதியை அளிக்கவேண்டும் என்ற நோக்கத்தை இந்த அரசு கொண்டிருக்கிறது. புதுக் கட்டிடம் உபயோகத்திற்கு வருகிற வரையில் இப்போதுள்ள சங்கடங்களை உறுப்பினர்கள் கொஞ்சம் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கேயே சட்டமன்றத்தைச் சுற்றியுள்ள காரியாலயங்களை வேறு எங்கே, எங்கே கொண்டுபோய் வைக்கலாம் என்று ஆராய்ந்து முடிவு எடுக்கப்பட்டால், இங்கேயும் எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் வசதி செய்துகொடுக்கவும் வாய்ப்பு இருக்கிறது.

அடுத்து, கனம் உறுப்பினர்கள் தெரிவித்த மாதிரி அவர்கள் எழுதுகிற விண்ணப்பங்களை தட்டெழுத்தின் மூலமாக அச்சு அடித்து அனுப்புவதற்கு வசதி செய்து தரலாம். அதை எந்த இடத்தில் நிறைவேற்றலாம் என்பதை இந்த அரசு பரிசீலிக்கும்.

அறை வாடகைக் கட்டணம் பற்றிச் சொன்னுர்கள். இதுபற்றி பல முறைகள் பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன. ஹவுஸ் கமிட்டியே இதைப் பரிசீலனை செய்து வாடகை $2\frac{1}{2}$ ரூபாய் வைப்பது என்று முடிவு செய்திருக்கிருர்கள். இவ்வளவு வசதியுடன் வேறு இடங்களில் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது இது மிகமிகக் குறைவுதான் என்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் நன்ருக உணர்வார்கள். வெளியில் பத்துப் பன்னிரண்டு ரூபாய்கள் கொடுக்கவேண்டி வரும். சட்டசபை நடக்கும்போதாவது வாடகை இல்லாமல் செய்யலாம் என்று சொன்னுர்கள். சட்டசபை நடக்கும்போதாவது அவர்களுககு 15 ரூபாய் அலவன்சு கொடுக்கப்படுகிறது. மற்ற நாட்களில் படியும் இடையாது. வாடகையையும் கட்டவேண்டிய நிலைமையும் இருக்கும். இதுபற்றி நம்முடைய நிதி வசதிகள் சீராகிறபோது பரிசீலிக்கலாம். வாடகை இல்லை என்று வைத்துவிட்டால் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒவ்வொரு அறை ஒதுக்கவேண்டிய நிலை ஏற்படும். சட்டசபை இல்லா நாட்களில் அவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்கிற நிலை, சங்கட ஏல்லாம் ஏற்படும். பொதுவாக புதுக் கட்டத்தில் உறுப்பினர்களு

வருகிறோம். சபாநாயகர் எழுந்து பேசும்போது—அறிக்கை படிக்கும்போது யாரும் இடம்விட்டு நகரக்கூடாது. அமைச்சர்களும், உறுப்பினர்களும் பேசு கின்றபோது அதைப் பெரிய தவருக ஏற்றுக்கொள்வது இல்லை. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இங்கே நடந்த காரியத்தை உற்றுநோக்காத காரணத்தால் இதை எழுப்பினுர் என்று கருதுகிறேன். இதற்காக, விதிகளைத் திருத்த வேண்டுமா என்பதைப் பற்றி,-பின்னர் ஆராய்ந்து செய்யலாம் இங்கே நடந்து கொண்டிருந்த காரியத்தை நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள். என்னென்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி சிந்தித்து தேவைப்பட்டால் விதிமுறைகளைத் திருத்திக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தத் தீர்ப்பைப்பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. மேற்கொள்ளப்பட வேண்டிய மரபைப் பற்றி—பேரவை முதல்வர் என்ற முறையில் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவை. அகில இந்தியாவிலேயே இந்த மாநிலத்தில் தமிழக மாநில சட்ட மன்றப் பேரவை நடவடிக்கைகளைப் புகழ்ந்து பாராட்டிப் பேசாதவர்கள் யாரும் இல்லை. மற்ற மற்ற இடங்களில் ஏற்படு கின்ற நிலைமைகளையெல்லாம் சுட்டிக்காட்டி, இந்தப் பேரவையினுடைய தரத்தைப் புகழ்ந்து பாராட்டுகின்ற நிலைமை—அந்த மரபு போற்றிக் காப்பாற்றப்பட வேண்டுமென்ற முறையிலேயே வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டவனுக இருக்கிறேன்.

மேலும், இந்த மன்றத்தின் நடவடிக்கைகள் எல்லாம் தமிழிலேயே நடைபெற வேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அது மெல்ல மெல்ல நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது. அதற்காக திட்டவட்டமான —நீடித்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. தமிழிலேயே எல்லா நட வடிக்கைகளைக் கொண்டு வருவதற்கும், மசோதாக்களை தமிழிலேயும், தீர்மா னங்களை தமிழிலும் மெல்ல, மெல்ல—படிப்படியாகக் கொண்டுவர ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. முழுவதுமே தமிழிலே நாளடைவில் கொண்டு வரப்படும். ஒரு சில உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டால், முழுவதும் நானே தமிழிலே கொண்டுவந்துவிடுவேன். கூடுமான வரையில் 100-க்கு 95 பங்கு நானே கொண்டுவருவதற்கான முயற்சி கொள்ள முடியும். என்னுடைய அளவுக்குத் துறைச் செயலாளர்கள் தமிழிலே ஆர்வம் பெற்றிருக்க வேண்டும், செயலாளர்கள் அளவுக்குத் துணைச் செயலாளர் கள் இருக்க வேண்டும், அந்த அளவிலே மசோதாக்களை உருவாக்குகின்ற வர்கள் இருக்க வேண்டும், துறைகளும் இருக்கவேண்டும். அந்தத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு அதற்குத் தகுந்தபடி பயிற்சி இருக்க வேண்டும். அந்த முயற்சிகள் பெருகப் பெருக, இந்தப் பேரவை நூற்றுக்கு நூறு தமிழிலேயே நடத்துகின்ற காலம் ஒன்று வரும். அது உடனடியாக வரா விட்டாலும், மெல்ல, மெல்ல வந்தே தீரும். ஆங்கில இடத்தை மாற்ற தமிழ் குறிப்பிட்ட சில காலத்திற்குத் தமிழிலும், ஆங்கிலத்திலும் பேரவை ஏடுகள் வைக்க வேண்டிய நிலை இருக்கிறது. சில இடங்களில் ஆங்கிலத்தைப் படித்துப் பொருள் அதிலிருந்து தெரிந்துகொள்ளக் கூடிய கட்டம் இருக்கிறது. போகப் போக தமிழிலேயே முழுவதையும் அறிந்து கொள்ளலாம். ஆகவே, தமிழிலேயே எல்லா நடவடிக்கைகளும் கொண்டு வர வேண்டும். எல்லா விவரங்களும், கேள்விகளும் தமிழ் மயமாக்க வேண்டும். எல்லா முயற்சிகளும் தமிழில் மேற்கொள்ளப்பட்டு, அதற் கான முறையில் நடவடிக்கைகள் கையாளப்பட்டிருக்கின்றன. அதை மேலும் மேலும் வளர்க்க வேண்டும். அறிக்கைகள், கையெழுத்துக்கள் எல்லாம் தமிழிலேயே நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக் கின்றன.

மற்ற மாவட்டங்களில் இருக்கிற பலதரப்பட்ட துறைகளில் மூன்று நான்கு கட்டங்களில் நிர்வாகத்தைத் தமிழிலேயே கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழில் வருகிற கடிதங்களுக்கு தமிழிலேயே பதில் அளிப்பது, ஆங்கிலத்தில் வந்தாலும் தமிழில் பதில் தருவது, ஒரு துறை மற்ருெரு துறைக்கு எழுதுகிறபோது, தலைமைச் செயலகத்துக்கு எழுதுகிறபோது தமிழில் எழுதுவது என்பதாக இப்படி





ஐந்தாறு கட்டங்களை வைத்துக்கொண்டு, இரண்டொரு கட்டங்களில் நிறை
வேற்றப்பட்டு வருகின்றன. தலைமை செயலகத்தை பொறுத்தவரை
யில் முதல் கட்டமாக தமிழில் வருவனவற்றுக்குத் தமிழிலேயே பதில்
அளிப்பது என்று வைத்துக்கொண்டு அதை விரிவுபடுத்தலாம். இப்போது
செய்தித் துறையைப் பொறுத்தவரையில் தமிழ் மயமாக ஆக்கலாம்
என்ற அளவில் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. படிப்படியாகச் செயல்
பட்டு வந்தால் பிறகு சற்று கடினமான நிதித் துறை, மராமத்துத் துறை
ஆகியவற்றிலும் கொண்டுவர வாய்ப்பு ஏற்படும். இத்துறையில் அரசு
தக்க கவனம் செலுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பினர்களுக்கு வசதிகளை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று
சொன்ஞர்கள். இன்றைய தினம் பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு
தரப்படுகின்ற வசதிகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இல்லை என்பதை
நாம் எல்லோரும் அறிவோம். விரலுக்குத் தக்க வீக்கம், மாவுக்கேற்ற
பணியாரம் என்ற முறையில் அவர்களுக்கு அதிக நிதி வசதி இருக்கிறது,
நமக்குள்ள நிதி வசதி குறைவு, நமக்குள்ள வசதிகளுக்கேற்ப நாம் செய்து
கொண்டிருக்கிறோம் என்று சொல்லலாம். குறிப்பாக சட்டமன்ற உறுப்
பினர்கள் காலையில் எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு ந. ப. 12-00
சட்டமன்றத்திற்கு வரக்கூட போதிய வசதிகள் விடுதிகளில் இல்லை என்று
சொன்ஞர்கள். அதன்பேரில் புதிய விடுதி ஒன்றைக் கட்ட முயற்சி எடுக்கப்
பட்டிருக்கிறது. அதைக் கட்டிமுடிக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டி
ருப்பவர்கள் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக கட்டி முடித்து விடலாம்
என்று சொல்கிருர்கள். 243 பேர்கள் தங்குவதற்காக வசதிகள் இந்தப்
புதிய கட்டிடத்தில் செய்யப்படுகின்றன. நமது அவையில் 234 உறுப்பினர்
கள் தாம் இருக்கிருர்கள். மேலவை உறுப்பினர்களும் இருக்கிருர்கள்.
மேலும் நகரத்தில் வேறு இடங்களில் தங்கிக்கொள்ள வசதி உடைய
உறுப்பினர்களும் இருக்கிருர்கள். அந்த வகையில் புதுக் கட்டிடம்
நமக்குப் போதுமான வசதியை அளிக்கும் என்று கருதுகிறேன். அப்
போது வேறு பல கட்டிடங்களும் காலியாகக் கூடும். ஒவ்வொரு கட்சிக்கும்
ஒரு தனி அறை ஒதுக்கக்கூட அப்போது இடவசதி ஏற்படும். அத்தகைய
வசதியை அளிக்கவேண்டும் என்ற நோக்கத்தை இந்த அரசு கொண்டிருக்
கிறது. புதுக் கட்டிடம் உபயோகத்திற்கு வருகிற வரையில் இப்போதுள்ள
சங்கடங்களை உறுப்பினர்கள் கொஞ்சம் பொறுத்துக்கொள்ள வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கேயே சட்டமன்றத்தைச் சுற்றியுள்ள
காரியாலயங்களை வேறு எங்கே, எங்கே கொண்டுபோய் வைக்கலாம் என்று
ஆராய்ந்து முடிவு எடுக்கப்பட்டால், இங்கேயும் எல்லாக் கட்சிக்காரர்களுக்கும்
வசதி செய்துகொடுக்கவும் வாய்ப்பு இருக்கிறது.

அடுத்து, கனம் உறுப்பினர்கள் தெரிவித்த மாதிரி அவர்கள் எழுது
கிற விண்ணப்பங்களை தட்டெழுத்தின் மூலமாக அச்சு அடித்து அனுப்பு
வதற்கு வசதி செய்து தரலாம். அதை எந்த இடத்தில் நிறைவேற்றலாம்
என்பதை இந்த அரசு பரிசீலிக்கும்.

அறை வாடகைக் கட்டணம் பற்றிச் சொன்ஞர்கள். இதுபற்றி பல
முறைகள் பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன. ஹவுஸ் கமிட்டியே இதைப் பரி
சீலனை செய்து வாடகை 2½ ரூபாய் வைப்பது என்று முடிவு செய்திருக்
கிருர்கள். இவ்வளவு வசதியுடன் வேறு இடங்களில் ஒப்பிட்டுப் பார்க்கிற
போது இது மிகமிகக் குறைவுதான் என்பதை எல்லா உறுப்பினர்களுக்கும்
நன்ருக உணர்வார்கள். வெளியில் பத்துப் பன்னிரண்டு ரூபாய்கள்
கொடுக்கவேண்டி வரும். சட்டசபை நடக்கும்போதாவது வாடகை இல்லா
மல் செய்யலாம் என்று சொன்ஞர்கள். சட்டசபை நடக்கும்போதாவது
அவர்களுககு 15 ரூபாய் அலவன்சு கொடுக்கப்படுகிறது. மற்ற நாட்களில்
படியும் கிடையாது. வாடகையையும் கட்டவேண்டிய நிலைமையும் இருக்கும்.
இதுபற்றி நம்முடைய நிதி வசதிகள் சீராகிறபோது பரிசீலிக்கலாம்.
வாடகை இல்லை என்று வைத்துவிட்டால் ஒவ்வொரு உறுப்பினருக்கும்
ஒவ்வொரு அறை ஒதுக்கவேண்டிய நிலை ஏற்படும். சட்டசபை இல்லாத
நாட்களில் அவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்கிற நிலை, சங்கடம்
எல்லாம் ஏற்படும். பொதுவாக புதுக் கட்டடத்தில் உறுப்பினர்களுக்கு

நூல் நிலைய வசதி, பொழுது போக்க வசதி, விளையாட வசதி எல்லாம் செய்துதர திட்டமிடப்பட்டிருக்கிறது. டெலிபோன் வசதியும் தனித்தனியாக ஏற்படுத்தித்தரவும் திட்டமிருக்கிறது.

மாநிலம் முழுவதும் சென்று வர உறுப்பினர்களுக்கு ரயில்வே பாஸ் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாஸ் வழங்குவதுபோல சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த மாநிலத்தில் வழங்கவேண்டும் என்பதாக நாம் மத்திய சர்க்காரிடத்தில் சொல்லி ஏற்பாடு செய்யவேண்டியிருக்கிறது. நாமே பாஸ் வழங்குவது என்றால், அதற்கான கட்டணத்தை நம் அரசு ரயில்வேக்குச் செலுத்தி பாஸ் வாங்கி வழங்கவேண்டிய நிலை இருக்கிறது. இதற்கு நம்முடைய நிதிநிலைமை இடங்கொடாத நிலை வருகிறது. ஆகவே, இந்த அரசு இந்திய அரசுக்குத் தெரிவித்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ரயில்வே பாஸ் அளிக்கிற வசதியைச் செய்யலாம் என்று கூறலாம்.

மாநிலங்களைப் பொறுத்தவரையில் அவரவர்கள் அவரவர்களுடைய நிதி வசதிக்கேற்ப சலுகைகளை அளிக்கிறார்கள். நம் மாநிலத்தில் உள்ள சில வசதிகள் வேறு மாநிலத்தில் இல்லை. அங்குள்ள சில இங்கு இல்லை. சில மாநிலத்தில் 200 ரூபாயும், 15 ரூபாய் தினப்படி அளிக்கிறார்கள். நாம் 250 ரூபாயும், 15 தினப்படி அளிக்கிறோம். 350 ரூபாய், 20 ரூபாய் படி அளிக்கிற மாநிலமும் இருக்கிறது.

பஸ்களுக்காவது பாஸ் கொடுக்கலாம் என்கிற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. பஸ்ஸைப் பொறுத்த வரையில் ஏற்கனவே அதிகமான நட்டத்தில் இருக்கிறது, பாஸ் கொடுக்க முடியாது இருப்பதற்கு இதுவே முழுமுதற் காரணம் அல்ல. நம்முடைய பஸ்கள் இன்றையதினம் எல்லாத் தொகுதிகளுக்கும் செல்கிறது என்று சொல்ல முடியாது. அதனாலும் சில சங்கடம் வரலாம். "தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்" என்கிற நிலையில் இப்போது சொன்னவைகள் எல்லாம் நிச்சயமாக இன்று இல்லாவிட்டாலும் வசதிகள் பெருகுகிற நிலையில் கிடைக்க வாய்ப்பு இருக்கின்றன.

மசோதாக்களைக் கொண்டுவரும்போது 3 நாட்களாவது உறுப்பினர்களுக்கு அவகாசம் கொடுத்தால் வசதியாக இருக்கும் என்று தெரிவித்தார்கள். ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களில் தான் சபாநாயகர் அனுமதியுடன் உடனடியாகக் கொண்டுவரவேண்டிய நிலை ஏற்படுகிறது. பொதுவாக அங்கத்தினர்களுக்குக் கொடுக்கவேண்டிய அவகாசம் கொடுக்கப்படும், இது பற்றி இலாக்காக்காரர்களுக்கும் உத்தரவு போட இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். வினாக்களுக்கு விடை தருவதிலும் முதல் இடம் தரப்படவேண்டும் என்கிற கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். ஒரு வினாவுக்கு காலங்கடந்து விடை வருவதனால் அந்த வினா தன் பயனை இழந்துவிடுகிற நிலை கூட ஏற்படும். இதை நாங்கள் உணர்ந்து இருக்கிறோம். ஆகவே, வினாக்களுக்கு விடைகளை உடனடியாகத் தயாரித்து குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்பிவிடவேண்டுமென்ற சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறது.

கடைசியாக நான் சொன்னது போல உறுப்பினர்களுடைய வசதிகளை அதிகரித்துத் தர இந்த அரசு பரிசீலிக்கும். இங்கேயே கூட ஆளும் கட்சிக்காரர்கள் வந்தால் இப்படியே (கிழக்குப் பக்கமாகக்) போய்விடுகிற நிலையும், எதிர்க் கட்சிக்காரர்கள் அப்படியே (மேற்குப்பக்கமாக) போய்விடுகிற நிலையும் இருக்கிறது. இதுபோல இல்லாது எல்லோரும் கலந்து பேசவும், அன்புடன் பழகவும் ஏற்ற இடவசதி பெருகவேண்டும். கலந்து உறவாடுவதன் மூலமாகத்தான் அன்பு பெற முடியும். அதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. இன்றைய தினம் விவாதத்தில் கலந்துகொண்டு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களை எல்லாம் இந்த அரசு படிப்படியாக நிதி நிலைமைக்கேற்றபடி நிறைவேற்றிக்கொடுக்க முன்வரும் என்ற நம்பிக்கையோடு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பேரவையின் பெயரையும் புகழையும் காப்பாற்றி மற்றவர்களுக்கு இந்தப் பேரவை வழிகாட்டியாக இதுவரை இருந்து வந்துள்ளதுபோலவே, இன்னும் சிறப்பாக இருப்பதற்கு என்னுடன் ஒத்துழைக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சியில் உள்ள மற்ற கட்சித் தலைவர்கள் உறுப்பினர்கள் ஆகிய எல்லோரும் நம்முடைய மன்றத்தின் பெருமையை நிலைநாட்ட முன்வர வேண்டும். அவைத் தலைவர் அவர்களுக்கு நம்முடைய ஆதரவையும், முழு ஒத்துழைப்பையும் தந்து எல்லா வகையிலும் சிறப்பாகத் தொண்டு புரிவோம் என்று கூறிக்கொள்கிறேன். சட்டமன்றத் துறையில் உள்ள செயலாளர், மற்ற துணை அதிகாரிகள் அனைவருக்கும் என் பாராட்டுதலையும் போற்றுதலையும் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



வெட்டுத் தீர்மானங்கள் யாவும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்புள்ள கோரிக்கை :—
"கோரிக்கை எண் VI மாநிலச் சட்டப்பேரவை என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,27,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கை 7, 8 ஆகிய எண் உள்ளவற்றை ஒரே நேரத்தில் எடுத்துக்கொள்ளலாமென்று கருதுகிறேன், பேரவையின் அனுமதியுடன்.

## கோரிக்கை எண் VII—தேர்தல்கள்

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல்—

"கோரிக்கை எண் VII—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 21,27,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

**திரு. க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க

"கோரிக்கை எண் VII—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 21,27,400-ல், ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

## கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல்—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 3,34,81,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

**திரு. க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, லஞ்ச ஊழலை ஒழிப்பதற்குத் தீவிர நடவடிக்கை எடுப்பதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத்தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, லஞ்ச ஒழிப்பு அதிகாரத்தைப் போலீஸ் இலாகாவிலிருந்து வேறு இலாகாவிற்கு மாற்ற வேண்டியதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, அமைச்சர்கள் தலையிடப் பணியாளர்கள் ஆகியவர்களின் பணியில் இருக்கும் ஒருங்கிணைப்பின்மைபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, சர்க்கார் சிப்பந்திகளுக்கு மத்திய சர்க்கார் சிப்பந்திகளின் அளவுக்கு, நகரயீட்டுப் படி, வீட்டு வாடகைப்படி முதலியவற்றை அளிக்கத் தவறியதைச் சுட்டிக் காட்ட—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, ரைஸ் மில் லைசென்சு வழங்குவதைக் கலெக்டர் அதிகாரத்திற்கே விட்டுவிடுவதைப்பற்றி எடுத்துக்கூற—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, முக்கியமான தஸ்தாவேஜுகளை மாஜி முதலமைச்சர் அழித்ததைப்பற்றி நடவடிக்கை எடுக்காமல் விட்டிருக்கும் போக்கைப்பற்றி எடுத்துக் காட்ட—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**Thiru K. RAMAMOORTHY :** To discuss the inordinate delay in conducting the elections to the local boards, I move the cut motion standing in my name—

"That the allotment of Rs. 3,34,81,300 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff—be reduced by Rs. 100."

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்துத் தேர்தல் முறையில் உள்ள குறைப்பாடுகளைச் சுட்டிக் காட்ட—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.





தலைவர் அவர்களே, அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் அரசுக்குக் கொடுக்கும் விண்ணப்பங்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து முடிவு அறிவிப்பது சம்பந்தமாக விவாதிக்க—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, சட்ட மன்றத்தில் உறுப்பினர்கள் சொல்லும் கருத்துக்களுக்கு அந்தந்த இலாகா என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று விவாதிக்க—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களில் அரிஜனங்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்காததைப்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து வந்த அகதிகளுக்கு வேண்டிய வேலை வாய்ப்புச் செய்து கொடுக்கத் தவறியதைச் சுட்டிக் காட்ட—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**Thiru A. A. SUBBA RAJA :** To discuss the suggestion to locate Special Home at Rajapalayam for children of repatriates from Burma, I move the cut motion standing in my name, namely:—

"That the allotment of Rs. 3,34,81,300 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff—be reduced by Rs. 100."

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தலைவர் அவர்களே, உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கும் போக்கினால் படித்து வேலையில்லாமல் கஷ்டப்படுபவர்களின் நிலையைப்பற்றி எடுத்துக் கூற—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1967, ஜூன் 30

தலைவர் அவர்களே, உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெறக்கூடியவர்களின் வயதை 55-க்கு மேல் நீடிக்காமல் மேலும் குறைக்கும் விஷயத்தைப்பற்றி எடுத்துக் கூற—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, மாநில சர்க்காருக்குத் தேவையான ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை வைத்துக் கொள்ளும் அதிகாரத்தைக் கோரி, மத்திய சர்க்காரிடமிருந்து பெறும் விஷயத்துதைப்பற்றிக் கூற—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, மாதம் ரூ. 1,000-க்கு மேல் சம்பளம் கொடுப்பதால் பாதிக்கக்கூடிய விஷயத்தைப்பற்றி எடுத்துக் காட்ட—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, 500 ரூபாய்க்கு மேல் பென்ஷன் வாங்குபவர்களை இதர தனியார் கம்பெனியில் வேலை பார்க்க அனுமதிக்கக் கூடாதென்பதின் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்ல—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,34,81,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத்தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. விநாயகம் :** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், தமிழிலே பேசவேண்டுமென்று சொன்னதன்பேரில் தமிழிலே பேசுகிறேன். வெட்டுப் பிரேரணை ஆங்கிலத்திலே இருப்பதால் நான் அதை ஆங்கிலத்திலே படித்துவிட்டுப் பிறகு தமிழிலே பேசுகிறேன்.

**I move the cut motion standing in my name to discuss about the policy and persuade the Hon. Ministers to draw their full and regular salaries—**

**"That the allotment of Rs. 3,34,81,300 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff—be reduced by Rs. 100."**

என்னுடைய வெட்டுப் பிரேரணையினுடைய நோக்கமே இந்த மானியக் கோரிக்கையிலே 3,34,81,300 ரூபாய் வேண்டுமென்று அமைச்சரவை கேட்கிறது. அந்த அளவுக்கு நாங்கள் பணத்தைத் தாராளமாகக் கொடுக்கும் பொழுது மக்களுக்காகப் பணிசெய்கிற அமைச்சரவை ஏன் ஊதியம் வாங்காமல் இருக்கவேண்டும், நாம் என்ன பணமில்லாத தரித்திரமான சர்க்காரா ? வரி வாங்குவதற்குத் தயங்குகிறோமோ ?

* * * * *

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** * * * * * * உறுப்பினர் உபயோகப்படுத்திய சொற்கள் நம் நடவடிக்கைகள் ஏடுகளிலே பதிக்கப்படுவது அர்த்தமற்றதாக இருப்பதாலே, அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறன்.

**திரு. கே. விநாயகம் :** அந்த வார்த்தை ஓரளவுக்காவது அன்பார்லிமெண்டரியாக இருந்தால் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் அப்படியல்ல.

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1967, ஜூன் 30]

**MR. SPEAKER : The word * * cannot be used with reference to the Government.** அந்த வார்த்தை அவையின் நடவடிக்கை பதிவேட்டிலிருந்து அகற்றப்படவேண்டுமென்று கட்டளையிடுகிறேன்.

**திரு. கே. விநாயகம் :** நாம் ஒன்றும் ஏழை சர்க்கார் அல்ல. ஏதோ நமக்குப் போதுமான நிதிநிலைமை இல்லையென்றும் சொல்ல முடியாது. மக்களுடைய சேவைக்காக வந்திருக்கிற அமைச்சர்கள் சம்பளம் எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறார்களே, நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், அதை நீங்கள் வாங்க வேண்டும். அதற்காக ஒரு அரசியல் நோக்கத்தைக் குறிப்பிட்டு, ஆதலாலே வாங்க மாட்டோம், எங்களுக்குப் பொது மக்கள் தருவார்கள் என்று சொல்வது அரசியலுக்குப் பொருத்தமாக இருக்கலாம், கட்சி வளர்ச்சிக்குப் பொருத்தமாக இருக்கலாம், பொறுப்புள்ள சர்க்காரை நடத்துகிறவர்கள் சம்பளம் வாங்க வேண்டும். ஆனால் அவர்களைப் பொறுத்தமட்டில் கொள்கையை நிறைவேற்றிவிட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் என்னைக் கேட்டால், மூன்றுபடி எப்பொழுது கொடுக்கப்படுகிறதோ அப்பொழுதுதான் கொள்கை நிறைவேறும், எப்பொழுது விலைவாசிகள் குறைந்தது என்று தெரிகிறதோ அப்பொழுதுதான் கொள்கை நிறைவேறும் . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** உங்கள் கருத்துப்படி மறுபடியும் நீங்கள் வந்தால்தான் கொள்கை நிறைவேறும்.

**திரு. கே. விநாயகம் :** இவை நிறைவேற்றப்பட்டதா இல்லையா என்பதைப் பல ஆண்டுகள் கழித்துத்தான் பார்க்கவேண்டும். 30 ஆண்டுகள் அல்ல, 50 ஆண்டுகள் ஆகலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விலைவாசிகள் குறைந்தனவா, உப்பு விலை குறைந்ததா, எண்ணெய் விலை குறைந்ததா, பருப்பு விலை குறைந்ததா என்ற நிலைமையெல்லாம் பார்க்கவேண்டும். ஆதலால் அமைச்சர்கள் தைரியமாகச் சொல்லுங்கள், விநாயகம் கேட்டான் ஆதலால் சம்பளம் வாங்கிக்கொண்டோம் என்று சொல்லுங்கள். அப்படியில்லாமல் யாருமே வெறுமனே மக்களுக்குச் சேவை செய்கிறோம் என்று சொல்லக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படித் தீர்மானம் இருந்தாலும் . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சம்பளம் வாங்கப்போவது இல்லை என்று எங்களுடைய கட்சியிலோ அல்லது மன்றத்திலோ இருக்கின்ற நாங்கள் தெரிவிக்கவும் இல்லை, அப்படித் தீர்மானமும் இல்லை. 1,000 ரூபாயாக இருந்ததை 500 ரூபாயாகக் குறைத்துக் கொண்டு இருக்கிறோம். இனிமேல் வாங்காமல் இருப்பதால் எங்களுக்குள்ளேயே ஒரு விறுவிறுப்பு ஏற்பட்டு விலைவாசிகளைக் குறைப்பதற்கான நடவடிக்கையிலே இறங்க முடியும் என்ற நோக்கத்திலேதான் வாங்காமல் இருக்கிறோம். இப்பொழுது கனம் விநாயகம் அவர்கள் உருக்கத்தோடு இதைப் பற்றிக் கேட்டிருப்பதாலே விரைவிலே வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**THIRU K. VINAYAKAM : My purpose is served.** அமைச்சர்கள் நாடுதோறும் சுற்றிப் போய்ப் பார்ப்பது கடமையாகும். வெளியூர்கள் பிரயாணம் போகும்பொழுது அமைச்சர்களாகத்தான் போகலாம். கட்சித் தோழர்களைச் சந்திப்பதை மாலை நேரத்திலே வைத்துக் கொள்ளலாம். பகல் நேரத்திலே அமைச்சர்களாகச் சுற்றுப் பிரயாணம் செய்து கடமைகளை நிறைவேற்றவேண்டும். ஆனால் சட்டசபைக் கூட்ட நேரத்திலே வெளிப் பிரயாணம் போகவேண்டுமா ? இப்பொழுது ஆளுங்கட்சியாக இருக்கின்ற கட்சி முன்பு எதிர்க் கட்சியாக இருந்தபொழுது ஆட்சியாளர்களைப்பற்றி இப்படிக் குற்றம் சுமத்தினார்களே . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அப்படிப்பட்ட குறைபாடுகளை நியாயமானவை என்று ஏற்றுக் கொண்டார்களா ?

**திரு. கே. விநாயகம் :** பின்னால் பேசவிட்டால்தானே தெரியும். அப்பொழுது அதைத் தவறு என்று சொல்லமாட்டேன். இப்பொழுது எப்படி நடத்துகிறீர்கள் என்பதுதான் பிரச்னே. நேற்று முதலமைச்சர் அவர்கள் திருச்சிக்குப் போனார்கள். போக வேண்டிய தடுக்கமுடியாத நிலையில் போனார்கள் என்று நினைக்கிறேன். வெறுமனே கட்சிக்காரர்கள் மேடையிலே பேசுவதற்காகக் கூப்பிடுகிறார்கள் என்பதற்காகவும், அங்கே வெற்றி பெற்ற காங்கிரஸ்காரனைத் திட்ட வேண்டுமென்பதற்காகவும் அந்த நோக்கத்தோடு செல்லக் கூடாது என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சர்கள் வெளியூர்ப் பிரயாணம் செய்கிறார்கள். பிரயாணிகள் தங்குகின்ற விடுதி இருக்கிறதே அங்கே தங்காமல், கட்சித் தோழர்கள் வீடுகளுக்குப் போய் பொது மக்கள் பார்க்கமுடியாதபடி உணவு அருந்தி விட்டு, ஓய்வு எடுத்துக் கொண்டுவிட்டு வருவதால் பொதுமக்களுக்கு ஒரு வகையான எண்ணம் ஏற்பட்டு, ஓகோ இவர் அந்த அமைச்சருக்கு வேண்டியவரா, அவரை வைத்துப் பல காரியங்கள் செய்து கொள்ளலாம் விநாயகத்திடம் என்ன காரியம் நடக்கப் போகிறது என்று நினைத்துக் கொண்டுவிடுகின்ற நிலைமை ஏற்படும். வெளியூர்களுக்குச் செல்லும்பொழுது கட்சித் தலைவர்கள் வீட்டிலோ அல்லது வட்டச் செயலாளர் வீடுகளிலோ தங்குவதால் பொதுமக்களிடையே தவறான அபிப்பிராயங்கள் ஏற்படும் . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சபையின் நடவடிக்கைக்கு விறுவிறுப்பு ஏற்படுமென்பதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன். யாரும் வேறுவிதமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. சில இடங்களிலே தங்குவதாலே அவர்களைப் பார்ப்பதால் யாராவது தவறாக நினைத்துக் கொள்வார்கள் என்று சொன்னார்கள். சர்க்கார் விடுதிகளில் தங்கினால் அங்கேயிருக்கின்ற காவலாளைப் பார்த்தால் காரியம் நடைபெறும் என்றுகூட யாரும் நினைத்துக் கொள்ளலாம்.

**திரு. கே. விநாயகம் :** இதை விவாதிப்பதற்கு அப்படிப் பொருள் கொண்டு போவது சரியாகாது. மாலையிலே அமைச்சர் அவர்கள் தோற்றுப் போன திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினரை வைத்துக் கொண்டு, இவர் தோற்றாலும் பரவாயில்லை, இவரிடம் நீங்கள் மனுக்கள் தரவேண்டும். காரியங்கள் நடக்கும் என்று சொல்வது சரியல்ல.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னது மிகவும் கவனிக்கத்தக்கது. அதைத் திருத்துவதற்காகக் கேட்கிறேன். எந்த அமைச்சர் எந்த இடத்தில் அப்படிச் சொன்னார் என்று சொல்லவேண்டும்.

**திரு. கோ. பூவராகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே விவசாயத்துறை அமைச்சர் இவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உளுந்தூர்பேட்டை தொகுதியிலே சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** என்ன சொன்னேன் என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் விளக்கமாகச் சொல்லவேண்டும்.

**திரு. கோ. பூவராகன் :** சபையிலே வெளியிலே இருக்கிற நபருடைய பெயரைச் சொல்லக் கூடாது என்ற காரணத்தினாலே பெயரைக் குறிப்பிடாமல் சொல்கிறேன். அமைச்சர் அவர்கள், அவர்களிடத்திலே எல்லோரும் மனுக்களை அளிக்கவேண்டும். நான் செய்யக்கூடியதை அவர்களே செய்து கொடுப்பார்கள். அமைச்சராக வரக்கூடியவர்கள், அவர்களை அணுகிக் காரியங்களைச் செய்து கொள்ளுங்கள், இது மட்டுமல்ல அதிகாரிகளிடத்திலேயும் இவர்கள் எல்லாம் வந்தால் கவனித்துக் கொள்ளுங்கள் என்று நேரடியாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர்கள். தவறான செய்தியை வைத்துக்கொண்டு கூறுவது நல்லதல்ல. தமிழகத்திலே பொதுவாக எல்லா இடங்களிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அங்கத்தினர் ஜெயித்திருந்தாலும்,





தோற்றாலும் அந்தந்தத் தொகுதியிலே வருகிறபொழுது யாரும் குறைகளைச் சொல்லலாம். காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி சொல்லலாம் என்றுதான் சொன்னேன். செல்வராஜ் அவர்களிடம்தான் சொல்லவேண்டுமென்று சொல்லவில்லை. அதிகாரிகளிடத்திலே சொன்னதாகச் சொன்னார்கள். நான் எந்த அதிகாரியிடத்திலே சொன்னேன் என்பதைச் சொன்னால் நான் என்னுடைய பதவியை ராஜிநாமாச் செய்யத் தயாராக இருக்கிறேன்.

(**திரு. கோ. பூவராகன்** எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தப் பேரவைக்கு வெளியிலே பேசியதைக் கண்டிக்கவோ அல்லது தவறு என்று சொல்லவோ முடியாது பிற்
என்பது 1937-ஆம் ஆண்டிலிருந்து பேரவையின் நடைமுறையாக இருந்து பகல்
வருகிறது. மேற்கொண்டு உறுப்பினர் ஏதாவது பேசுவதாக இருந்தால் 12 30
அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் சரியானது, முழுக்க முழுக்க 100-க்கு 100 சரி உண்மையானது என்ற அடிப்படையில்தான் இந்தப் பேரவையில் பேசமுடியும்.

**திரு. கே. விநாயகம்:** அப்படி அமைச்சர்கள் கட்சியை வளர்ப்பதைப்பற்றி எங்களுக்கு எவ்விதமான கவலையும் இல்லை. கவுரவம் மிக்க சட்டசபை அங்கத்தினர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று சொன்னால்கூடப் பொறுத்துக் கொள்கிறேன். "விநாயகத்திற்குத் தமிழ் பேசவராது; அவர் ஆங்கிலந்தான் பேசுவார்" என்று என்னுடைய தொகுதியிலே ஓரிரு அமைச்சர்கள் பேசியிருக்கிறார்கள். நான் தமிழ் வளர்த்தவன், தமிழ் பிரதேசத்திற்காகப் பாடுபட்டவன், வெற்றி பெற்றவனுங் கூட. என்னுடைய தொகுதியில் போய் "விநாயகத்திற்குத் தமிழ் பேசவராது" என்று சொன்ன நேரத்தில் "அந்தக் கதையை நிறுத்து; வேறு ஏதாவது பேசு" என்று பொது மக்கள் கூறிவிட்டார்கள். எதிர்க் கட்சிக்காரர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று சொன்னால், அவர்களுக்கு ஒன்றும் தெரியாதா? தெரியுமா என்பதைப் பற்றி இந்த அவை முடிவு செய்யும்.

வெளியூர்களுக்கு சட்டசபைக் குழுக்கள் போய் காரியங்களை நடத்துவது நியாயமானதுதான் என்பது எங்களுடைய கொள்கை. ஆகையினாலே தான் முன்பு ஒரு முறை உதகமண்டலத்திலே சட்டசபைக் கூட்டத்தை நடத்தி விவாதித்து நல்ல மசோதாக்களை எல்லாம் கொண்டு வந்து சட்டமாக்கினோம். ஆனால் அப்போது எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் என்ன சொன்னது? "குடல் கருகுகிறது; கும்பி எரிகிறது; கோலேந்திகளுக்குக் குளுகுளு வாசம் ஒரு கேடா?" என்று சொன்னார்கள். அது நன்றாக ஞாபகம் இருக்கிறது. அப்படிச் சொன்னவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள், அன்று எதிர்க் கட்சியிலிருந்து "சட்டசபைக் கூட்டத்தை உதகமண்டலத்திலே கூட்டத் தேவையில்லை" என்று குறிப்பிட்டதைச் சொன்னார்கள். அப்போதும் கூட குழுக் கூட்டங்கள் உதகையில் கூடுவதை ஆட்சேபிக்கவில்லை. அந்த நேரத்திலே, சட்ட மன்றக் கூட்டத்தை அங்கே நடத்தத் தேவையில்லை என்று மட்டுந்தான் சொல்லியிருக்கிறோம். சட்ட மன்றக் கூட்டத்தை அங்கே நடத்துவதன் மூலம் பெருமளவுக்குப் பணம் செலவாகும் என்ற எண்ணத்திலே சொல்லப்பட்டதே தவிர, உதகமண்டலத்திற்குக் குழுக்களே போகக் கூடாது என்று சொல்லவில்லை. அப்போது குழுக்கள் அங்கே நடந்த சமயத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் கூட அதிலே கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சட்ட மன்றக் கூட்டத்தை அங்கே நடத்தத் தேவையில்லை என்றுதான் சொல்லப்பட்டது.

**திரு. கே. விநாயகம் :** குழுக்கள் என்பது சிறிய அளவுக்கு அங்கத்தினர்களைக் கொண்டது. சட்டசபை என்பது—

Assembly is the genus and the committees are the species. ஆகையால் இது போகலாம், அது போகக் கூடாது என்றால் அதிலே அரசியல் கருத்து வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

[1967, ஜூன் 30

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதிலே அரசியல் கருத்து இல்லை ; பொருளியல் கருத்து இருக்கிறது.

**திரு கே. விநாயகம் :** நேற்று முன்தினம் நமது முதலமைச்சர் அவர்கள் எங்களைப் பற்றி ஒரு கூட்டத்திலே சொன்னதாகப் படித்தேன். இப்போதுள்ள எதிர்க்கட்சி பொறுப்புள்ள எதிர்க் கட்சி அல்ல—**It is not a responsible opposition** என்று தாள்களிலே படித்தேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தாள்களிலே படித்தது தவறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : From 20th September 1937 to 1967 it has been the accepted procedure in this House that an hon. Member will have to accept the statement made by the Hon. Minister.

THIRU K. VINAYAKAM ; There is no dispute about your ruling or the integrity of the Ministers for whom we have got the greatest respect. அதற்கல்ல. இனியாவது அந்தத் தவறுகள் நடக்கக் கூடாமல் இருக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதைத்தான் நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை. "இனியாவது" என்று சொன்னால், ஏற்கனவே செய்ததாக ஏற்றுக்கொள்வதாகும். கனம் உறுப்பினர் அவர்கள் கிரிமினல் வழக்குகளில் குறுக்கு விசாரணை நடத்திய பழக்கத்தில் பேசுகிறார்கள்.

**திரு. கே. விநாயகம் :** முதலமைச்சர் அவர்கள் நாங்கள் வழக்கறிஞர்கள் என்று ஒத்துக்கொள்ளும் அளவுக்கு வாதிட முயற்சித்தேன். விடவில்லை. (சிரிப்பு.)

ஒன்றை நான் சொல்லிக் கொள்கிறேன். நாங்கள் பொறுப்புள்ளவர்கள். எதிர்க்கட்சியிலே இருந்தாலும் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். எங்களுக்கு இருக்கிற திறமையை வைத்து — உங்களைப் போல் திறமை வரவில்லை என்ற கருத்து உங்களுக்கு வேண்டுமானால் இருக்கலாம் —நாங்கள் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யும்போது பொறுப்பு இல்லாத எதிர்க்கட்சி என்று சொல்வதா ?

**"I expected them to be a very effective opposition, but they are below the standard."**

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்த மன்றத்திலே இதைப் பற்றிப் பேசுவதினாலே நான் அதைப் பற்றிச் சொன்னால் கவலைப் பட மாட்டார்கள் என்று கருதுகிறேன். நான் சொன்னது, தமிழிலே— "இவர்கள் எதிர்க்கட்சியாக மட்டும் நடக்கவில்லை ; எதிரிக் கட்சியாகவும் நடக்கிறார்கள்" என்பதுதான்.

**திரு. கே. விநாயகம் :** ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல முடியுமா ? எதிர்க் கட்சி என்றால் "எஃபெக்டிவ் அப்போசிஷன்". எதிரிக் கட்சி என்றால், நாட்டைக் காட்டிக் கொடுத்தோமா, வெளிநாட்டுக்காரனுக்காகப் பரிந்து பேசினோமா ? அது மாதிரி ஒரு நிகழ்ச்சி சொல்ல முடியுமா ? நாங்கள் என்ன கம்யூனிஸ்ட் நாட்டைச் சேர்ந்தவர்களா ? சோஷலிஸ்ட் நாட்டைச் சேர்ந்தவர்களா ? அல்லது அமெரிக்க நாட்டுக்கு வால் பிடிக்கிறோமா ?

**Are we members of a party belonging to other Nations or striving to promote the interests of anti-social elements ?**

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் தம்முடைய வாதத்தின் தொடர்ச்சியாக "எதிரிக் கட்சி" என்றால் வெளிநாட்டுக் கட்சியாகத்தான் வேண்டும் என்றார்கள். வெளிநாட்டுக் கட்சி இந்த நாட்டில் இருக்க முடியாது. எதிரிகள் இருக்கலாம் ;





எதிரிக் கட்சிகள் இருக்க முடியாது. எதிரிக் கட்சி என்று சொல்வது, இவர்கள் எதைச் செய்தாலும் எதிர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நடந்துகொள்வதால்தான். எதிர்க்கட்சி என்றால், இவர்கள் சரியான முறையில் நடக்கிறார்களா என்று கண்காணிப்பது என்ற முறையில் பொருள் கொள்ளவேண்டும்.

**திரு. கே. விநாயகம் :** அண்ணாவுக்கு வாக்காடும் சக்தி எப்படி இருந்தாலும் சரி, நான் ஒத்துக் கொள்ளும் அளவுக்கு அவர் திறமை பயன்படவில்லை.

**He has not convinced me beyond reasonable doubt.**

அமைச்சர்கள் அப்போதைக்கப்போது அறிக்கைகள் விடுவது வழக்கம். அவ்வாறு அறிக்கைகள் விடுகிற நேரத்திலே தங்களுடைய இலாகாவை பொறுத்துச் சொன்னால் எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. மற்ற இலாகாக்களில் புகுந்து அதைப் பற்றிச் சொல்லி, அந்த இலாகாவைச் சார்ந்த அமைச்சர்கள் "இல்லை, இல்லை" என்று மறுக்கின்ற நிலைகூட இருப்பது தெரியும்.

ஆக, அதை விட்டு விட்டு அவரவர்களுக்கு உகந்த இலாகாக்களைப் பற்றி மட்டும் அறிக்கைகள் விட்டு விட்டு மொத்தத்திற்கும் முதலமைச்சருக்குப் பொறுப்புத் தருவதுதான் நியாயம் ; அதுதான் மரபு ; அதுதான் கடைப்பிடிக்க வேண்டியது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்த அமைச்சர் எந்த இலாகாவிலே குறுக்கிட்டு அறிக்கை விட்டார் ? எந்த அமைச்சர் அதைப் பற்றி மறுத்தார் ? என்பது பற்றி குறிப்பிட்டு விளக்கமாகக் கூறாமல், தவறான தகவல்களை வைத்துக் கொண்டு இந்த மன்றத்தில் பேசுவது அழகல்ல.

**திரு. கே. விநாயகம் :** கவர்னர் உரை விவாதத்தின் போது நானே குறிப்பிட்டிருக்கிறேன்—7 இன்ஸ்டன்ஸஸ். இப்போது கூட அதை எடுத்துப் பார்க்கலாம். யார் யார் எந்த இலாகாவை மீறி தவறிச் சொன்னார்கள் என்று சொன்னேன். "இனிமேல் நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன்" என்று முதலமைச்சர் அவர்கள் உறுதி கொடுத்திருக்கிறார்கள். இப்போது ஞாபகத்தில் இல்லை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அந்த நேரத்தில் நடைபெற்றது, சட்ட மன்றம் நடக்கின்றபோது "பாலிஸி ஸ்டேட்மென்ட்ஸ்" —கொள்கை விளக்க அறிவிப்புகளைச் சட்ட மன்றத்தில் சொல்லுவதற்கு முன்னாலே பொது மக்களுக்குத் தெரிவிக்கக் கூடாது என்பதைப் பற்றியது தான். அவ்வாறு சொல்லாமல் பார்த்துக் கொள்வதாகச் சொன்னேன்.

**திரு. கே. விநாயகம் :** இனிமேல் இப்பேர்ப்பட்ட சிறிய சிறிய தவறுகள் நடக்காமல் , . . . (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மறுபடியும் நம்முடைய கனம் உறுப்பினர் அவர்கள் நான் எடுத்துச் சொன்ன முறையிலேயே பேசுகிறார்கள். "இனிமேல் அப்படி நடக்காமல்" என்று சொல்வது ஏற்கனவே நடந்ததாக ஒத்துக்கொள்வதற்குச் சமமானதாகும். அதற்காகத் தான் சட்ட மன்றத் தலைவர் அவர்கள் விதி முறையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். எங்களைப் பற்றித் தெரிவித்து நாங்கள் அவ்வாறு பேசவில்லை என்று தெரிவித்த பிறகு நாங்கள் சொல்வதுதான் இறுதியானதாக ஏற்றுக் கொள்ளவேண்டு மென்பது விதி. "மீண்டும் அந்தத் தவறுகள் நடந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று சொல்வதை வழக்கு மன்றங்களிலே சிக்க வைப்பதற்காக வேண்டுமானால் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். நான் நேரடியாக வழக்காடிப் பழக்கம் இல்லையென்றாலும் பல வழக்கறிஞர்களின் பழக்கம் இருக்கிறது. ஆகையால், அந்த வித்தையைத் தயவு செய்து இந்த இடத்தில் உபயோகப்படுத்த வேண்டாம்.

[1967, ஜூன் 30

**திரு. கே. வினாயகம் :** முதல் அமைச்சர் அவர்கள் என்ன சொல்வார்கள் என்பதை முன்கூட்டியே என்னால் சொல்ல முடிகிறது. அந்த வித்தையை இங்கே காட்டாதே என்றார்கள். இந்த வித்தையை வெளியே காட்டக் கூடாது. அதைத்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எந்தெந்த வித்தையை எங்கெங்கு காட்ட வேண்டுமென்பது தெரிந்து, அப்படி முறைப்படி காட்டியதால் தான் வெற்றி எங்களுக்குக் கிடைத்தது என்பதை உறுப்பினர் உணர்வார்களா ?

**திரு. கே. வினாயகம் :** பொதுமக்கள் உங்களுக்கு வெற்றி தேடித் தந்திருக்கிறார்கள் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. இப்படியே நீடித்திருக்குமா என்பது தான் சந்தேகம் . . . .

(There was some noise in the House.)

**THIRU K. VINAYAKAM :** Mr. Speaker Sir, you have got to protect me from this.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது மற்றவர்கள் எந்தவிதமான ஒலியும் எழுப்பி இடையூறு செய்யக்கூடாது.

**திரு. கே. வினாயகம் :** என்று கூறிக் கொண்டு, நான் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை வற்புறுத்துகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையின் மீது சில முக்கியமான ஆலோசனைகளை எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். இன்றைய தினம் எதற்கெடுத்தாலும் லஞ்சம் என்ற அளவிற்கு இருந்து வருகிறது என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது. அது தாலுகா ஆபீசாக இருந்தாலும் சரி அல்லது கலெக்டர் ஆபீசாக இருந்தாலும் சரி, பெரிய அளவிற்கு இருந்து வருகிறது. லஞ்சத்தைத் தொலைத்துக் கட்டுவதற்காக வேண்டி இன்று போலீஸ் இலாகா சார்பிலே இதற்காக வேண்டி ஒரு இலாகாவை ஏற்படுத்தி அதை ஒழிக்க வேண்டுமென்று இருந்து வருகிறது. இருந்தாலும் அதன் மூலம் லஞ்சத்தை ஒழித்துக் கட்டக் கூடிய நிலைமை இருக்கிறதா என்று பார்க்கும்போது அது இன்னும் கொஞ்சம் அதிகப்படியாக போகக்கூடிய அளவிற்குத் தான் நிலைமை இருக்கிறது. ஆகவே அதை ஒரு தனி இலாகாவிற்கு விட்டு அதன் மூலம் லஞ்சத்தை ஒழித்துக் கட்டுவதற்கு பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று ஆள் குறைப்புத் திட்டம் இருக்கிறது. சிக்கனத்தை கையாளவேண்டுமென்று அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும்போது அவர்கள் ஒருவருக்கும் வேலை போகாது, மீண்டும் அவர்களுக்கு வேறு துறையில் வேலைகொடுப்போம் என்ற அளவிற்கு நிலைமை இருந்தபோதிலும் அவர்களுக்கு வேலை கொடுக்கக் கூடிய நேரத்தில் தற்போது படித்துவிட்டு வேலை கிடைக்கவில்லை என்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படிச் செய்தால் இவர்களுக்கு வேலை கிடைக்க இன்னும் இரண்டு ஆண்டுகள் தாண்டிப் போகும் நிலைமை ஏற்படும். ஆகவே இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதில் தீவிர கவனம் செலுத்தியாக வேண்டும்.

அப்படி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க எந்தெந்த விதங்களில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், வேலைகள் கொடுப்பதற்கான வாய்ப்புகளை எப்படி ஏற்படுத்துவது என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கும் இந்த நேரத்தில் என் அபிப்பிராயம் மதுவிலக்கை ரத்து செய்யவேண்டும். மதுவிலக்கை ரத்து செய்வதன் மூலம் பல லட்சக்கணக்கான பேர்களுக்கு அதனால் வேலை கிடைக்கும் என்பது மட்டுமல்ல. அதனால் வருவாயும் ஏற்படும். ஆகவே அந்த அடிப்படையில் நாம் அவசியம் பார்க்கவேண்டும். அந்த மதுவிலக்கின் தன்மை எப்பேர்ப்பட்டது, அதன் குணம் எத்தன்மை வாய்ந்தது என்பதை இருபது ஆண்டு காலமாகப் பார்த்தாகி





விட்டது. ஆகவே இனியும் அதைப் பார்த்துக் கொண்டிருந்தால் அதனால் பலவிதங்களில் தொல்லைகள் ஏற்படும் தன்மையிருக்கிறது. ஆகவே நன்மையைக் கருதி அதை ஒழித்துக் கட்ட வேண்டும்.

அதேபோன்று மார்வாரிகள் சிறு சிறு வட்டிக் கடைகளை வைத்துக் கொண்டு ஏழை மத்தியதர குடும்பங்களில் உள்ளவர்கள் தாங்கள் உடுத்தியிருக்கும் உடைகளையும், தட்டுமுட்டு சாமான்களையும் அந்தக் கடைகளில் வைத்து அதிக வட்டிக்கு கடன் வாங்கி அதற்கு இரையாகும் நிலைமை இருக்கிறது. அதை ஒழித்துக் கட்ட வேண்டுமென்றால் சின்னச் சின்ன வட்டிக் கடைகளை கூட்டுறவு முறையில் ஆரம்பிக்க வேண்டும். அதன் மூலம் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை கொடுக்கும் வாய்ப்பும் ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெறக் கூடிய வயது 55 என்றிருக்கிறது. 55-க்கு மேற்படாமல் 55 வயது என்ற காலம் தான் இருக்க வேண்டும் என்ற தன்மை இருப்பது நல்லது. இன்று ரிட்டயரான பின்பு மிகப் பெரிய உத்தியோகத்தில் இருந்து, பெரிய உத்தியோகஸ்தர்களாக இருந்தவர்கள் ஓய்வு பெற்றதற்குப் பிறகு பெரிய கம்பெனிகளில் தனிப்பட்ட முறையில் பணியாற்றும் தன்மை இருந்து வருகிறது. இதுபோன்ற போக்குக்கு கண்டிப்பாக நாம் இடம் கொடுக்கக் கூடாது என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் இன்று ரிசர்வ் பாங்கில் மிகப் பெரிய அதிகாரியாக இருந்த எச். வி. ஆர். ஐயங்கார் என்பவர் ஓய்வு பெற்ற பிறகு இன்று பாரி அண்ட் கோ-வில் பணியாற்றக் கூடிய அளவிற்கு நிலைமை இருந்து வருகிறது என்பதைப் பார்க்கும்போது அதனால் எவ்வளவு தூரம் நாம் பாதிக்கப்படுகிறோம் என்பதைப் பார்த்தாக வேண்டும். அதே போன்று பலர் இருக்கிறார்கள். ஸவுத் இந்தியன் மில் ஓனர்ஸ் அசோஸியேஷன் செகரட்டரியாக பணியாற்றுகிறவரை எடுத்துக் கொண்டால் ஒரு பொறுப்பான செகரட்டரியாக இருந்தவர்கள் அவர்கள். அவர்கள் இன்று பென்ஷனையும் வாங்கிக் கொண்டு அங்கு பணியாற்றுகிற அளவிற்கு இப்படி இருந்தால் சர்க்காருக்கும் சரி தனியார்களுக்கும் சரி, பொது மக்களுக்கும் சரி பலவித இன்னல்களை ஏற்படுத்தும் நிலைதான் ஏற்படும். இன்று வேலையில்லாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு வேலை கொடுக்கும் முறையில் உதவி செய்யும் என்ற வகையில் நான் என்ன வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறேன் என்றால் 500 ரூபாய்க்கு மேல் பென்ஷன் வாங்கக் கூடியவர்கள் வேறு தனியார் துறையில் வேலை செய்யக் கூடிய அளவிற்கு சர்க்கார் அனுமதி கொடுக்கக் கூடாது என்பது தான் அதில் நான் குறிப்பிட்டிருப்பது. ஆகவே, இதுபோன்ற விஷயங்களில் நாம் தீவிர கவனம் செலுத்துவதின் மூலம் ஓரளவிற்கு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் இந்த அரசாங்கத்தின் லாங்குவேஜ் பாலிசி என்னவென்று திட்டவட்டமாக ஒரு பாலிஸியை வைத்து நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்புவதற்கு அதில் கவனம் செலுத்தி அதை நிறைவேற்றி அனுப்புவது மிகவும் நல்லது.

முக்கியமான தஸ்தாவேஜ்களை கீழ் மட்டத்தில் உள்ளவர்கள், அதிகாரிகள், அதிகாரப் பற்றற்றவர்கள் அழித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது பற்றி கேள்விகூடகேட்கப்பட்டது. பெரிய பதவிப்பொறுப்பில் இருந்தவர்களே செய்த காரணத்தினால்தான் என்ன நடக்கிறது ? இதைத் தொடர்ந்து மேல் மட்டத்தில் மட்டுமல்ல கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் கூட அவர்களை பாதிக்கக் கூடிய காலத்தில் தஸ்தாவேஜ்களை எல்லாம் மூடி மறைக்கக் கூடிய தன்மை அதைக் கொளுத்தும் தன்மை ஏற்படும் ஒரு நிலை வருகிறது என்று சொன்னால் அதற்கான காரணம் ஆரம்பத்திலே இந்த சர்க்கார் பொறுப்பு எடுக்கக்கூடிய காலத்தில் பொறுப்பு வாய்ந்த தஸ்தாவேஜ்களை எல்லாம் கொளுத்திவிட்ட ஏற்கனவே முதல் அமைச்சராக இருந்தவர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதற்குத் தவறிய காரணத்தினால் தான் அவ்வளவு பெரிய மனிதர் செய்ததற்கே ஒன்றும் செய்யவில்லையே ஆகவே நாம் என்ன செய்தாலும் நம்மை ஒன்றும்

கேட்கமாட்டார்கள், நம்மீது நடவடிக்கைகள் எடுக்க மாட்டார்கள் என்று நினைக்கக் கூடிய அளவிற்கு அவர்கள் உதாசீனமாகப் போகக்கூடிய நிலைதான் ஏற்படும். இதில் தீவிர கவனம் செலுத்தி கடுமையான நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். அப்படி எடுக்கத் தவறினால் இந்த ஆட்சிக்கு களங்கம் ஏற்படும் நிலை வரும். அதுபோன்று களங்கம் ஏற்படும் நிலைக்கு இடம் கொடுக்கக் கூடாது.

அதோடு, ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்க முடிவு எடுத்துச் சில இடங்களில் கொடுத்து வருவதைப் பாராட்டுகிறோம். அதே விதத்தில் எல்லா மக்களுக்கும் கொடுக்கக் கூடிய தன்மையில் அந்த முறையைத் தீவிரப்படுத்த வேண்டும். இன்றைய தினம் கேரளத்திலே அந்த மக்கள் எல்லோருக்குமே, எந்த அளவுக்குத் தேவையோ அந்த அளவுக்கு ரேஷனைக் கொடுத்து, 9 கோடி ரூபாய் அளவுக்கு அதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை, மது விலக்கை ரத்து செய்ததன் மூலமாக, அதில் வரக் கூடிய வருவாயைக் கொண்டு சரிக்கட்டும் நிலைமை இருக்கிறது. அதே போன்று இங்கேயும் எல்லா மக்களுக்கும் முழு அளவுக்கு ரேஷனைக் கொடுத்து, அதனால் ஏற்படக் கூடிய நஷ்டத்தை மத்திய சர்க்கார் கொடுக்கவில்லை என்று சொன்னாலும், அவர்களை எதிர்பார்க்காமல், மது விலக்கை ரத்து செய்வதன் மூலமாக அதிகப்படி வருவாயை அடைய வாய்ப்பும் வசதியும் இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று, மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு இன்றைக்கு பஞ்சப் படி போன்றவைகளை உயர்த்தும் நிலைமைகள் இருக்கின்றன. நம் ராஜ்ய சர்க்காரும் அவர்களுக்கு உயர்த்தக் கூடிய நிலைமை ஏற்படும் போது ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கும் அதே போன்று உயர்த்தியாக வேண்டும். இன்றைக்கு விலைவாசி உயர்ந்திருக்கக்கூடிய நேரத்தில் அதையும் சர்க்கார் அவசியம் கவனித்தாக வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நிலத்திலிருந்து திடீர்-திடீரென்று விவசாயிகளை வெளியேற்றக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. அதைத் தடைப்படுத்தும் தன்மையில் ஒருதடை உத்தரவைப் போட்டாகவேண்டும். அப்படி இல்லை என்று சொன்னால், சாதாரண மக்கள், கிராமத்தில் உள்ளவர்கள் உட்பட, நகரத்தில் உள்ளவர்கள் உட்பட, குடியிருப்பு மனைகளிலிருந்து, விவசாய நிலத்திலிருந்து வெளியேற்றப்படும் ஆபத்துப் பெரிய அளவுக்குப் பெருகி வருகிறது என்பதைக் கவனத்தில் வைத்து, இது போன்ற பொது ஜன முக்கியத்துவம் வாய்ந்த விவசாயத் தொழிலாளர்களுக்குச் சாதகமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். அதே போன்று தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் எடுத்துக் கொள்வோமானால், தொழிற்சாலைகளைத் திடீர் திடீரென்று மூடுவதும், அதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படும் நிலைமையும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த நிதிக் கோரிக்கை தேர்தல்கள், அமைச்சர்கள் பற்றியுள்ளது. விவசாயிகளைப் பற்றி இந்த மானியத்தில் எப்படிப் பேசுவது ?

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்க வேண்டும் என்பதற்காக வேண்டி அவர்களுக்கு கவனமூட்டும் தன்மையில் இந்த விவாதத்திலே கூறலாம். அதனால் தான் சொல்லுகிறேன். அதனால் சட்டங்களைத் திருத்தி, மாற்றி, போலீஸ் இலாகா சம்பந்தப்பட்ட சட்டங்களாக இருந்தாலும், ரெவின்யூ ஸ்டாண்டிங் ஆர்டராக இருந்தாலும் , பல சட்டங்கள் வெள்ளைக்காரன் காலத்தில் போட்ட அதே சட்டங்கள் தான் அப்படியே இருந்து வருகின்றன. ஆகவே தான் பல சட்டங்களையும் திருத்தி அமைக்கும் தன்மையில், தொழிலாளர்களுக்குச் சாதகமாகவும் விவசாயிகளுக்குச் சாதகமாகவும் திருத்தி அமைத்து, மேலும் அசல் சட்டங்களையும் அவசியம் பிறப்பித்தாக வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.



**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், ஸார், இந்த டிமாண்டைப் பற்றிப் பேசும்போது இந்த டிமாண்ட் சம்பந்தப்பட்ட விஷயங்களை மட்டும் தான் பேசலாம், மற்றவைகள் சம்பந்தப்பட்ட விஷயங்களை, மதுவிலக்கு முதலான விஷயத்தைப் பற்றி, இந்த டிமாண்டில் பேசுவது நியாயம்தானா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிதிக் கோரிக்கைகளின்மீது பேசும்போது, அந்தந்த கோரிக்கைகளில் அந்தந்தத் துறைகளைப் பற்றித் தான் பேச முடியுமே தவிர, அதற்குப் புறம்பாக காரியங்களைப் பற்றிப் பேசக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

***திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகிற நேரத்தில், இப்போது நடைபெற்றுக் கொண்டு வருகிற அரசும், இந்த அரசை இயக்குகிற அமைச்சர்களும் நாட்டு மக்கள் மத்தியிலே எந்த அளவுக்கு நல்ல உணர்வையும் நல்ல நம்பிக்கையுயையும் இந்த $3\frac{1}{2}$ மாத காலத்திற்குள் உண்டாக்கி யிருக்கிறார்கள் என்பதைப் பற்றி சபையிலே இருக்கிற நாம் மட்டுமின்றி, மக்கள் அத்தனை பேர்களுமே பாராட்டுகிற ஒரு சூழ்நிலை வளர்ந்திருக்கிறது. ஆனால், இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த கனம் எதிர்க்கட்சி உறுப்பினர் வினயகம் அவர்கள் பேசுகிற நேரத்தில், தூக்கம் கலையாத நிலையில் பழைய பாதையையும், இடத்தையும் நினைத்துக் கொண்டு பல கருத்துக்களை இங்கே எடுத்து வைத்தார்கள். அவர்கள் இங்கே விவாதத்தைத் துவக்குவதற்கு முன்பு, முன்பு எதிர்க்கட்சியாக இருந்த நாங்களெல்லாம் என்ன பேசினோம் என்று அதைப் படித்து விட்டு இங்கே வந்து ஒப்பிப்பதாகத் தான் அவர்கள் பேச்சு இருந்தது. அப்போது இருந்த நிலைமைக்கும், இப்போது இருக்கிற நிலைமைக்கும் எவ்வளவு மாறுபாடுகள், உள்ளத்திலே, உணர்விலே ஏற்பட்டிருக்கின்றன என்பதனை உணரலாம். கட்சிக் கண்ணோட்டத்தில் வேண்டுமானால் விவாதித்துக் கொண்டு இருக்கலாமே தவிர, மக்கள் இன்றைய தினம் எந்த அளவுக்கு இந்த அரசை நம்புகிறார்கள்; எந்த அளவுக்கு மக்களிடத்திலே நம்பிக்கையையும், உணர்வையும் இந்த மூன்று மாத காலத்தில் உண்டாக்கி இருக்கிறார்கள் என்பதை, உலகத்திலே இருக்கிறவர்கள், நம்முடைய செயல்களைக் கூர்ந்து கவனிக்கிறவர்கள் பாராட்டுகிறார்கள் என்பதனை இந்தியா பூராவிலிருந்தும் வருகிற ஏடுகளையும், உலக ஏடுகளையும் படிக்கிறவர்கள் உணரலாம். இந்த அமைச்சரவை துவக்கப்பட்ட நேரத்திலேயே "இந்த அமைச்சரவை அடக்கத்தோடும், மக்களுக்குச் சேவை செய்கிற உணர்வோடும் பாடுபடும்" என்ற வாசகத்தை அமைச்சரவையின் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த உணர்வு இப்போது ஏற்பட்டிருப்பது மட்டுமல்லாமல், அந்த அளவுக்குச் சிக்கனத்தையும் கடைப்பிடிக்கிறார்கள்.

உறுப்பினர் வினயகம் அவர்கள் அமைச்சர்கள் சம்பளம் வாங்காதது பற்றி அக்கறையோடு எடுத்துக் கூறினார்கள். சம்பளப் பிரச்னையில் ஒரு பெரிய தத்துவம் அடங்கியிருக்கிறது என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். சம்பளத்தில் 500 ரூபாய் குறைத்துக் கொள்ளுவதோ, 750 ரூபாய் குறைத்துக்கொள்ளுவதோ, பெரிய காருக்குப் பதில் சிறிய கார் வைத்துக் கொள்ளுவதோ, அது அல்ல பிரச்னை. அதனுள் அடங்கியிருக்கும் தத்துவத்தைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பெரிதாகக் கருதுகிறது. காந்தியடிகள் காங்கிரசுக்கு உபதேசித்து வந்ததெல்லாம், "மக்கள் மத்தியில் பழகுகிறவர்கள், மக்கள் பணிக்காகப் பாடுபடுவதாகச் சொல்லுகிறவர்கள், பெரிய மனிதராக ஆகி, பெரிய ஆர்ப்பாட்டங்களோடு சுகவாச வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுகிறார்கள் என்ற எண்ணம் பொது வாழ்வில் ஏற்படக் கூடாது" என்பது தான். அப்படிக் காந்தியடிகள் கருதினாரேயொழிய காந்தியடிகளால் உருவாக்கப்பட்ட கட்சி அந்த நிலைமைகளை வளர்த்ததா என்று பார்த்தால், அப்படி வளர்க்காத காரணத்தினால், "கண்ணீர் விட்டே வளர்த்தோம், சர்வேசா ! இது கருகத் திருவுள்ளமோ ! " என்று சொல்லிக்கொள்ளும் அளவுக்கு அந்தக் கட்சி ஆகியிருக்கிறது. நாங்களெல்லாம் பாராட்டுகிற எங்களுடைய காந்தி, இன்றைய தினம் இந்த நாட்டிலே நல்ல நிலைமையும் நல்ல வாழ்வும் உருவாக வேண்டுமென்று பாடுபட்டுக்

கொண்டு இருக்கிற தென்னாட்டு காந்தி, இந்த அரசைப் பொறுத்த அளவில் அன்றைய தினம் காந்தியடிகள் போதித்த கடமை உணர்வையும், சிக்கன உணர்வையும் கொண்டு, ஏற்றிருப்பது பதவி அல்ல, பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோம் நம்முடைய நிர்வாகத்தில் பொது மக்கள் மத்தியில் நல்ல நிலைமையையும், நல்ல சூழ்நிலையையும் உருவாக்க வேண்டுமென்று சம்பளத்தைக் குறைத்துக் கொண்டும், பெரிய கார்கள் கூடாது என்றும், ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொண்டும் இருக்கிறோம். சென்னையில் வீடு வைத்துக்கொண்டிருக்கிற அமைச்சர்கள் தங்கள் சொந்த வீட்டிலே இருக்க வேண்டும், வீடு இல்லாத அமைச்சர்கள் சர்க்கார் வீட்டில் இருந் தால் போதும் என்று சொல்லி எல்லா விதத்திலும் சிக்கனத்தைக் கடைப்பிடித்து வருகிறோம். அப்படிச் சிக்கனத்தைக் கடைப் பிடிப்பது மட்டுமின்றி, இந்த மூன்று மாத காலத்தில் பொது மக்களின் பிரச்னைகளை எப்படி அணுகியிருக்கிறார்கள் என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டும். முன்பு அமைச்சர்கள் மத்தியில் பிரச்னைகளை எடுத்துச் சொல்வதற்கே 15 நாட்கள், 2 மாதங்கள், 3 மாதங்கள் என்று ஏராளமாக ஆகிக் கொண்டே இருக்கும். பிரச்னைகள் தீர்க்கப்படாது. இப்போது அமைச்சர்கள் வட்டார விவசாய மாநாடுகள் கூட்டுகிறார்கள்: நீர்ப்பாசன மாநாடுகள் கூட்டுகிறார்கள். மாநாடுகளைக் கூட்டி வைத்து அவர்களுடைய கருத்துக்க ளையெல்லாம், நிலப்பிரபுக்களானாலும் சரி, விவசாயிகளானாலும் சரி, அவர்க ளுடைய கருத்துக்களைக் கேட்டு, என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்று அதிகாரிகளை யெல்லாம் வைத்துக் கொண்டு, நல்ல முறையிலே மூன்று மாத காலத்திற்குள் கிட்டத்தட்ட 5-6 மாவட்டங் களில் நல்ல மாநாடுகளை நடத்தியிருக்கிறார்கள். நடத்தியது மட்டுமின்றி முடிவுகளை உடனுக்குடன் எடுக்க வேண்டுமென்றும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

முன்பு நம்முடைய அரசாங்கம் எந்த ஒரு பிரச்னையில் முடிவு எடுத்தாலும், ஒரு உத்தரவு போட வேண்டும் என்று சொன்னால், அந்த உத்தரவு போடுவதற்கே 5, 6 மாதங்கள் ஆகும். ஆனால், இன்றைய தினம் நம்முடைய அமைச்சர்களிடத்தில் பொது மக்கள் தாராளமாக

பி.ப. 1-00. தங்களுக்கு இருக்கும் குறைகளை எடுத்துச் சொல்கிறார்கள். அப்படிச் சொல்கின்ற நேரத்தில் அவை சரி என்று பட்டால், உடனே அதற்கான உத்தரவைப் போடுகின்ற அளவுக்கு இன்றைய அமைச்சரவை நல்ல முறையில் பாடுபட்டுக் கொண்டு வருகிறது. அமைச்சரவை மட்டுமின்றி அரசாங்கம் சரியாக இயங்க வேண்டுமென்றால், அதன் கீழ் பணியாற்று கின்ற அதிகாரிகள், அலுவலர்கள், என்.ஜி.ஓ.க்கள் அத்தனை பேர்களையும் கூட நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களும் நல்ல முறை யில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். அரசாங்கத்தினுடைய தத்துவம் அரசாங்கத்தினுடைய குறிக்கோள் இவை உயர்ந்ததாக இருந்துவிட்டால் போதாது. அந்த தத்துவத்தை உணர்ந்து அதிகாரிகளும், அலுவலர் களும் அதை மனதில் கொள்ளவேண்டும். முன்பு பெரிய பெரிய அதிகாரி களெல்லாம், ஐ.ஏ.எஸ்., ஐ.ஸி.எஸ். அதிகாரிகளெல்லாம் பிரிட்டிஷ் பரம்பரையில் உருவாக்கப்பட்டு, காங்கிரஸ் பரம்பரையில் வளர்க்கப்பட்டு வந்தவர்களெல்லாம் அந்தவிதமான ஒரு சுபாவத்தைப் பெற்றிருந்தவர்க ளெல்லாம் இன்றைக்கு இந்த அரசின் தத்துவத்தையும், அரசின் நல்ல நோக்கத்தையும் புரிந்துகொண்டு அவர்கள் செயல்படுகின்ற பாங்கினை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உணவு உற்பத்தியை அதிகரிப்பதைப் பொறுத்த அளவிலே, கொள்முதலைப்பொறுத்த அளவிலே ஒரு மாத காலத்திற்குள் இந்த அரசாங்கம் 4 லட்சம் டன் கொள்முதல் செய்திருக்கிறது என்று சொன்னால், அது சாதாரணப் பிரச்சினை அல்ல. 4 லட்சம் டன் நெல்லைக் கொள்முதல் செய்ததுமட்டுமல்லாமல் உணவு உற்பத்தியை எப்படிப் பெருக்கலாம் என்பதற்காக உணவு அமைச்சரகமும் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இன்றையதினம் எடுத்துக்கொண்டு வருகிற நடவடிக்கை, நமக்கு அளித்திருக்கின்ற விவரங்கள் இவைகளை வைத்து இந்த ஆண்டுக்குள் கிட்டத்தட்ட 17 லட்சம் ஏக்கர் பூமியில் விவசாயத்தைப் பெருக்கலாம் என்ற விளக்கமும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு அதிகாரிகள் எல்லோரும் நாட்டு வாழ்விலே பொது நல நோக்கத்துடன் பாடுபடுகிற நம்முடைய அரசுக்குத் துணை நிற்கிறார்கள் என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது.



உதகமண்டலத்தைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். உதகமண்டலம் தமிழ் நாட்டிலே நாம் பெற்றிருக்கிற அருமையான சொத்து. அதை எப்பொழுதுமே நாங்கள் இகழ்ந்து பேசியதில்லை. உதகமண்டலத்திற்கு அருகிலேயே போகக் கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை. உதகமண்டலம் என்பது எங்கேயோ ஆப்ரிக்கா பக்கம் இருக்கிற ஒரு பிரதேசம் என்ற கருத்தினை திராவிட முன்னேற்றக் கழகம் 1952-லும் கொண்டதில்லை, 1957-லும் கொண்டதில்லை, 1962-லும் கொண்டதில்லை. எப்பொழுதும் கொண்டதில்லை. உதகமண்டலம் நம்முடைய சொத்து, அங்கு இருப்பவர்களெல்லாம் நம்முடைய சகோதரர்கள், தமிழ் நாட்டி னுடைய எல்லாப் பகுதியும் எப்படி வளரவேண்டும் என்று நாம் விரும்பு கிறோமோ அதைப் போலவே அந்தப் பகுதியும் செழித்துச் சிறப்பாக வளரவேண்டும் என்பதற்காகத் தான் நம்முடைய அரசு ஜெர்மன் நாட்டு நிபுணர்களைக் கலந்து அங்கே உருளைக்கிழங்கை எப்படி அதிகமாக உற்பத்தி செய்யலாம், அபிவிருத்தி செய்யலாம் என்றெல்லாம் புதிய திட்டங்களைத் தீட்டி உதவுவதற்கு முன்வந்திருக்கிறது. உதகையின் பேரில் எங்களுக்கு ஒரு கோபமும் இல்லை. சட்டமன்றம் உதகமண்டலத்தில் கூடவேண்டுமென்றால், இங்கே இருக்கிற சட்டமன்ற அதிகாரிகள், அலுவலர் கள், மற்ற துறையிலுள்ள அதிகாரிகள் அத்தனை பேர்களும் செல்ல வேண்டும். ஒவ்வொரு டிபார்ட்மெண்டிலும் இருக்கிற செகரடரி அல்லது டெப்யூடி செகரடரி இப்படி ஏறக்குறைய ஒரு அரசாங்கமே அங்கே போய் இருக்கவேண்டுமென்றால், அதற்கு எவ்வளவு செலவாகும் என்ற கணக்கில் தான் திராவிட முன்னேற்றக் கழகம் அந்த ஊதாரிச் செலவு வேண்டாம் என்று சொன்னதே தவிர, உதகமண்டலத்தின் மீது நண்பர் விநாயகம் அவர்கள் கருதுவதுபோல எங்களுக்கு ஒரு கோபமும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சி என்று குறிப்பிட்டார்கள். நான் முன்னமேயே அதைத் தான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பேசுவதற்கு வேறு விஷயம் இல்லை என்றால் நாங்கள் முன்பு பேசிய பேச்சை யெல்லாம் படித்துவிட்டு, அதி லிருந்து ஏதாவது எடுத்து அப்படியே இங்கு வந்து ஒப்புவிக்க வேண்டாம். முன்னாள் முதல் அமைச்சர் பக்தவத்சலனார் அவர்கள் எங்கள் மீது பேசிய வார்த்தைகள் பேரவையின் ஏடுகளை எடுத்துப் பார்த்தால் நன்றாகத் தெரியும். எவ்வளவோ பேசியிருக்கிறார்கள். நாங்கள் எவ்வளவோ பொறுமையோடு நடந்து கொண்டிருக்கிறோம். வெளியார் பாராட்டுகின்ற தன்மையில் நடந்துகொண்டிருக்கிறோம். அப்பொழுது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த நாவலர் அவர்கள் பேசும்பொழுது, படித்து விட்டுப் பேசவேண்டும் என்றெல்லாம் முன்னாள் முதல் அமைச்சர் கூறி இருக்கிறார்கள். இப்படி எவ்வளவோ சொற்களை எங்கள் மீது வீசி யிருக்கிறார்கள். இருந்தாலும் நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோது முதல் அமைச்சர் பேசுகிறார் என்ற அளவிலே இருந்தோம். இன்றைய தினம் இருக்கிற அரசும் சரி, அந்த அரசைச் சார்ந்திருக்கிற நாங்களும் சரி எல்லோரையும் மதிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால், கொள்கை பற்றிய விவாதத்தில் தான் கருத்து வேறுபாடு வருமே தவிர, மற்றபடி தனிப்பட்ட முறையில் எல்லோரையும் மதிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த அமைச்ச ரவை முன்பிருந்த அமைச்சரவை போல் இல்லாமல் மக்களுக்குப் பாடு படுகின்ற அமைச்சரவை, சுயலாபம் தேடாமல், சுயநல நோக்கம் கொள்ளாமல், ஆடம்பரம்தான் மந்திரிப் பதவிக்கு அழகு என்று எண்ணாமல், பொது மக்களுக்குச் சேவை செய்வதற்கான வாய்ப்பினை பெற்றிருக்கிறோம் என்ற நல்ல கருத்தோடு பாடுபட்டுக் கொண்டு வருகிற மந்திரி சபையாகும். இந்த மந்திரி சபையினுடைய ஊக்கத்தையும், உள்ள நிறைவையும், சிக்கன நடவடிக்கைகளையும் உணர்ந்து இந்த மந்திரிசபையோடு இணைந்து அதிகாரிகள் பாடுபடுகிறார்கள். மக்களால் உருவாக்கப்பட்ட இந்த மந்திரிசபை வாழ்க, அவர்களுடைய பண்பை உணர்ந்து பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்கு எங்களுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மான்யக் கோரிக்கையை வரவேற்று, என் னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. கோ. பூவராகன்** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்திலே தேர்தல் சம்பந்தமான மானியக் கோரிக்கையும், அமைச்சரவை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையும், இரண்டும் ஒன்றாக விவாதிக்கப் படுகிறது. முதலாவதாக தேர்தல் என்ற மானியக் கோரிக்கையிலே ஒரு சில வார்த்தைகள் சொல்லலாம் என்று நான் கருதுகிறேன். இனி வர இருக்கிற தேர்தல் நகர மன்றத் தேர்தல். நகர மன்றத் தேர்தல் நவம்பர் மாதத்தில் நடக்க வேண்டும். ஆனால், இதுபற்றி இப்பொழுது பத்திரிகையிலே வந்த செய்தியைப் பார்த்தோமானால், இந்தத் தேர்தல் நவம்பர் மாதத்தில் நடக்கப் போவதாக இல்லை. இன்றைய தினம் ஆளும் கட்சியிலே இருக்கிற மேல் அவையில் ஒரு உறுப்பினர் பொறுப்பிலே இருக்கிற ஒருவர் கோவையிலே இந்த நகர மன்றத் தேர்தல்கள் இந்த ஆண்டு நடப்பதாக இல்லை என்று அறிவித்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து நகராட்சித் துறை அமைச்சராக பொறுப்பேற்றிருப்பவர் இந்த ஆண்டு நடப்பதாக இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பொறுப்பை அவர்கள் வைத்திருந்தாலும், தேர்தலை எப்பொழுது நடத்த வேண்டும் என்ற பொறுப்பு, அது எப்பொழுது நடக்கும் என்று அறிவிக்கின்ற பொறுப்பு முதல் அமைச்சர் அவர்களிடத்தில் இருக்கிறது. ஆகவே, முதல் அமைச்சர் அவர்கள் தங்களுடைய உரையில் எப்பொழுது இந்தத் தேர்தல் நடக்க இருக்கிறது என்பதைப்பற்றி அறிவிப்பார்கள் என்று நான் கருதுகிறேன். தேர்தலை தள்ளிப்போடுவதற்கு முக்கியமான காரணம் அவர்கள் சொல்லுவது என்னவென்றால், இன்னும் வார்டுகள் பிரிக்கப்படவில்லை வாக்காளர் பட்டியல் புதுப்பிக்க வேண்டிய, சேர்க்கவேண்டிய நிலை இருக்கிறது என்றெல்லாம் சொல்லி இருக்கிறார்கள். பத்திரிகையிலே வந்த செய்தி அது தான். வார்டுகளை திருத்தி அமைக்கவேண்டும் என்பதைப் பொறுத்த அளவிலே, வாக்காளர் பட்டியலைப் புதுப்பிக்கவேண்டும் என்பதைப் பொறுத்த அளவிலே, சென்ற ஓராண்டு காலத்தில் இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து, பல நகர மன்றங்களில் அவ்வாறு வார்டுகள் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 2, 3 மாதங்களுக்கு மேலே இருக்கிறது. ஜனநாயகத்தில் தேர்தல் தான் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய ஒன்று. அப்பொழுது நம் நாட்டிலே இருக்கக்கூடிய பஞ்ச நிலைமையை வைத்து எதிரிகள் நம் நாட்டை ஆக்கிரமிப்பு செய்த நிலையை வைத்து அன்றைய தினம் முதலமைச்சராக இருந்தவர் பொதுத் தேர்தலைத் தள்ளிப்போடவேண்டும் என்று சொன்னார்கள். அப்பொழுது, பொறுப்பிலிருக்கிற காங்கிரஸ் அமைச்சர்கள் தேர்தலைத் தள்ளிப் போடுவதற்கு இல்லை, அது ஜனநாயகத்தை இழப்பதாக இருக்கும், தேர்தலை நடத்தியே தீர வேண்டும் என்று சொன்னார்கள். இப்பொழுது ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் தேர்தலை தள்ளிப் போட வேண்டுமென்று சொன்னபொழுது, அப்போது ஆளும் கட்சியில் இருந்தவர்கள் தேர்தலைத் தள்ளிப் போடக்கூடாது என்று சொன்னார்கள். ஆகவே, அந்த நிலையிலே நகரமன்ற தேர்தலைத் தள்ளிப்போட வேண்டிய அவசியமில்லை, நவம்பர் மாதத்திலேயே தேர்தல் நடத்த ஆயத்தக்கூறுகள் இருக்கின்றன.

அடுத்து இந்த அவையைப் பொறுத்த அளவிலே, நமது சட்டமன்ற முதல்வர் அவர்கள் சட்டத்தைவிட சம்பிரதாயத்திற்கு அதிக மதிப்புக் கொடுக்க வேண்டும், எல்லாவற்றையும், நடைமுறையில் வருகின்ற அத்தனையையும், சட்டத்தில் கொண்டுவந்து வைத்துவிடமுடியாது என்று சொன்னார்கள். அது எல்லோரும் ஒத்துக்கொள்ளக்கூடிய ஒன்றாக இருக்கிறது. ஆனால், முதல் அமைச்சர் அவர்கள் சம்பிரதாயத்தைப் பற்றி பேசும்பொழுது கன்வென்ஷன் கன்வீனியன்ஸைப் பொறுத்து இருக்கிறது என்று சொன்னார்கள். வேறு பிரச்சினையைப் பற்றிப் பேசக்கூடிய சந்தர்ப்பத்தில் அப்படிச் சொன்னார்கள். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், சட்டமன்றத்தில் சம்பிரதாயத்திற்கு அதிகமாக மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர்கள் வெளியே பேசும்பொழுது கொள்கை அளவிலே அல்லது நடைமுறை அளவிலே எதுவாக இருந்தாலும், அது பற்றி ஒரு முடிவு எடுப்பதற்கு முன்னாலே அதை அறிவிப்பதை நிறுத்திக் கொள்ளவேண்டும். முடிவெடுப்பதற்கு முன்னால், பரிசீலனையில் இருக்கிறது, பொதுவாக





இதை யெல்லாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். இந்த இலாக்காவை எடுக்கப் போகிறோம், இந்த இலாக்கா இல்லை, இவர்களெல்லாம் போய் விடுவார்கள், அவர்களெல்லாம் போய்விடுவார்கள் என்றெல்லாம் சொல்கிற நிலைமை இருக்குமானால், நிர்வாகத்தில் இருப்பவர்கள் வேலை செய்யமாட்டார்கள்.

இன்றைய நிலை அவ்வாறு இருக்கிறது. எந்த இலாக்கா இருக்குமோ, எந்த இலாக்கா எடுக்கப்படுமோ, எங்கே பணியாற்றுகிறவர்கள் எடுக்கப் படுவார்களோ, இவர்கள் இருப்பார்களோ, இருக்க மாட்டார்களோ என்கிற பயம்தான் இருக்கிறது. இவற்றை யெல்லாம் பரிசீலனை செய்யவேண்டியது அவசியம்தான்; சிக்கனச் சீரமைப்பு அவசியம் தான். ஏற்கெனவே முன்பு இருந்த அரசாங்கம் இதற்காக ஒரு குழு அமைத்துப் பரிசிலனை செய்திருக்கிறது. அந்த அளவில் அதைத் தொடர்ந்து நடத்துவது வரவேற்கத்தக்கது. ஆனால், சிக்கனம், சிக்கனம் என்று சொல்லிக் கொண்டு, அத்தனை அதிகாரிகளையும் அனுப்பிவிடுவது என்பது சரியாகாது. அதிகாரிகள் கண்ணீர் விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இன்றைக்கு ரெவின்யூ இலாகாவிலே கோட்டாட்சி அதிகாரிகள் கீழ் மட்டத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். தாசில்தார் மட்டத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர்களுடைய சர்வீஸ் என்ன? 5, 6 அல்லது 7 வருஷங்கள், அல்லது அதற்குமேல் சர்வீஸ் ஆனவர்கள், அவர்களுக்கு இனிமேல் உத்தியோக உயர்வு உண்டா என்கிற நிலை இல்லை. அதே போன்றுதான் போலீஸ் இலாகாவை எடுத்துக் கொண்டால், அங்கேயும் இப்படிப்பட்ட நிலைதான் இருக்கிறது. சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் இந்த அரசாங்கம் சிலருக்கு உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெறும் நிலை வந்தும், அவர்களுடைய உத்தியோக காலத்தை நீட்டிக் கொடுக்கவும், திரும்ப உத்தியோகத்தில் எடுத்துக் கொள்ளவும் செய்திருக்கிறது. இப்படி இரண்டுவகையில் செய்வது பொருத்தமாக இருக்குமா என்று அமைச்சர் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றைக்குப் பஞ்சாயத்துக் கூட்டுமன்றங்கள், இன்னும் சில இலாக்காக்கள், இவற்றில் பணியாற்றும் பணியாளர்கள் இருக்கமாட்டார்கள் என்று சொல்லும் நிலையில் இருக்கிறது. அது பற்றிப் பரிசீலனையில் இருக்கலாம். பரிசீலனை முடிந்து, அமைச்சர்களெல்லாம் கையெழுத்திட்ட பிறகு அதைத் தெரிவிக்கலாம். பத்திரிகை மூலம் தெரிவிக்கலாம். அதன் பிறகு பத்திரிகை நிரூபர்களிடம் சொல்லுவதில் தவறு இல்லை. ஆனால், ஒவ்வொரு இலாக்காவாகச் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். கனம் பொதுப்பணித் துறை அமைச்சர், திரு. விநயகம் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பியபோது, யார் குறிப்பிட்டார்கள் என்று கேட்டார்கள். நான் பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துச் சொல்லுகிறேன். திருச்சியிலே ஒரு கூட்டத்திலே கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் ஒரு படித் திட்டத்தை ஜூலை 1-ம் தேதி முதல் செயல்படுத்த இருக்கிறோம் என்று அறிவித்தார்கள். நான் நினைக்கிறேன் அந்த இலாக்காவிற்கு அவர்கள் பொறுப்பில்லை என்று. இருந்தாலும் அவர்கள் திருச்சியில் அதைச் சொன்னார்கள். அதே நேரத்திலே மதுரையில் முதல் அமைச்சரிடம் அது பற்றிக் கேட்கப்பட்டபோது, அவர்கள் "என்னுடன் உணவு அமைச்சர் இருக்கிறார்கள், அவர்கள் சொல்லுவார்கள்" என்று, குறிப்பிட்டார்கள். இந்த மாதிரி நிலைமை இருப்பது சரியாகாது. பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துக் கொண்டுதான் நான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : மே தின விழாக் கூட்டத்தில் கோவையில் முதல் அமைச்சர் ஒரு படி அரிசி போடப்படும் என்று சொன்னபிறகு தான் நானும், மந்திரிசபையின் கூட்டுப் பொறுப்பு என்ற முறையில், முதல் அமைச்சர் சொன்னதைச் சொன்னேன்; அவர்களை முந்திக் கொண்டு சொல்லவில்லை.

**திரு. கோ. பூவராகன்** : நான் சொல்லுவது, கோவையிலும், சென்னையிலும் படி அரிசி போடுவது பற்றியது அல்ல, திருச்சியில் அமைச்சர் ஜூலை 1-ஆம் தேதி முதல் ஒரு படி அரிசி போடுவதாகச் சொன்னதைப் பற்றிக் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** செய்திக் குறிப்புத் தவறானது ; முன்னாள் அமைச்சர் திருச்சியில் யாரிடத்திலும் கேட்டார்களா ?

**திரு. கோ. பூவராகன் :** செய்திக் குறிப்பில் காட்ட முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** செய்திக் குறிப்பில் காட்டினாலும், அமைச்சர் அப்படிப் பேசினார்கள் என்று செய்திக் குறிப்பில் இருப்பதை, இந்தப் பேரவையில் சொல்ல முடியாது. அமைச்சர் இந்தப் பேரவையில் எதைச் சொல்லுகிறார்களோ அதுதான் உண்மையானது என்று கொள்ள வேண்டும்.

**திரு. கோ. பூவராகன் :** அமைச்சரவர்கள் செய்திக் குறிப்பு தவறு என்று சொல்லுவதுதான் முடிவாக இருக்கும் என்று சொல்லிவிட்டால் விட்டுவிட வேண்டியதுதான். ஆனால், காட்டுவதற்கு முடியும் என்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நவசக்தியிலா ?). நவசக்தியில் இல்லை.

* * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் தாம் இன்ன விதமாகச் சொன்னதாகச் சொல்லுகிறார்கள். உறுப்பினர் அதை மறுத்துச் சொல்ல முடியாது. பத்திரிகையின் வாயிலாகவும் மறுத்துச் சொல்ல முடியாது. **If you cannot say something, you cannot put it into the mouth of somebody else or through the paper and say the same thing.** அடுத்த கருத்துக்குப் போங்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, உறுப்பினர் இப்பொழுது ** என்று சொன்னது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை நான் கவனிக்கவில்லை. என் காதில் விழவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால், அதை பேரவை நடவடிக்கை பதிவேட்டிலிருந்து விலக்கிவிட வேண்டும். பத்திரிகைகளிலும் வெளிவராது.

**திரு கோ. பூவராகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களைவிட அமைச்சர்கள் அதிகமான பொறுப்புள்ளவர்கள். அதனால் தான் சட்ட மன்றத் தலைவர் அவர்களும் அவர்கள் சொல்லுவதை அப்படியே எற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், எங்களுக்குக் கிடைக்கும் தகவல்கள், அரசாங்கத்தின் மூலம் கிடைப்பதில்லை. ஆங்காங்கே தொகுதியில் பொதுமக்கள் கொடுக்கும் செய்திகள் செய்தித்தாள் மூலம் கிடைக்கும் செய்திகள் தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர்கள் சொல்வதை வெளியில் நீங்கள் எற்றுக் கொள்ள வேண்டும் என்பதல்ல. இந்தப் பேரவையில் அதுதான் இறுதியானது. அதைமறுத்து நீங்கள் முச்சந்தியில் எதை வேண்டுமானாலும் பேசிக் கொள்ளலாம். ஆனால், இந்தப் பேரவையில் அதுதான் இறுதியானது ; அதை கூட்டவோ, குறைக்கவோ கூடாது.

**திரு. கோ. பூவராகன் :** ஆனாலும், சில விஷயங்களை வெளியிலே சொல்லுவதில் பலன் கிடையாது. சட்ட மன்றத்திலே கூறப்பட்டால் தான் முதல் அமைச்சர் கவனத்திற்கு வந்து, மேலும் அப்படிப்பட்ட செய்திகள் வராமல் இருக்க வசதியாக இருக்கும். அதனால் தான் சந்தர்ப்பம் இருக்கும் நேரத்தில் அவற்றை வெளியிட வேண்டியிருக்கிறது. சில நாட்களுக்கு முன்புகூட முதல் அமைச்சர், மேல் அவையில் சொன்னார்கள் என்று கருதுகிறேன். இப்பொழுது இருக்கும் நாட்டு நிலைமை தெரியும். சீனாக்காரர்கள் நம்முடைய தூதுவர்களை என்ன நிலைக்கு ஆக்கியிருக்கிறார்கள் என்பதை நன்கு உணர்ந்திருப்பவர்கள். தேசப் பற்று மிகுந்தவர்கள் ; ஒரு முறை மேலை நாட்டுக்குச் சென்றிருந்த போது, "நான் இந்தியன் என்பதில் பெருமைப்படுகிறேன் ; இந்தியர்கள்

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டன





நல்லவர்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லியிருப்பவர் இன்றைய தினம் தேசப்பாதுகாப்புக்காக மத்திய சர்க்கார் எடுக்கும் முழு முயற்சியில் பங்கு கொண்டிருக்க வேண்டும். அல்லாமல், ராணுவத்திற்குச் செலவழிக்கும் தொகையில் 100 கோடியைக் குறைத்துக் கொண்டு, மாநிலத்திற்கு, பற்றாக்குறை இருக்கும் இடத்தில் அதைப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். பொது மக்கள் இதைப் படிக்கிறார்கள். முதல் அமைச்சரைப் பற்றி என்ன நினைப்பார்கள்? முதல் அமைச்சர் தான் சொல்ல வேண்டும். மேலும் சொல்ல நான் விரும்பவில்லை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மேலவையில் நான் பேசியதை நம்முடைய கனம் உறுப்பினர் கூர்ந்து கவனித்ததற்கு நன்றி. நான் பேசியது முழுவதையும் அவர்கள் கவனித்திருந்தால், இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பியிருக்க மாட்டார்கள். அன்னியப் படையெடுப்பைத் தவிர்க்க ஒவ்வொருவனும் வீரன் ஆகவேண்டும், ஒவ்வொரு வீடும் பாசறை ஆக வேண்டும் என்று குறிப்பிட்டேன். சீரமைப்புச் சிக்கனங்கள் இராணுவத் துறையிலும் செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னேன். அன்னிய படையெடுப்பால் வரும் தீங்குகளை நான் கருதாதது போல கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் 100 கோடி ரூபாய் அளவுக்குச் சிக்கனம் தேவை என்று சொன்னேன். பொறுப்பில் இருக்கும் பேரரசே அவர்களுடைய நிதி நிலை அறிக்கையில் 6 கோடி ரூபாய் அளவுக்குச் சிக்கனம் செய்திருக்கிறார்கள். அளவுதான் வித்தியாசம்.

**திரு. கோ. பூவராகன் :** கேரளாவில் என்ன நடக்கிறது ? சீனாவின் அக்கிரமத்தைப் பற்றி விவாதிக்கிறார்கள். நாம் அந்த நிலைக்குப் போக வேண்டிய அவசியமில்லை. என்னைப் பொறுத்த அளவில் முதலமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கங்கள், அறிக்கைகள் கொடுக்கும்போது மற்ற அமைச்சர்களைக் கலந்தாலோசித்து ஒருவர் சொல்ல வேண்டுமேயல்லாது ஒவ்வொருவரும் சொல்வது நல்லது அல்ல என்று சொல்லிக் கொள்வேன்.

அதோடு, நிர்வாகச் செலவைக் குறைத்துவிட்டதாகச் திரு. அரங்கண்ணல் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் மந்திரிகள் சம்பளத்தைக் குறைத்துக்கொண்டார்கள். சிறிய கார்கள் வைத்திருக்கிறார்கள். அவரவர் வீடுகளிலேயே இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுடைய வீடுகளாகவே இருந்தாலும்கூட, அவை அரசாங்கப் பணத்தைக் கொண்டு விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கப் பணியாளர்களையும் பணத்தையும் வைத்துக் கொண்டு விஸ்தரிப்புச்செய்திருக்கிறார்கள். . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் அந்தத் துறைக்குப் பொறுப்புள்ளவன் என்ற முறையில் விளக்க விரும்புகிறேன். வீடுகள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதை இன்னும் விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். வீடுகளில் அமைச்சருக்குரிய அலுவலகம், பார்வையாளர்களுக்கு இடம், பாதுகாப்புக்காக இருக்கும் போலீஸ்காரர்களுக்கு உரிய இடம், இவைகளெல்லாம்—சர்க்கார் அதிகாரிகள், சர்க்கார் செலவிலேயே இவைகளைச் செய்துகொள்ளலாம் என்று அறிவித்தும்—நாங்கள் வேண்டிய இடங்களை விஸ்தரித்துவிட்டு, பணத்தை அரசாங்கத்தில் கட்டிவிட்டோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** முன்னாள் அமைச்சர் பூவராகன் அவர்கள் . . .

**THIRU K. VINAYAKAM :** Under what rule they get up and speak ?

**MR. SPEAKER :** While a member is speaking, interruptions for asking elucidation can be made with the permission of the Speaker. If a Member interrupts, he is not permitted unless the member who is speaking yields. If a member of the Cabinet interrupts, I ask the Member who is speaking to yield.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் உறுப்பினரவர்கள் மந்திரியாயிருந்தபொழுது சர்க்கார் பங்களாவில் பெரிய விருந்தினர்களுக்குத் தனி விடுதி கட்டினார்கள். அது சரியா ?

**திரு. கோ. பூவராகன் :** சர்க்காருக்குச் சொந்தமான இடத்தில் கட்டினேனே தவிர, எனக்குச் சொந்தமான இடத்தில் கட்டிக்கொள்ளவில்லை. இப்போது அந்தக் கட்டிடம் அங்கேயிருக்கிறது. இப்பொழுது எழுகின்ற பிரச்சினை சொந்தமான இடத்தில் கட்டிக்கொள்வதைப்பற்றித்தான். சர்க்கார் இடங்களில் கட்டிக் கொண்டால், விஸ்தரித்தால் அது பின்னால் வருபவர்களுக்கும் பயன்படும். அதைக் கட்டியவர்கள் அதை எடுத்துக்கொண்டு போக முடியாது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் கூறியதைக் கேட்டபிறகு ஒரு வார்த்தை பாராட்டுகிறேன் என்று சொல்லி இருக்கலாம்.

**திரு. கோ. பூவராகன் :** மேலும் அமைச்சரவையில் சிக்கனங்கள் கைபிடிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு அமைச்சரகத்தைப் பொறுத்த வரையிலும் எந்த அளவுக்குச் சிக்கனம் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது என்று முதலமைச்சரவர்கள் சொல்ல வேண்டும். ஒவ்வொரு அமைச்சர் அலுவலகத்திலும் பெரிய பெரிய அதிகாரிகள், கெஜட்டட் ஆபீசர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதற்குக் கீழே மூன்று எழுத்தர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். எந்த அளவுக்கு இவர்கள் சிக்கனத்தைக் கடைப்பிடித்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அவர்கள் இதற்கென்று தனியாக நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. முன்னால் வேறு எந்த இலாக்காவிலே வேலை செய்தார்களோ, அங்கு வாங்கிய சம்பளத்தை வாங்கிக் கொண்டுதான் இந்தக் காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கோ. பூவராகன் :** அவர்களுடைய சேவை வேறு இலாக்காவிலே இருந்தால் வேலை நல்ல முறையிலே நடக்கும் என்ற காரணத்தினால் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பணப்பிரச்னைக்குப் போகவில்லை.

**திரு. கோ. பூவராகன் :** இவ்வாறு பலமுறைகளிலே இன்றையத் தினம் இந்த அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கையைப் பார்த்தால் வெளியிலே அதிகாரிகளுக்கோ, பொது மக்களுக்கோ ஒரு நல்ல, நிச்சயமான நிலையிருக்கின்றதா என்றால், அந்த நிலை இன்று இல்லை. பொதுவாக அமைச்சர்கள் வெளியிலே போகின்ற பொழுது போகவேண்டாமென்று சொல்லவில்லை, போக வேண்டியதுதான், ஆனால், போகின்றபொழுது ஒரு ஊரிலே ஒரு நிகழ்ச்சியை வைத்துக் கொண்டு, கலவரங்கள் ஏற்படுவதற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்கிறார்கள் என்று கூறுவது பொருத்தமாயிருக்கின்றது. இதை நான் முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அவர்கள் விசாரித்துப் பார்த்து எது நியாயம் என்று பார்க்க வேண்டும். கள்ளக்குறிச்சிக்குப் பக்கத்திலே ஒரு சிறு கிராமம், பவுஞ்சிப்பட்டு என்று பெயர், அந்தக் கிராமத்திற்கு ஒரு அமைச்சரவர்கள் வந்தார்கள். அவர்கள் அந்த இடத்திற்குப் போவதாகவே திட்டமில்லை. கள்ளக்குறிச்சிக்குத்தான் போவதாக இருந்தது. ஆனால் பவுஞ்சிப்பட்டுக்கு அவர்களை அழைத்துச் சென்றார்கள். அந்தக் கிராமத்திலே உள்ள இந்துக்களும், முஸ்லீம்களும் நன்றாகப் பழகிவந்த இடத்திலே இன்றையத் தினம் ஒருவருக்கொருவர் மனக்கசப்பை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு நடந்திருக்கிறது. அந்த ஊரில் இரண்டு தெருக்கள் இருக்கின்றன. ஒன்று மசூதித் தெரு. இரண்டாவது பிள்ளையார் கோயில் தெரு. பிள்ளையார் கோயிலிலிருந்து சுவாமி மசூதி தெருவுக்கு வருகின்றபொழுது அங்கே வாத்தியங்கள் முழங்குவது இல்லை. அது நம்முடைய



நாட்டிலே வழக்கமாயிருக்கிறது. ஆனால் பிள்ளையார் கோயில் தெருவிலே அடித்துக் கொண்டு செல்ல ஒரு சங்கடமும் இல்லை. இப்போது இவர்கள் அங்கே போய் அதிகாரிகளை அழைத்து வந்து அந்த பிள்ளையார் கோயில் தெருவிலும் அடிக்கக் கூடாதென்று கல்போட்டார்கள். அதிகாரிகள் சொல்லிப் பார்த்தும் கேட்காமல் அந்த இடத்திலே கல் போடு என்று சொன்னார்கள். அதனால் பரவாயில்லை என்றும் சொன்னார்கள். அந்த இடம் தத்தம் பொது மக்களுக்குச் சொந்தம். அந்த ஊரில் விசேஷம் ஒன்று வந்தது. கல் போட்டது தெரியாத பக்கத்து ஊர்க்காரர்கள் வாத்தியங்களை எப்பொழுதும் போல் பிள்ளையார் கோயில் தெருவிலே முழங்கினார்கள். உடனே முஸ்லீம்கள் சென்று தடுக்கக் கலவரம் நடந்தது. இன்றையத் தினம் வேறுவிதமாக அங்கு நடந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். கலவரங்கள் ஏதாவது எழுந்தால் அரையணா கார்டு எழுதிப் போடுங்கள் நான் பார்த்துக்கொள்ளுகிறேன் என்று பெரிய நிலையிலே இருக்கின்ற அமைச்சரவர்கள் கூறினார்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கார்டு இப்பொழுது அரையணா இல்லை. ஒரு அமைச்சர் என்று சொல்கிறார். அந்த அமைச்சர் யார் என்று கூற முடியுமா ?

**திரு. கோ. பூவராகன் :** கார்டு விலைபற்றி பேசவில்லை. அவர் சொன்னதை அப்படியே சொல்லுகிறேன். சாதிக் பாட்சா அவர்கள். . .

***மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் சொல்லியது கோரிக்கைகளைப்பற்றி எழுத வேண்டுமானால் கார்டில் அனுப்புங்கள் என்று சொன்னேனே தவிர, உறுப்பினர் சொல்வது போல குழப்பங்களுக்காக அனுப்புங்கள் என்று சொல்லவில்லை என்று கூறிக்கொள்ளுகின்றேன்.

**திரு. கோ. பூவராகன் :** என்னுடைய தொகுதியிலே இன்னும் வேடிக்கையாக ஒன்று நடந்தது. அமைச்சரவர்கள் என்னுடைய தொகுதிக்கு வருகிறார்கள். வரவேற்கிறேன். அவர் வரவேண்டுமென்று நினைக்கிறேன். அங்கே எப்படி வருகின்றார்கள் என்று பார்த்தால் ஒரு பள்ளிக்கூடத்திற்குக் கல் நாட்டுவதற்காக, அந்தப் பள்ளிக்கூடத்தில் மேல்மட்டம் வரை வேலை நடந்து விட்டது. இப்பொழுது அதற்கு இரண்டு அமைச்சர்களை அழைத்து கல்நாட்டு விழா வைத்திருந்தார்கள். அதிலே வந்த ஒரு அமைச்சர் கேட்டார், இன்னொரு இடம் பாக்கியிருக்கிறதே. அதிலும் கல்லைப் போட்டு விடலாமே என்று சொல்லியிருக்கிறார். இந்த நிலை இருக்கக்கூடாது. இவைகளையெல்லாம் அங்கே இருக்கின்றவர்கள் எந்த அளவுக்கு ஒத்துக்கொள்வார்கள் என்ன நினைப்பார்கள் என்பது பற்றி என் கட்சியைச் சேர்ந்த விநாயகம் அவர்கள் சொன்னார்கள்.

வெளியே போகும் அமைச்சர்கள் எப்படிப் போய் வர வேண்டுமென்ற சம்பிரதாயத்தை முதலமைச்சரவர்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவர்கள் வெளியிலே போய்த் தங்குவது பற்றி வேடிக்கையாகச் சொல்லியிருப்பார்கள் என்று எண்ணுகிறேன். இன்ஸ்பெக்ஷன் பங்களாவில் தங்கும்பொழுது தனிப்பட்ட பிரயாணிகளும் தங்கியிருந்தால், அந்தப் பிரயாணிகள் ஒருவேளை இவர்களை அணுகி சலுகை பெற வரலாம் என்று சொன்னார்கள். அப்படியானால் அமைச்சர்கள் தங்குவதற்கு வேறு எங்கே போவார்கள் என்று தெரியவில்லை. அமைச்சர்கள் பிரயாணிகள் விடுதியில் தங்கினால் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் வந்து பார்ப்பார்கள். அதிகாரிகள் வந்து பார்ப்பார்கள். பொது மக்கள் வந்து பார்ப்பார்கள். அவர்கள் குறைகளைக் கேட்பதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கும். தனிப்பட்டவர்களின் வீடுகளில் தங்குவதிலும், விருந்து உண்பதிலும் பல சங்கடங்கள் ஏற்படக்கூடும். அமைச்சர்கள் பொதுவாக விருந்துக்குப் போகும்போது வேறுவகையான பான வகைகள் கொடுக்கும் இடங்களுக்குப் போகாமல் இருப்பது நல்லது. முழுக்க முழுக்க மதுவிலக்கைத் தீவிரப்படுத்த வேண்டு

[1967, ஜூன் 30

**திரு. கோ. பூவராகன் :** நியாயமாகச் செய்யவில்லை என்று இப்பொழுது அமைச்சர் அவர்கள் வாதித்தாலும், செய்தது சரியானது, நியாயமானது என்றே நீதி மன்றம் தீர்ப்புக் கூறினார்கள். நீதி மன்றம் தீர்ப்புக் கூறியதைக் குறை சொல்வது இந்த மன்றத்திற்குப் பொருந்தாது என்பதையும் நான் கூறிக்கொள்ளுகிறேன்.

அதோடு, இன்னும் இம்மாதிரி பல காரியங்களை எடுத்துச் சொல்லலாம் என்றாலும், நேரம் இல்லாத காரணத்தால் நான் இத்துடன் விடுகிறேன். இதையெல்லாம் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் கவனித்து ஆவன செய்வதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிற நிலையில்தான் இன்றைய தினம் இவற்றையெல்லாம் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் இது விஷயமாக என்ன என்ன நடந்திருக்கிறது, என்ன என்ன காரியங்களை அங்கே செய்திருக்கிறார்கள், செய்தது சரிதானா என்பதையெல்லாம் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கொள்முதலைப்பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கொள்முதல் செய்ய வேண்டியதுதான்; கொள்முதல் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், ஒரே இடத்தில் நான்கு தடவை கொள்முதல் நடக்கிறது. வேறு இடத்திற்குப் போகவில்லை. நேற்றைய தினம் கூட எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. ஒரு அரிசன வகுப்பைச் சேர்ந்தவர், தம்முடைய மகள் கல்யாண விஷயமாக ஒரு மூட்டை நெல் அவித்து, அதை அறைப்பதற்காக ஆலைக்கு எடுத்துக் கொண்டு போகும் வழியில் அந்த நெல்லைப் பிடுங்கி வைத்துக் கொண்டு, "யாருக்கு ஓட்டுப் போட்டீரோ அவரிடம் சொல்லுங்கள், அல்லது வேறு யாரிடமாவது சொல்லுங்கள், எங்களுண்டய நிலைமை இது" என்று அவர்களை விரட்டியிருக்கிறார்கள் என்று கடிதம் வந்திருக்கிறது. இதையெல்லாம்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "தேர்தல்கள்" "மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்" என்னும் இந்த கோரிக்கைகளுக்கும், கொள்முதலுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது?

**திரு. கோ. பூவராகன் :** அமைச்சர்கள் இம்மாதிரியெல்லாம் சொல்லுகிறார்கள் என்பது நிர்வாகத்தைப் பொருத்திருப்பதால், கொள்முதலைக் குறித்துச் சொன்னேன். கொள்முதல் செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. இந்த நிலையெல்லாம் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்கள் எப்போதும் பதில் சொல்வது போல், இதற்கும் பதில் சொல்லமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். நெய்வேலியைப் பற்றி ஒன்று சொன்னேன். அமைச்சர் அவர்கள் பொதுவாக என்ன சொல்ல வேண்டும் என்பதைப்பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. நெய்வேலித் திட்டத்தில் எவ்வளவு முதலீடு போட்டிருக்கிறார்கள், எத்தனை ரூபாய் முதலீடு போடப்பட்டிருக்கிறது, வேலை வாய்ப்புத் தேடிக் கொடுத்திருக்கிறார்கள், அதனால் மத்திய அரசாங்கம் புறக்கணிக்கவில்லை என்று சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் சிதம்பரத்தில் "மத்திய அரசாங்கம் நம்மை ஏமாற்றி விட்டது", என்று பேசியிருப்பதாகச் செய்தி வந்தது. "cheating" என்று அந்தச் செய்தியில் போட்டிருக்கிறார்கள். மாநில அரசாங்கப் பொறுப்பில் இருப்பவர்கள் மத்திய அரசாங்கத்தைக் குறித்து இந்த நிலையில் சொல்வதானால், நிர்வாகத்தின் கீழ் மட்டத்தில் இருக்கிறவர்கள் நம்மைப்பற்றி என்ன சொல்லுவார்கள் என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும் என்று அன்றைய தினமே சொன்னேன். இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள் அன்று ஒரு உதாரணம் சொன்னார்கள். "சீமான் வீட்டு ஸில்வர் டம்ளர்", "வேலைக்காரன்" என்று இப்படியெல்லாம் சொன்னார்கள். 23-ந்தேதி போராட்டம் வைத்திருக்கிறார்கள். அது போராட்டம் இல்லை. எழுச்சி நாள். அதை எதற்காக வைத்திருக்கிறார்கள்? சீமான் வீட்டு ஸில்வர் டம்ளருக்காக வைத்திருக்கிறார்களா? அல்லது வேறு எதற்காக வைத்திருக்கிறார்கள் என்பதை முதலமைச்சர் அவர்கள் தம்முடைய பதிலில்



1967, ஜூன் 30] [திரு. கோ. பூவராகன்]

சொல்லுவார்கள் என்று நான் கருதுகிறேன். இப்படியெல்லாம் சட்டமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள். அவர்களுக்குத் தெரிந்த விவரங்களை வைத்துக் கொண்டு பேசுகிறபோது, அமைச்சர்கள் அவற்றைக் குறித்து விளக்குகின்ற அளவிற்கு, மேலும் தெளிவுபடுத்துகிற அளவிற்கு, விளக்கமாக உரைகள் நல்ல முறையில் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இத்துடன் என்னுடைய வார்த்தைகளை முடிக்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குறிப்பிட்ட நேரத்திற்கு மேலாக ஆகிவிட்டபடியால், உறுப்பினர் திரு. வேழவேந்தன் அவர்கள் தம்முடைய உரையை மிகச் சுருக்கமாக, ஐந்து நிமிடங்களுக்கு மேற்படாமல், ஆற்ற வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முன்னாள் அமைச்சர் அவர்கள் நியாய வாதங்கள் பேசினார்கள். ஒரே ஒரு செய்தியை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வட சென்னையைச் சேர்ந்த சூரியமூர்த்தி என்கிற ஒரு மீனவ நண்பர் விசைப்படகு ஒன்று கோரினார். பயிற்சியுடைவர்களுக்குத் தருவார்கள் என்ற அளவில், அவர் தன்னுடைய மகன் பேரில் விசைப் படகுக்கான கோரிக்கையை அனுப்பினார். மகன் பெயர் "கருணாநிதி" என்று இருந்த காரணத்தால், அப்பொழுது இருந்த அமைச்சரவை அவருக்கு விசைப் படகு தரவில்லை.

**திரு. கோ. பூவராகன் :** "கருணாநிதி" என்ற பெயர் உள்ளவருக்கு விசைப்படகு இருக்கிறது. அவரைக் கனம் அமைச்சர் அவர்கள் தெரிந்து கொள்ளுவதற்கு ஆசைப்படுவார்கள் என்று சொன்னால், அது சம்பந்தப்பட்டவரையே நான் நேரில் அவரிடம் அனுப்பிவைப்பேன்.

*** திரு. கா. வேழவேந்தன் :** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, "தேர்தல்கள்", "மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்" ஆகிய இந்த இரு மானியக் கோரிக்கைகளை ஆதரித்துப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தற்காக நான் என்னுடைய நன்றியை கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த இரண்டு கோரிக்கைகளைப் பற்றியும் பேசிய கனம் காங்கிரஸ் உறுப்பினர்கள், அதிகமாக அமைச்சர்களைப் பற்றியே குறிப்பிட்டார்கள். காரணம், பேசியவர்களில் பெரும்பாலோர் ஒரு காலத்தில் ஆளும் தரப்பில் உட்கார்ந்திருந்து, இன்று எதிர்த் தரப்பில் போய் உட்கார வேண்டிய நிலைமை ஏற்பட்ட காரணத்தால், அவர்கள் தங்கள் மனத்திலே இருந்தவற்றையெல்லாம் இங்கே கொட்டி இருக்கிறார்கள்.

தேர்தல்களைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம், ஜனநாயக ஊருக்கு அழைத்துச் செல்கிற ஒரு பாதையாகத் தான் தேர்தல்கள் இருக்கின்றன. அந்தத் தேர்தல்களில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதைப் பல நேரங்களில் நாங்கள் குறிப்பிட்டு வந்திருக்கிறோம். அதில் உடனடியாகச் செய்யவேண்டியது ஒன்றுண்டு. வாக்காளர் பட்டியலில் எங்காவது ஜாதிப் பெயர்கள் இருக்குமானால், அவற்றை உடனடியாக நீக்க வேண்டும் என்று வாக்காளர்கள் பட்டியலைத் தயாரிக்கும் அலுவலர்களுக்கு உடனடியாகக் கட்டளை இடப்பட வேண்டும். அப்பொழுதுதான் எதிர்நோக்கியிருக்கிற ஊராட்சி மன்றத் தேர்தல், நகராட்சி மன்றத் தேர்தல்களில் ஜாதி வெறி தாண்டவம் ஆடாது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கே காங்கிரஸ் தரப்பிலிருந்து பேசிய உறுப்பினர்கள் ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். "நீங்கள் சம்பளம் குறைத்துக் கொள்ளுவதால் எந்தவிதமான நன்மை இருக்க முடியும்? என்ன பலன் இருக்க முடியும்?" என்று குறிப்பிட்டுக் காட்டினார்கள். நாங்கள் மனம் திறந்து சொல்லிக்கொள்ள விரும்புகிறோம். சாதாரணமாக, நலிவான நிலையில் இருக்கும் குழந்தைகளுக்காகத் தாய் பத்தியம் இருப்பதைப் போலத்

தான், இந்தியாவிலேயே எந்த மாநிலமும் சாதிக்காத ஒரு சாதனையைத் தமிழக அரசு சாதித்திருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள், 'இங்கே தான் முதன் முதலாக—மற்ற மாநில அமைச்சர்கள் துணிந்து சொல்லாத நிலையில்—" நாங்கள் ஆயிரம் ரூபாய் சம்பளத்தை ஐநூறு ரூபாயாகக் குறைத்துக் கொள்ளுகிறோம்" என்று சொன்னார்கள். ஆகவேதான், அவர்கள் தென்னாட்டு காந்தி என்றே போற்றப்படுகிறார்கள். ஏன் இப்படிக் குறிப்பிடுகிறேன் என்றால், காந்தியார்தான், சுதந்திரம் பெற்ற இந்தியாவில், எந்தத் தனி மனிதனுக்கும் ஐநூறு ரூபாய்க்கு மேல் சம்பளம் இருக்காது என்று அன்றைய தினம் குரல் எழுப்பினார்கள். அந்தத் தத்துவத்திற்கு உயிர் கொடுக்கின்ற வகையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அக் கருத்தை நிறைவேற்றிக் கொண்டிருப்பதை நாம் பார்கிறோம்.

அமைச்சர்கள் அடிக்கடி பயணம் போவதைப்பற்றி எதிர்த் தரப்பில் இருப்பவர்கள் சொன்னார்கள். இன்றுள்ள அமைச்சர்களுக்கும் முன்பிருந்த அமைச்சர்களுக்கும் உள்ள மிகப் பெரிய வித்தியாசமே அதுதான். அவர்கள் பொது மக்களைப் பார்க்கிறேன் என்று சொல்லிப் பார்க்க மறுத்து விட்டார்கள். அதனுடைய நிலைமைதான் என்ன என்பதை நாம் பார்க்கிறோம். ஆனால், இன்றைக்கிருக்கும் அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் பல்வேறு தொகுதிகளுக்கும் தங்களுடைய ஓய்வு நேரங்களில் போகின்ற காரணத்தால் வெள்ளம் போல் பொதுமக்கள் கூடுகிறார்கள். மக்கள் மனுக்களைத் தமிழில் எழுதித் தருகிறார்கள். அவற்றை அமைச்சர்கள் அங்கேயே பரிசீலித்து, உரிய அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்குகிறார்கள் என்ற நல்ல ஏற்பாட்டை மனச்சாட்சி உடையவர்கள் எல்லோருமே ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்.

அதுமட்டுமல்ல. இன்றைய தினம் நம்முடைய அமைச்சரவை வந்த பின்னால்தான், வீண் கித்தாப்பும் கீர்த்தியும் தேவையில்லை யென்று, அமைச்சர்கள் தாங்கள் சுற்றுப் பயணம் போகிற இடங்களுக்கெல்லாம், மாவட்ட அதிகாரிகளோ, போலீஸ் அதிகாரிகளோ, கோட்டாட்சி அதிகாரிகளோ, வட்ட அதிகாரிகளோ புடை சூழ்ந்து வர வேண்டாமென்று கூறி, ஒரு நல்ல சம்பிரதாயத்தைச் செய்து இருக்கிறது. இந்த அமைச்சரவை தான் இதை முதலில் செய்திருக்கிறது. இதன் மூலமாக எளிமையும், சாதாரணமான தன்மையும் இந்த அமைச்சரவைக்கு வந்திருக்கிறது. அதற்கு எடுத்துக் காட்டாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் எளிமையோடு இருக்கிற காரணத்தால், "இது முதலமைச்சர் கார்" என்று தெரியாமல் செக் போஸ்டைச் சேர்ந்த காவல் துறையினர் காரை மடக்கி, காரில் அரிசி இருக்கிறதா என்று பரிசோதித்துப் பார்த்ததாகப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இந்தச் செய்தியே நமது அண்ணா அவர்கள் எவ்வளவு எளிமையோடு இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

இன்றைய தினம் இருக்கிற தமிழக அரசைத் தூற்ற வேண்டுமென்று தூற்றல் கணைகளையெல்லாம் எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் எறிந்தார்கள். ஆனால் இந்தத் தமிழக அரசைப் போற்ற வேண்டியவர்கள் போற்றுகிறார்கள். சிறப்பாக இந்த நாட்டினுடைய முதலமைச்சரைப் போற்றுகிறார்கள். நமது அண்டை மாநிலமான ஆந்திர மாநில முதல்வரான திரு. பிரமானந்த ரெட்டி அவர்கள் இங்கே வந்திருக்கிற நேரத்திலே, அண்ணாவை "தென்னாட்டுக் காந்தி" என்று வாயாரப் போற்றியிருக்கிறார்—புகழ்ந்திருக்கிறார். கொண்ட கொள்கையிலே காந்தியைப் போலவே இவரும் வழுவவில்லை. குறிப்பாக மதுவிலக்குக் கொள்கையாக இருந்தாலும், வேறு எந்தக் கொள்கையாக இருந்தாலும்—இவர் காந்தியைப் போன்றவர், எனவே, இவரை "தென்னாட்டுக் காந்தி" என்று அழைக்கிறேன் என்று பாராட்டியிருப்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, டெல்லி பாராளுமன்ற அவைத் தலைவராக இருக்கிற திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள் தமிழக அரசைப் பற்றிக் கூறும்போது, "தமிழக அரசு நிரந்தரமான தன்மையைக் கொண்டது. அதே தருணத்





தில் செயல் திறன்களைக் கொண்டுள்ளது. இந்த அமைச்சரவையை சாதாரணமாக அசைக்க முடியாதுபோல் இருக்கிறது" என்று பாராட்டிப் புகழ்ந்துள்ளார். பொதுவாக இந்த அமைச்சரவை உள்ளே வந்த காரணத்தால்தான், இது முழுக்க முழுக்க மக்கள் அமைச்சரவையாக இருக்கிறது. ஆகவேதான், அமைச்சர்களுடைய அறைகள் எல்லாம், பொதுமக்களால்—ஏழைகளால்—தமிழ் மக்களால் நிரம்பி வழிவதைப் பார்க்கிறோம். பொது மக்கள் தமிழிலேயே மனுக்களை எழுதி அமைச்சர்களிடம் தருகிறார்கள். தமிழக அரசு தலைமைச் செயலகத்தில், "இது தமிழர் ஆட்சி, இந்த ஆட்சி நீடிக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது". ஆகவேதான், திராவிடக் கழகத் தலைவர் பெரியார் அவர்கள், "இதுதான் உண்மையான தமிழர் ஆட்சி, இந்த ஆட்சி நீண்ட நாள் நீடிக்கும்" என்று இந்த அமைச்சரவையைப் பாராட்டியிருக்கிறார். இந்த அமைச்சரவை நீடிக்கும் என்ற என்னுடைய கருத்துக்களைப் பணிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையைப் பற்றிப் பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்

***டாக்டர் எச். வி. ஹாண்டே:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அருள் கூர்ந்து எனக்கு ஒரு பத்து நிமிஷமாவது ஒதுக்கித்தருமாறு கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் யாரும் பேசவில்லை ஆகவே, பத்து நிமிஷம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று தேர்தல் பற்றியும், அமைச்சர்கள் பற்றியும் எழுப்பப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைமீது என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் விநயகம் அவர்களும், முன்னாள் அமைச்சர் பூவராகன் அவர்களும், தங்களுடைய ஆட்சியிலே எவ்வளவு நன்றாகத் தாங்கள் பணியாற்றி வந்தோம், இன்று திராவிட முன்னேற்றக் கழகம் சரியான வகையிலே வேலை செய்யாமல் இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள். நான் அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். "உங்களுடைய ஆட்சியைவிட, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எவ்வளவோ நன்றாக இருக்கிறது" என்பதை இந்த சமயத்தில் சொல்லிக்கொள்கிறேன். "நீங்கள் தேர்தல் காலத்தில் செய்த அட்டூழியங்கள் யாருக்குத் தான் தெரியாது ?"

உண்மையாக தேர்தல் பிப்ரவரி 15-ம் தேதி என்றிருக்கிற சமயத்திலே அதற்கு முன்தினம் சாயந்திரம் 6 மணியளவில் என்னுடைய தொகுதியாகிய பார்க் டவுனில், முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் இரண்டு போலீஸ் லாரிகளைக் கொண்டு வந்து மிரட்டவில்லையா ? அவர்களுடைய பக்கத்திலே இருந்தவர்கள் யார் ? மண்டலக் காங்கிரஸ் தலைவர்களும், மற்றவர்களும் இல்லையா ? அங்கே இருக்கிற திராவிட முன்னேற்ற கழகத்தினரை போலீஸ்காரர்கள் மிரட்டவில்லையா ? காங்கிரஸ் தொண்டர்கள் என்று சொல்லிக்கொண்டு, கையில் கத்தியை வைத்துக்கொண்டு சுதந்திரா கட்சியிலே பணியாற்றுகிறவர்களைக் குத்திவிடுவேன், வெட்டி விடுவேன் என்று மிரட்டியது அங்கே இருக்கிற எல்லோருக்கும் தெரியுமே அப்படிப்பட்ட காங்கிரஸ்காரர்கள் போய், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் குற்றம் சாட்டிப் பேசுவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது ? என்னுடைய காரை . . .

**திரு. வ. ஜார்ஜ்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். அவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் நடந்த பிரச்சினைகளைப் பற்றி இப்போது இங்கு பேசவேண்டியதில்லை . . . . .

**மாண்பிமிகு பேரவைத் தலைவர் :** ஜார்ஜ் அவர்கள் வழக்கறிஞர் ஆகையால் அவர்கள் விதிமுறைக்கு மாறாக அலுவலைத் தடுக்க கூடாது. விவாதத்தின்போது அதை யொட்டிய கருத்துக்களை எல்லாம் சொல்லலாம். நடந்ததைச் சொல்லலாம், நடப்பதைச் சொல்லலாம், இனி நடக்கப்போவதைச் சொல்லலாம். மூன்றையுமே சொல்லலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அதே பார்க் டவுன் தொகுதியிலே நானும் என்னுடைய வண்டியும், என் தம்பி சீனிவாசனும் என்ன பாடுபட்டோம் என்பது ஆண்டவனுக்குத் தான் தெரியும். கடவுள் எங்கள் பக்கம் இருந்தார். அந்த அளவிலே பத்தரை மணி, பதினொன்றரை மணி அ

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1967, ஜூன் 30

விலே காங்கிரஸ் தொண்டர்கள் வந்து இம்சைப்படுத்தினார்கள். என்னுடைய காரை நொறுக்கிவிட்டார்கள். அவர்கள் செய்த அட்டூழியங்கள் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியுமா? ஆகவே, அவ்வளவு அட்டூழியங்கள் காங்கிரஸ் தொண்டர்கள் செய்தபோது கூட நாங்கள் பொறுத்துக்கொண்டிருந்தோம். எங்களைப் பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும் இவர்கள் ஆற்றிய உரை என்ன? இவர்கள் மேடைகளிலெல்லாம் எந்த லட்சணமாகப் பேசினார்கள்? என்னுடைய தொகுதியிலே எத்தனை மந்திரிகள் பேசினார்கள்? என் தொகுதியிலே பேசிய மந்திரிகள் இன்று எம். எல். ஏ.க்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய தனிப்பட்ட பெயரைச் சொல்லும் மட்டமான ரகத்தில் நான் இல்லை. காங்கிரஸ்காரர்களாகிய நீங்கள் 50 பேர் வந்ததே ஆச்சரியப்பட வேண்டிய விஷயம். காரணம், மக்களிடத்திலே அந்த அளவுக்கு அதிருப்தி இருக்கிறது. 50-ல் ஒரு சைபர் எடுத்து விட்டால், மீதி இருக்கும் 5 பேர்தான் வருவீர்கள். காங்கிரஸ் நண்பர்கள் எப்படி எப்படி பேசினார்கள்? அவர்களுடைய் தரத்தைப் பற்றியும், வாய்ப்பைப் பற்றியும் சொல்லக்கூடிய நிலைமையில் இல்லை. முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் செய்த அக்கிரமத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. "பர்னிங் ஆஃப் ஃபைல்ஸ்"—பைல்களை யெல்லாம் எரித்தார்கள். அதைப்பற்றி அறிஞர் அண்ணா அவர்கள், அவரை மன்னித்து விடலாம் என்று இருக்கிறாரோ—என்னவோ தெரியவில்லை. முன்னாளில் இருந்த மந்திரிகள் சரியான முறையில் நடக்காமல் பலவித அட்டூழியங்களைச் செய்திருக்கிறார்கள். ஆகவே, "ஹை பவர் கமிட்டி" ஒன்று நியமித்து, முன்னாள் மந்திரிகள் செய்த அக்கிரமத்தை மக்களுக்குச் சுட்டிக் காட்டினால் மக்கள் திருப்தியடைவார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். முன்னாள் மந்திரி பூவராகனே பேசினார்கள். அவருடைய இலாகாவிலே நடந்தது என்ன? திரு. எஸ். கே. செட்டூருடைய ரிப்போர்ட்டை இந்த மன்றத்திலே வையுங்கள். அதிலே நன்றாகத் தெரியும். Please place it on the Table of the House. அதுமட்டும் அல்ல. என்னுடைய நண்பர், திராவிட முன்னேற்றக் கட்சி உறுப்பினர் ஒருவர் சொன்னார். இவர்கள் இராமேஸ்வரத்திற்காக ஒதுக்கி வைத்த லட்சக்கணக்கான பணம் எந்த எந்த வகையில் தவறான முறையில் ஒளிக்கப்பட்டிருக்கிறது என்பது முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன். அவருக்குத் தெரியும் என்றால் அவரும் இந்த ஊழல்களுக்கு உட்பட்டவர்களில் ஒருவராவார். தெரியாது என்றால் நிச்சயம் அவர் ஒரு திறமைசாலி அல்ல என்பதுதான் நிரூபிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** சபைத் தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் கனம் உறுப்பினர் முன்னாள் அமைச்சர்களையும், அமைச்சரவையையும் பற்றி இவ்வளவு தூரம் பேசுவதற்கு தாங்கள் எப்படி அனுமதித்தீர்கள் என்று தெரியவில்லை. புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கிற அமைச்சரவையினர், முன்னாள் அமைச்சர்கள் தவறு செய்திருந்தால் எந்த நடவடிக்கை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். எத்தகைய நடவடிக்கை எடுத்துக் கொண்டாலும் கட்டுப்படத் தயாராய் இருக்கிறோம். செட்டூர் அறிக்கை அரசாங்கத்தில் இருக்கிறது. யாரும் அதை ஒன்றும் செய்துவிடவில்லை. ஆடிட் ரிப்போர்ட் பற்றியும், அதன் பேரில் எடுக்கப்படுகிற நடவடிக்கை பற்றியும் குறிப்புகள் இருக்கின்றன. தனிப்பட்ட முறையில் யாரும் அக்கிரமம் செய்துவிடவில்லை. இவர்கள் யோக்கியதை எங்களுக்குத் தெரியாதது அல்ல. மற்றவர்களுடைய யோக்கியதையைப் பற்றிப் பேசவேண்டியதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது தன்னிலை விளக்கம் ஆகாது. உறுப்பினருடைய பேச்சில் குறுக்கிடவேண்டாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, பைல்களை எரித்த விஷயத்தைத்தான் எடுத்துக் கொள்ளுங்கள். அமைச்சர் கருணாநிதியை சிறைச்சாலையில் வைத்தார்களே அது சம்பந்தப்பட்ட பைல் அது. அது இருந்திருக்குமானால் தகாத முறையில் எந்தவிதமான உத்தரவுகள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன என்பது தெரிந்துவிடும் என்ற காரணத்தினால் தான் முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் அதை எரித்தார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1967 ஜூன் 30] [டாக்டர். எச். வி. ஹாண்டே]

"Burning of Files a Breach of Act" என்ற தலைப்பில் பத்திரிகையில் வந்துள்ள ஒரு குறிப்பை படிக்கிறேன்.

The burning of files relating to the 1965 anti-Hindi agitation in Madras State, which the former Chief Minister, Mr. Bhakthavatsalam, had admitted ordering, infringed the Destruction of Records Act of 1917, according to an informed source. . . .

**திரு பி.ஜி. கருத்திருமன் :** சார் ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆடர் சபையில் படிக்கலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அவர் ஒரு வழக்கறிஞராக இருந்திருந்தால் இந்த விஷயம் தெரிந்திருக்கும்.

Section 3 of the Act provides for framing of rules for the disposal of records by local authorities by the State Government. But no rule can contravene the provisions of the Act, it is also pointed out.

Section 5 of the Act says: 'Nothing in this Act shall be deemed to authorise the destruction of any document which, under the provisions of any law for the time being in force, is to be kept and maintained.'

இந்த பைல்களைக் கொளுத்திவிட்ட காரணத்தினால் இன்றைக்கு காங்கிரஸ் அமைச்சர்கள் செய்த செயல்களை நாம் புரிந்துகொள்ள வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. ஆகவே அருள்கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன். இதை நமது மதிப்பிற்குரிய முதல். அமைச்சர் அவர்கள் தம்முடைய பரந்த மனப்பான்மையினால் மன்னித்துவிடாமல் இதற்கு சட்டபூர்வமான நடவடிக்கை எடுத்து முன்னாள் முதல் அமைச்சர் பக்தவத்சலத்தை குற்றவாளிக் கூண்டில் நிறுத்திவைத்து அவர் என்ன என்ன தவறு செய்திருக்கிறார்கள் என்பதை பகிரங்கமாக வெளிப்படுத்தினால்தான் மககள் திருப்தி அடைவார்கள்.

கடைசியாக, இங்கே பணிபுரிகிற போலீஸ்காரர்களுக்கு ஒரு நாளைக்கு பத்தணா, பன்னிரண்டணா அலவன்சு கொடுக்கிறார்கள். அது போதாது. அவர்களுடைய துணிமணிடிரஸ் முதலியன வேதனைக்குரியதையாக இருக்கிறகின்றன. அவர்களுடைய பேட்டாவை அதிகப்படுத்தி, இன்னும் யூனிபார்ம் வசதிகளையும் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

(Dr. Habibullah Baig rose.)

MR. SPEAKER; If the hon. Member, Dr. Habibullah Baig wants to speak, he can speak for two or three minutes.

*DR. HABIBULLAH BAIG; Yes, Sir.

Mr. Speaker, Sir, just now the hon. Member, Sri Bhuvarahan has mentioned on the floor of this House that there has been a communal clash and wanted that the matter should be investigated by the Hon. Chief Minister. In this connection, I wish to bring to the notice of this House that we have presented a memorandum to the Hon. Chief Minister in regard to this matter. The hon. Member who referred to it belongs to the South Arcot district and this communal clash has occurred in that district, in places like Villupuram and Pounjupatt. What is the origin for this communal clash? This is nothing but the aftermath of the elections. It is a post-election event. Because the Muslims voted for *'Uthaya*

[Dr. Habibullaah Baig] [1967, ஜூன் 30

Suriyan' and supported the Dravida Munnetra Kazhagam, Muslims have been suppressed and butchered in places like Pounjuaatt. 24 Muslims have been butchered out of 40 Muslim houses in that place. Forty Muslim houses have been Muslim Leaguers and the rest have been Congressmen out of 600 houses in that place. Simply because the Muslims have voted for the D.M.K. Party are they to be butchered like this? Is it a sin committed by them? The Hon. Member, Sri Bhuvarahan, has stated that the hon. Minister for health has gone there to create a communal clash. It is a wrong statement. It is wrong to say that it is a communal clash. It is a political clash. It has happened not only in that place but also in other places in the South Arcot district. Who is responsible for that? I request the Hon. Chief Minister and other Hon. Ministers of his Cabinet to see that this sort of thing should not take place, and the Muslims are not suppressed. We belong to a minority community and because we have supported the D.M.K. Party the Congress has a grouse against us. I request the Hon. Chief Minister once again to see that some action is taken in the matter and the Muslims are not suppressed.

**திரு. செ. பாலசுப்பிரமணியம் :** சார். ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், நான பேசுவதற்குப் பெயர் கொடுத்திருந்தேன். எனக்குப் பேச சந்தர்ப்பம் உண்டா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரம் இல்லாத காரணத்தினால் பேச வாய்ப்பு கொடுக்க முடியவில்லை. அதற்காக வருந்துகிறேன்.

***திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இப்போது சபை முன்பு வைத்திருக்கும்படியான மானியக் கோரிக்கையின் மீது நடந்த விவாதத்தில் கொஞ்சம் சுறுசுறுப்பும், சூடும் இருந்தது என்பதைக் குறித்து நான் சந்தோஷப்படுகிறேன். விவாதத்தில் என் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் பேசினார்கள். சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த திரு. ஹாண்டே அவர்களும் பேசினார்கள். அவர் பேசும்போது கவனித்துக்கொண்டிருந்தேன். ரொம்ப வேகமாக காங்கிரஸ்காரர்களை எதிர்த்தார். காங்கிரஸ் கட்சிக்கு அனுதாபமும் பட்டார். அப்படி அவர் அனுதாபப்படவேண்டியதில்லை. கட்சியின் சார்பில் இந்த அவையில் ஒருவர்தான் வந்தார் என்றாலும் அவர் தம்முடைய கடமையை நாட்டு மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமையை யாருக்கும் அஞ்சாது ஆற்றுவார் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் சுதந்திரா கட்சியினர் பிற்போக்குக் கட்சி கூட்டணி என்ற நிலையில் தேர்தலிலே ஈடுபடாது தனிப்பட்ட முறையில் நின்றிருந்தால் உண்மை தெரிந்திருக்கும். திருமங்கலம் தொகுதி இடைத்தேர்தலில் சுதந்திராகட்சியினர் என்ன என்ன முறையில் நடந்து கொண்டார்கள் என்பது யாருக்கும் தெரியாதது அல்ல.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இன்றைய தினம் காங்கிரஸ்காரர்கள் சர்க்கரை கள்ளமார்க்கெட்டில் அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் ஏற்படுத்தி வருகிறார்களே, தெரியுமா என்று கேட்ட கேள்வியை தாங்கள் அனுமதிக்கவில்லை. இப்போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பிற்போக்குக் கட்சி கூட்டணி என்று சொல்கிறார்களே, அதை அனுமதிப்பது சரியா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா—விடை நேரத்தில் குற்றச்சாட்டுகள் கூறக்கூடாது என்று சொன்னேன். அந்த நேரத்தில் 16 விதமான வரையாறைகள் உள்ளன ஆனால், விவாத நேரத்தில் அவ்வளவு தடைகள் கிடையாது. கட்சியைப் பற்றிப் பேசலாம்.



1967, ஜூன் 30]

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திருமங்கலம் தொகுதியிலே மக்கள் சுதந்திரா கட்சி சார்பாக என்ன தீர்ப்பளித்திருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். ஆப்டர் ஆல் என்று சொல்லுகிறார்கள், ஆப்டர் ஆல் என்றால் அதை வேண்டாம் என்று சொல்லிவிடுவார்களா என்று கேட்க விரும்புகிறேன். கனம் சபாநாயகர் அவர்கள் தீர்ப்புக்கு இணங்கி வெளியிலே சொன்னதை ஏற்றுக்கொள்ளவேண்டாமென்றால் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. கனம் முதலமைச்சர் அவர்கள் அவரை பத்திரிகைகளினுடைய குழந்தை என்று சொல்லிக்கொண்டார்கள். பத்திரிகைகளிலே ஏதோ சில தவறான கருத்துக்கள் வருகின்றன என்ற காரணத்தினாலே பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகள் எல்லாம் தவறானவை என்று வைத்துவிட்டால் தமிழக அரசியல் எப்படிப்போகும் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும்.

முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலத்தைப் பற்றிச் சொன்னார்கள். பைலை எரித்தார்கள், எரித்தார்கள் என்று சொன்னார்கள், தினசரி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த சர்க்காருக்கு தைரியமிருந்தால் நடவடிக்கை எடுங்கள், அவர்கள் குற்றம் செய்தார்கள், அக்கிரமம் செய்தார்கள் என்றால் நடவடிக்கை எடுங்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். முன்பு கேள்வி நேரத்தில் நான் பழைய அரசாங்கத்தில் லஞ்ச ஊழல் இருக்கிறதா என்று கேட்ட நேரத்தில் இல்லையென்று பதில் கூறியிருக்கிறார்கள். நீங்கள் அதைப்பற்றி எடுக்கும் நடவடிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அதிலிருந்து கொஞ்சம்கூட பின்னால் போவதற்கு இல்லை. என்ன என்ன காரியத்தை, என்ன தவறுகளைச் செய்தார்கள், சட்ட விரோதமான காரியங்களைச் செய்தார்கள் என்று சொல்வார்களானால், பிரிட்டிஷ் பார்லிமெண்டிலே அமைச்சர்கள் செய்தார்களே, அதை நாங்களும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆகவே இனிமேலாவது அப்படிப்பட்ட பொறுப்பற்ற பேச்சுக்களைப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். 400 கோடி கடன் வைத்து விட்டார்கள், 500 டன்தான் அரிசி வைத்திருந்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இல்லையென்று சொன்னவுடன் பிறகு சென்னைக்கு மட்டும்தான் 500 டன் வைத்திருந்தார்கள் என்று சொன்னார்கள். எங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது ? பத்திரிகைகளிலே வருவதைத் தான் நாங்கள் சொல்ல முடியும். ஆதாரப்பூர்வமாக நாங்கள் சொல்லக் கூடிய நிலையிலே இல்லை.

லஞ்ச ஊழல்கள் பெருகிவிட்டன என்ற குற்றச்சாட்டுகளைச் சொல்பவர்கள் பேச்சுரிமை கொடுத்தபடி பேசிக்கொள்ளலாம். இதைப்பற்றிச் சட்டசபையிலே விவாதம் மட்டுமல்ல, மேஜையின்மேல் இதைப்பற்றி அறிக்கை வைத்தால் கூட நல்லது என்று நினைக்கிறேன். ஒருவர் அமைச்சராக இருக்கின்றவர் பேசியிருக்கிறார், "என்னையும் ஐந்துபேர்களையும் சேர்த்து சுட்டுத்தள்ள வேண்டுமென்று உத்திரவு போட்டார்" என்று பேசியிருக்கிறார்கள். இப்பொழுது அமைச்சராக இருக்கிற அவர் இதன்மேல் எல்லாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிகமாக நேரத்தை எடுத்துக்கொண்ட காரணத்தினாலே நான் சுருக்கமாகப் பேசிவிடுகிறேன். அன்றுட நிர்வாகத்திலே எல்லாம் தலையிடுகிறார்கள். இப்படிச் சொன்னால் 100 நாட்களிலே என்ன செய்துவிட்டார்கள் என்று கேட்கிறார்களே என்று சொல்கிறார்கள், ஆகையால் அடுத்த சந்தர்ப்பத்திலேகூட இதைப்பற்றிக் கேட்கலாம்.

சேலம் முனிசிப்பாலிட்டியிலே பொருட்காட்சி நடத்துவது-தனிப்பட்ட முனிசிப்பாலிட்டியே நடத்தினால் 2 லட்ச ரூபாய் முதல் 2½ லட்ச ரூபாய் வரை லாபம் வரக்கூடிய நிலைமை இருந்தும் சீன ஆக்கிரமிப்பு நேரத்திலே 50,000 ரூபாய் வந்தது. தனிப்பட்டவர்களுக்கு விட்டதால் முனிசிபாலிட்டிக்கு வரக்கூடிய லாபம் குறைந்துவிட்டது. இதையெல்லாம் தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பைலை எரித்தார்கள் எரித்தார்கள் என்று தினசரி சொல்கிறார்கள். ஒரு சிறு விஷயம். கோபிசெட்டி பாளையத்திலே ஒரு குமாஸ்தா ரிக்கார்டுகளை அகற்றிவிட்டார். இதில் அந்த திராவிட முன்னேற்றக் கழக வட்டச் செயலாளர் ஒரு கடிதம் எழுதி, அந்தக்

கடிதத்தின் மூலம் விசாரணை செய்யப்பட்டு அவரை நீக்கினார்கள் என்கிற நிலைதான் இருக்கிறது. கட்சியைச் சேர்ந்தவர்கள் கடிதம் எழுதி அதிகாரிகளை நடவடிக்கை எடுக்கச்சொல்லும் நிலை இருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சியாக இல்லாமல் எதிரிக் கட்சியாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நல்ல காரியங்களைச் செய்தால் பாராட்டுவோம் என்று சொல்லியிருக்கிறோம். மதுவிலக்குபற்றி என்னுடைய கட்சி மட்டும் அல்ல, தமிழக மக்கள் பூராவும் பாராட்டுவார்கள் என்று சொல்லியிருக்கிறேன். எதிரிகளாக நாங்கள் பாவிக்கப்படக்கூடாது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். இங்கே இருக்கும் அமைச்சர்களில் சில அமைச்சர்கள் தவறாக, பொறுப்புணர்ச்சியற்ற தன்மையில் பேசும்படியான கருத்துக்களை சொல்லவேண்டுமானால் நான் அவையெல்லாவற்றையும் முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியனுப்பத் தயாராக இருக்கிறேன் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பழைய சர்க்காரைப் பற்றியோ, மத்திய சர்க்காரைப்பற்றியோ, காங்கிரஸைப்பற்றியோ பேசுவதற்கு தேர்தல் இருக்கிறது, ஐந்தாண்டுகளுக்கொருமுறை தேர்தல் வருகிறது, எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றியும் அவர்கள் எங்களைப்பற்றியும் இப்பொழுது இது மாதிரிப் பேசாமல் தேர்தல் வரும்பொழுது பேசிக்கொள்ளலாம்.

சில சமயங்களில் நான் முதலமைச்சர் அவர்களிடம் சில விஷயங்கள் சொன்னேன். அவர்கள் இரண்டு கட்சிக்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். சேலத்தில் சைக்கிள் செயினை வைத்து அடிக்கிறான், தோலை அப்படியே எடுத்துக்கொண்டு அது வந்துவிடுகிறது. முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள், எந்தக் கட்சியாக இருந்தாலும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு, பொதுமக்கள் பயமில்லாமல் நல்வாழ்வு நடத்துகின்ற உணர்வை அதிகமாக்கவேண்டியது அவசியமென்று.

சிக்கனம் சிக்கனம் என்று சொல்கிறார்கள். அது சம்பளத்தைப்பற்றியிருந்தாலும் வேலை அதிகமாகச் செய்யவேண்டும், கடினமாக உழைக்க வேண்டுமென்பதுதான் முக்கியம். ஆட்களை எடுத்துவிடுவது என்பது சிக்கனமல்ல. அதிகமாக உற்பத்தியைப் பெருக்கி, உழைப்பு பெருக வேண்டுமென்ற நிலையைத்தான் உருவாக்கவேண்டும். தமிழக மக்களுக்கு எப்படி எப்படி நல்ல முறையிலே பணிபுரிய முடியும் என்பதைப்பற்றி அமைச்சர்களும், முதலமைச்சர் அவர்களும் இலக்கணத்தை வகுத்துக் கொள்ளவேண்டும்.

முதலமைச்சர் அவர்கள் வந்துவிட்டார்கள். அமைச்சர்களினுடைய சொத்துக்கணக்குகளையெல்லாம் எடுக்கவேண்டுமென்று சொன்னவர்கள், கணக்குகளை எல்லாம் எடுத்து இருப்பார்கள் என்று நினைத்தேன். சொத்துக்கள், அதாவது அசட்ஸ் அண்ட் லயபிலிட்டீஸ் எவ்வளவு என்பதை கணக்கெடுத்து சட்டசபையில் வைத்தால் அது எந்தக் கட்சிக்கும் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொண்டு நான் இந்த மானியத்தை எதிர்க்கக் கூடிய நிலையில் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இறுதியிலே பேசுகிறபோது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் "நான் இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கவில்லை" என்று சொன்னார்கள். (குறுக்கீடு). உள்ளபடியே வெட்டுப் பிரேரணையை ஆதரித்துத்தான் பேசி இருக்கிறார். வெட்டுப் பிரேரணையைக் கொடுத்தவர்கள் முன்னாலே ஆளும் கட்சியிலே இருந்தவர்கள். முன்னாலே ஆளும் கட்சியிலே இருந்த காரணத்தால், ஆட்சி எப்படி எப்படி நடத்தப்பட வேண்டும், அமைச்சர்களுக்கு எப்படி எப்படி தொடர்பு இருக்கவேண்டும், அமைச்சர்கள் என்னென்ன காரியங்களை எந்தெந்த விதமாக ஒழுங்காகச் செய்யவேண்டுமென்பதையெல்லாம் எடுத்துச் சொல்லக்கூடிய அனுபவமும், உரிமையும் அவர்களுக்கு இருப்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அவர்களுக்கு அனுபவம் இருக்கிறது, எடுத்துச் சொல்லலாம். ஆனால் அவர்களுக்கு அனுபவம் இருக்கிறது என்பதை என் வாயிலாகக் கேட்பதுதான் அவர்களுக்கு மிகுந்த பெருமை. அதை அவர்களே சொல்லிக் கொள்வார்



களேயானால் அது உண்மையிலேயே பெருமை அளிக்காது. நான் துவக்கம் முதற்கொண்டே ஆளும் கட்சியில் இருந்தவர்களைப் பார்த்து, "எங்களுடைய ஆட்சியைச் சரியான முறையில் நடத்த தகுந்த யோசனைகளைச் சொன்னால் அந்த யோசனைகளை ஏற்று நடந்து கொள்ள முயற்சிக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறேன். உள்ளபடியே இந்த ஆட்சி நடத்தப்பட்டு வருவதிலே சிலபல குறைபாடுகள் தோன்றி இருக்குமானால், இந்த நாட்டினுடைய ஆட்சி நல்ல முறையில் நடக்க வேண்டுமென்பதிலே மட்டும் அக்கறை கொண்டவர்களாக இருப்பார்களேயானால், எங்களிடத்தில் தனிப்பட்ட முறையில் சொல்லி திருத்தங்களைக் கோரியிருப்பார்கள். ஆனால், இவைகளை இந்த மன்றத்திலே பேசுவதன் மூலம் இந்த நிகழ்ச்சிகளைப் பொது மக்கள் பார்த்து "எவ்வளவு தவறாக இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது ? எப்படி எப்படிச் சுட்டிக் காட்டினோம் தெரியுமா?" என்று மாலை நேரத்திற்காக காலை நேரத்தில் இரை தேடிக் கொள்ளுகிறார்கள் என்ற அளவிலேதான் கருத முடியுமே தவிர, அந்தப் பேச்சுக்களை கவனிக்க வேண்டிய அளவிலே இல்லை. இரை தேடிக் கொள்ளுகிறார்கள் என்றால் ஆங்கிலத்தில், " Food for thought ".

அவர்கள் எடுத்துச் சொன்னது—இந்த ஆட்சியில் இருப்பவர்களுக்கு ஒன்றும் சரியாக நடக்கத் தெரியவில்லை. ஒரு அமைச்சருக்குக் கூட தன்னுடைய இலாகா எது என்று தெரியவில்லை. அந்தந்த அமைச்சர்கள் சம்பந்தம் இல்லாதவைகளுக்கெல்லாம் சம்பந்தப்படுத்திப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்—என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள்.

நாங்கள் ஆட்சிக்குப் புதியவர்கள். அதிலே ஒன்றும் ஐயமில்லை. ஆனால், நீங்கள் ஆட்சியிலே 15 வருஷம் பெற்றிருக்கிற அனுபவத்தை நாங்கள் ஆட்சியிலே இல்லாத நேரத்திலேயே மரபுகளை, அறிந்து தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆகையினாலேதான், நீங்கள் சொன்ன அத்தனை குற்றச்சாட்டுகளுக்கும்—இந்த அமைச்சரவையோ, அமைச்சர்களோ தனித்தனியாகவோ, கூட்டாகவோ எந்தவிதமான தவறான பேச்சுக்களையும் பேசவில்லை என்பதை ஒவ்வொரு அமைச்சரும் மறுத்ததன் மூலம் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். அவ்வாறு சொன்னதை அவர்கள் சட்ட விதிமுறையின்படி எதிர்க்கவில்லை என்று சொல்வார்களேயானால் எனக்கு அதிலே முழுத் திருப்தி, முழு மகிழ்ச்சி ஏற்படாது. உண்மையிலேயே தெரிவித்துக் கொள்கிறேன்—பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகள் முழு அளவிலே இருக்காது. பேச்சுக்களைத் தவறாகப் போடுகிறார்கள் என்று சொல்லவில்லை ; நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே சொன்னதுபோல் நான் பத்திரிகைக்காரர்களால் சீராட்டி, பாராட்டி வளர்க்கப்பட்டவன். உண்மை அது. அதுமட்டுமல்ல ; நானே ஒரு பத்திரிகைக்காரன் இனத்தைச் சேர்ந்தவன் என்றுதான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். எந்தப் பத்திரிகையிலும் எந்த அமைச்சர் பேசிய பேச்சும் முழு அளவில் வர முடியாது. உண்மையிலேயே அதற்கு வழி இல்லை. அதிலே வருகின்ற ஏதாவது ஒரு பகுதியைப் பார்க்கும்போது, இப்படி நடந்திருக்குமோ, அப்படி நடந்திருக்குமோ என்று தோன்றுமானால், உள்ளபடியே ஆட்சி நல்லபடி நடக்க வேண்டுமென்பதிலே அக்கறை உள்ளவர்கள் நேரடியாகக் கேட்டிருக்கலாம். உங்களுடைய நோக்கம் அதுவல்ல. உங்களுடைய நோக்கம்—இந்த அமைச்சரவையிலே பல தவறுகள் நடந்து விட்டதாக வெளியே எடுத்துப் பேசுவதற்காக சட்ட மன்றத்தில் பல விஷயங்களைக் குறிப்பிடுகிறீர்கள். நான் உங்களிடம் மிகுந்த மரியாதை வைத்திருப்பவன் என்றாலும் உங்களுடைய நோக்கத்தைப் பொருள்படுத்தவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அமைச்சரவையில் கூட்டுப் பொறுப்பு இருக்கின்ற வரையில் இந்த அமைச்சர்கள் தங்களுக்கு இருக்கின்ற துறைகள் பற்றி மட்டுந்தான் கூற வேண்டுமென்று இலக்கணம் இருப்பதாக நான் கருதவில்லை. ஆனால் ஒருவர் சொல்லுவதற்கும் இன்னொருவர் சொல்லுவதற்கும் முரண்பாடு இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அந்த வகையிலே மந்திரி

களாக உள்ளவர்கள் எந்தத் தவறையும் செய்யவில்லை. இப்போது நீங்களும் நிரம்பப் பேசியிருப்பதாலே இனியும் நேரிடாது என்பதற்கு உங்கள் பேச்சு பயன்படும் என்று கருதிக்கொள்ளுகிறேன்.

நம்முடைய நண்பர் பூவராகன் அவர்கள், அமைச்சர்கள் வெளியிலே போகின்றபோது தனிப்பட்டவர்கள் வீடுகளிலே விருந்து சாப்பிடக்கூடாது என்று சொன்னார்கள். நேரம் இல்லை . . .

**திரு. கோ. பூவராகன் :** விருந்து சாப்பிடுவதைப்பற்றிச் சொல்லவில்லை. தங்குவதைப் பற்றித்தான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தங்குவது, விருந்து சாப்பிடுவது எல்லாம் முறையல்ல ; அமைச்சர்களுக்குப் பாதுகாப்பான முறை தேவை ; அதுவரையில் நோக்கத்தை வரவேற்கிறேன். ஆனால் இதை விஸ்தாரமாக எடுத்துப் பேசுகிறபோது எங்களுக்கும் தோன்றும்—முன்னாலே இருந்த அமைச்சர்கள் எந்தெந்த தனிப்பட்டவர்கள் வீடுகளிலே சாப்பிட்டார்கள் என்பதும், அதற்காக என்னென்ன வகையான விருந்துகள் போடப்பட்டது என்பதும், எப்படி எப்படி அச்சடிக்கப்பட்டது என்பதும், 54 வகையான பலகாரம், 32 வகையான பலகாரம் என்ற அச்சுத் தாள்கள் எல்லாம் இன்னும் இருக்கின்றன ; அவை அழிக்கப்பட்டுவிடவில்லை. அமைச்சர்களாக இருந்தபோது இவ்வளவுதூரம் அனுபவித்தார்களே என்றுதான் மகிழ்ச்சியடைந்தோம். "என்ன சாப்பிட்டீர்கள் ?" என்று நாங்கள் கேட்கவில்லை. நான் இந்தச் சட்ட மன்ற உறுப்பினராகவும், காமராஜர் அவர்கள் முதலமைச்சராகவும் இருந்த நேரத்தில் நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து தண்டலம் மாநாட்டை நடத்திய பிறகு தனிப்பட்டவர் ஒருவருடைய வீட்டிலே சாப்பிட்டோம். தனிப்பட்டவர்களுடைய வீட்டிலே சாப்பிடுவது, தங்குவது, இதனாலே அமைச்சர்கள் வழி தவறிவிடுவார்கள் என்று கருதுவார்களேயானால், "எங்களில் அப்படிப்பட்ட பலஹீனர்கள் யாரும் இல்லை" என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஒருசமயம் பழைய அனுபவத்தில், சாப்பிட்டதால் சில காரியங்களைச் செய்து கொடுத்த அனுபவம் இருப்பதாலே, நாம் சென்ற தவறான வழியில் இவர்களும் செல்லவேண்டாம் என்ற நல்லெண்ணத்தோடு கூறினார்கள் என்று எடுத்துக்கொள்கிறேன்.

ஆனால் எங்களிடத்தில் அப்படிப்பட்ட வலிவு குறைவானவர்கள் இல்லையென்பதில் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறேன். ஆனாலும் என்னுடைய அமைச்சர்களுக்கும் தெளிவாக இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்—கூடுமான வரையில் தனிப்பட்டவர்கள் இல்லங்களிலே தங்குவது, விருந்து உண்பது இவைகளைத் தவிர்க்க வேண்டுமென்பதை நானும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், எனக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் அவர்கள் அறியமாட்டார்கள். ஒரு திங்கள் இருக்குமென்று கருதுகிறேன். எல்லா மாவட்ட கலெக்டர்களுக்கும் நாங்கள் அனுப்புகிற சுற்றறிக்கையில், நாங்கள் சுற்றுப் பயணத்துக்கு வருகிறபோது தனிப்பட்ட பிரமுகர்கள் ஏதாகிலும் விருந்துகளை ஏற்பாடு செய்து நாங்கள் வர வேண்டுமென்று அழைப்பார்களேயானால் 'You use your discretion and refuse it' என்று எழுதியிருக்கிறோம். இதை மந்திரிகள் ஆன பிறகுதான் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஒன்றும் இல்லை. அந்த அளவுக்கு பால பாடத்தை எங்களுக்குப் போதிக்க வேண்டியதில்லை. எங்களுக்கு அதெல்லாம் தெரியும். அதற்கேற்ற வகையில் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர்களிலே பல பேர் அதிகாரிகளுக்காகப் பரிந்து பேசினார்கள். அதை உள்ளபடியே நான் வரவேற்கிறேன். ஒரு நாட்டினுடைய நிர்வாகம் சரியான முறையில் இருக்க வேண்டுமென்றால், ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்கட்சியாக இருந்தாலும் சரி, அதிகாரிகள் விஷயத்தில் அன்பும் அக்கறையும் காட்டவேண்டும். அந்த முறையில் அவர்கள் அதிகாரிகள் விஷயத்தில் அன்பும் அக்கறையும் வைத்திருப்பதை வரவேற்கிறேன். ஆனால் ஒவ்வொரு அதிகாரியும் பொழுது விடிந்து பொழுது போனால் "இன்றைக்குக் கழிந்தது, நாளை என்ன நிலைமையோ" ? என்று அஞ்சும் அளவுக்கு நிலைமை எதுவும் இல்லை. அப்படிப்பட்ட எந்த ஆபத்தும் எந்த அதிகாரிக்கும் இல்லை. ஏதோ ஆபத்தாந்தவர்களைப்போல்—கஜேந்திர மோட்சம் கொடுப்பவர்களைப் போல், கஜேந்திரன் காலை முதலை பிடித்துக் கொள்ள, அது ஆதிமூலமே என்று அலற, "வந்தேன் வந்தேன்" என்று மகாவிஷ்ணு வந்தாராம்—அதைப் போல், யாரோ "எங்களைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்" என்று சொன்னது போல், "வந்தோம், வந்தோம்" என்று சொல்வதுபோல் பாவனை காட்டுகிறீர்களே, அது அளவுக்கு அதிகமாக இருக்கிறது. குறிப்பிட்ட அளவோடு அதை நிறுத்திக் கொண்டிருந்தால் உண்மையிலேயே பிரச்சினைக்குரியதாக இருக்கும். நீங்கள் எதற்காக அதைப் பயன்படுத்துகிறீர்கள் என்று தெரியும். உங்களைச் சேர்ந்த பத்திரிகைகளில் "அதிகாரிகளைப் பற்றி இன்னார் முழக்கம்" என்று வருவதற்காகப் பேசுவீர்களேயானால், இடம் இருக்கக்கூடிய அளவுக்குப் பத்திரிகையிலே தலைப்புக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்—அதற்குக் குறுக்கே நான் நிற்கவில்லை. அதிகாரிகள் விஷயத்திலே இந்த அரசு எப்படி நடந்து கொள்கிறது என்பதுபற்றி திரு. விநாயகமோ அல்லது எதிர்கட்சித் தலைவரோ சொன்னார்கள் என்று நினைக்கிறேன்—நினைவில் இல்லை.





பெரிய உத்தியோகத்தில் இருந்தவர்கள் எல்லாம் தாசில்தாராகக் கீழே தள்ளப்பட்டார்கள் என்று சொல்கிறார்கள். நடந்தது என்னவென்றால், இவர்கள் ஆட்சி நடத்திய காலத்தில் மாவட்ட கலெக்டர்களுக்கு ஒரு பி.ஏ. இருந்ததை இரண்டு பி.ஏ.க்களாக்கி நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிற நேரத்தில் ஒவ்வொரு கலெக்டருக்கும் நான்கு பி.ஏ.க்கள் இருந்தார்கள். நான்கு பி.ஏ. ஒரு கலெக்டருக்கு இருப்பது தேவையில்லை என்ற முறையில் அதில் இரண்டு இரண்டை எடுத்துவிட வேண்டுமென்று ரெவன்யூ இலாகா அதிகாரிகளிடத்தில் கலந்து பேசி அந்த ஆள்குறைப்பு செய்யப்பட்டது. பி.ஏ. பதவியிலிருந்து அவர்கள் இறங்கியதுமே அவர்களுக்குரிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

போலீஸ் இலாகாவைப் பற்றி நண்பர்கள் குறிப்பிட்டார்கள். போலீஸ் துறை தலைமை அதிகாரியாக இருக்கிறவரை அழைத்து உங்கள் துறையில் எந்தெந்த வகையில் சிக்கனத்தைச் செய்யலாம் என்று கேட்டு அவர்கள் ஒப்புதல் பேரில், முழு உண்மையைச் சொல்வதானால் அவர்கள் யோசனையின் பேரிலே சில பதவிகள் நீக்கப்பட்டன அல்லது சில பதவிகளின் அந்தஸ்து குறைக்கப்பட்டன. யாரும் வேலை இழந்துவிடவில்லை.

அதேபோல், பஞ்சாயத்து யூனியன்கள் இருக்குமா இருக்காதா என்று தெரியவில்லை என்று சில நண்பர்கள் கூறினார்கள். தைரியமாக இரவில் தூங்குங்கள், பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கும். அதற்கு எந்த ஆபத்தும் உண்டாக்குவதாகயில்லை. ஏனெனில் பஞ்சாயத்து யூனியன்கள் சரியான முறையில் செயல்படவேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கமே தவிர பஞ்சாயத்து யூனியன்களை அடியோடு கலைத்து விடுவது என்பது இந்த அரசின் நோக்கமல்ல.

அதேபோல், வேறு பல துறைகளிலும் முன்னால் சொல்லியிருக்கிறபடி ஒரே வேலைக்கு இரண்டு மூன்று பேர்கள் இருப்பார்களேயானால்—டூப்ளிகேஷன்—அதைத் தான் குறைக்கவேண்டுமென்பது இந்த அரசின் நோக்கம். திரு. கருத்திருமன் அவர்கள் சொன்னபடி, ஒருவர் வேலையில் இருக்கிறார் என்றால் முழுப் பயனையும் அவர்கள் வேலையின் மூலம் பெறவேண்டும் என்பதுதான். "பார்க்கின்ஸன்ஸ் லா" புத்தகத்தை படித்திருப்பீர்கள். "பார்க்கின்ஸன்ஸ் லா" வில் வருவதுபோல் ஒரு வேலைக்கு எட்டு ஆள்கள், ஒன்பது ஆள்கள் என்று வளர்ந்து வளர்ந்து யார் எதற்குப் பொறுப்பு என்று சொல்லமுடியாமல் அவரவர் தட்டிக் கழிக்கிற வகை இருப்பதனால்தான் அவற்றை ஒருமுகப்படுத்துவதற்கு, நேர்முகப்படுத்துவதற்கு, சீர்படுத்துவதற்கு சில ஆள்குறைப்பு செய்ய வேண்டி வந்ததே தவிர அந்த ஆள்களை வேலையில்லாமல் வெளியே தள்ளிவிட்டுப் பார்ப்பதில் எனக்கு பெருத்த ஆனந்தமுமில்லை, அதில் பெரும் திருப்தியும்

இல்லை, தேவையும் இல்லை. ஆகவே, உத்தியோகஸ்தர்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை. அப்படி ஏதாவது ஒரு இடத்தில் ஆள் குறைப்பு செய்ய நேரிட்டாலும் அவர்களுக்கு மறு வேலை வாய்ப்பு உடனடியாகவும், தொடர்ந்தும் தரப்படுவதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கிடையில் பல்வேறு வகையான குற்றச்சாட்டுகள் எல்லாம் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளத் தக்க நிலைமை ஏற்பட்டது. எனக்குக் கூட அதற்குப் பதில் சொல்வதற்கு ஒரு சுவை. இப்போது நேரம் அதிகமாகிவிட்டதால், கனம் உறுப்பினர்கள் எல்லாம் நீண்ட நேரமாக இந்த இடத்தில் காக்க வைக்கப்பட்டிருப்பதால் அதைப் பற்றி அதிகம் பேச நான் விரும்பவில்லை. பேச விரும்பவில்லையே தவிர பேச முடியவில்லை என்பதல்ல, பேசுவதற்கு எதுவும் இல்லை என்பதும் அல்ல. திரு. கருத்திருமன் அவர்கள் சொன்னார்கள், எங்கள் அமைச்சர்கள் எந்தத் தவறு செய்திருந்தாலும் அவர்களை சந்தைக்குக் கொண்டு வாருங்கள் என்றார். அவர்களுக்கு முன்னாள் அமைச்சர்கள் யார் பேரில் என்ன கோபமோ எனக்குத் தெரியவில்லை. யாரைக் கொண்டு வந்து வைக்க வேண்டுமென்று கருதி அந்தப் பேச்சைச் சொன்னார்களோ என்று கூட சந்தேகப்படுகிறேன். அப்படி அவர்களுக்கு அவர்கள் மந்திரிகள் மீது கோபம் இருந்தாலும் எனக்கு முன்னால் இருந்த எந்த அமைச்சரிடமும்—திரு. பூவராகன் உள்பட—யாரிடமும் எனக்கு கோபம் இல்லை. எந்த அமைச்சர் பேரிலும் அவர்கள் லஞ்சப் புகார்களில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டும் என்னிடம் வரவில்லை.

டாக்டர் ஹாண்டே அவர்கள் சில பைல்களைக் கொளுத்தியதுபற்றிக் குறிப்பிட்டார்கள். திரு. விநாயகம் அவர்கள் அதுபற்றி நான் சொல்ல வேண்டுமென்றார்கள். அது அவர்களுக்கு ரொம்ப பலஹீனமான இடம். ஆகவே, அதைப்பற்றி அதிகம் பேச நான் விரும்பவில்லை. அதன் சட்டப் பிரச்சினைகள் எப்படி என்பதுபற்றி ஆராயவில்லை. ஆனால் நியாயப் பிரச்சினைப்படி நம்முடைய முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் செய்தது முற்றிலும் தவறு, முற்றிலும் தேவையற்றது, முற்றிலும் நியாயமற்றது. அதில் சட்டப்படி இரண்டு பக்கத்திலும் வாதாடலாம். இன்னும் சொல்லப்போனால் நான் அதை சட்ட நிபுணர்களிடம் அனுப்பி இரண்டு விதமான கருத்துக்கள் வந்து கொண்டிருக்கின்றன. நடவடிக்கைகள் எடுக்கும் நோக்கத்தோடு அல்ல. சுவையான பிரச்சினையை இன்னும் கொஞ்சம் ஆராய்ந்து பார்க்கலாம் என்ற முறையில் அந்தக் கருத்துக்களை நான் எடுத்துக்கொண்டிருக்கிறேனே தவிர—டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், முன்னாள் முதல் அமைச்சர் அவர்களை குற்றவாளிக் கூண்டில் கொண்டு வந்து நிறுத்தவேண்டுமென்று. உள்ளபடியே அவ்வளவு பெரிய குற்றம் நடந்ததா என்றால் அப்படிச் சொன்னது அவர்களது வருத்தத்தின் அறிகுறியே தவிர அவர்களே கூட அவரை குற்றவாளிக் கூண்டில் கொண்டு வந்து நிறுத்தி வைக்கமாட்டார்கள். கெய்ராணையே அப்படி நிறுத்தமுடியாமல் போய்விட்டது. பட்நாய்க்கையே அப்படி நிறுத்தமுடியாமல் போய் விட்டது என்று பத்திரிகையில் எழுதுகிறார்கள். எனக்கு விவரம் தெரியாது. முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் அப்படி எதுவும் செய்யவில்லை. ஏதோ கைக்குக் கிடைத்ததை கொளுத்தினார் என்று நினைக்கிறேன். அவர் பதவியை விட்டு விலகுகிற நேரத்தில் ஒரு வேலையும் இல்லாததால் இதையாவது செய்யலாம் என்று கொளுத்தி விட்டுப் போயிருப்பார்கள் என்று கருதுகிறேன். அதில் பெரிய அக்கிரமம் நடந்திருக்கிறது என்று கருதவில்லை. என்னைப் பொறுத்தவரையில் அவைகள் அப்படியே இருந்திருந்தால் கூட அதில் ஒன்றும் பெரிய ரகசியம் இல்லை, சாதாரண விஷயம்தான் அவர்கள் கொளுத்தியது. அவர்கள் ஒரு பத்திரிகை நிருபரிடம் சொன்னதாக பத்திரிகையில் வந்தது; இவையெல்லாம் இருந்தால் போலீஸ் அதிகாரிகள் பேரில் பின்னால் வருகிறவர்கள் பாய்வார்கள் என்பதற்காக நான் கொளுத்திவிட்டேன் என்று சொன்னார்கள். என் அனுபவத்தில் நான் ஒன்றைச் சொல்கிறேன். இந்தி எதிர்ப்புப் போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த சமயத்தில் உயர்தர போலீஸ் அதிகாரி ஒருவர் திடீரென்று ஒரு நாள் நாவலர்



நெடுஞ்செழியன் அவர்களிடம் தொலைபேசி மூலம் பேசினார். என்ன கேட்டார் என்றால், "உங்கள் அண்ணாதுரை தூக்கு போட்டுக்கொண்டானாமே? உண்மையா ?" என்று கேட்டார். இவர் பதறிப்போய் "இல்லை, இல்லை" என்று சொன்னதற்கு, "இல்லை, ஆள் க்ளோஸாகி விட்டான் என்று சொல்லுகிறார்கள், விசாரித்துப் பாருங்கள்." என்று சொல்லி வைத்து விட்டார். அவர் இப்போது என்னுடைய பார்வையில்தான் இருக்கிறார். பார்வையில் இருப்பது மட்டுமல்ல, அவர் உத்தியோகத்திற்கு ஒரு துளி பங்கமும் வராதபடி அவர் இந்த உத்தியோகத்தில் வைத்துக்கொண்டிருக்கப்படுகிறார். அதுமட்டுமல்ல. அவர் அப்படி நடந்தார் என்பதற்காக எனக்கு ஒரு துளியும் அவரிடம் அருவருப்போ அல்லது அவரிடம் கோபமோ கூட எனக்கு வரவில்லை. எதற்குச் சொல்கிறேன் என்றால் நீங்கள் பத்து இருபது ஆண்டுகளுக்குப் பிறகு கஷ்டப்பட்டு பெற்றுக்கொண்டிருக்கிற இந்த மரபை நாங்கள் துவக்கத்திலேயே பெற்றிருக்கிறோம். இந்த அரசு பதவிக்கு வந்த பின் நாங்கள் அதிகாரிகளை வேட்டை ஆடுவோம் என்று முன்னாள் முதல் அமைச்சர் கருதியிருந்தால் எங்களை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல அவர்கள் தங்களையே ஆராய்ந்து கொண்டார்கள் என்று கருதுகிறேன். ஒருவேளை இவர்கள் வந்தவுடன் முன்னாலிருந்த அதிகாரிகளை வேட்டையாடியிருப்பார்கள் போல் இருக்கிறது. ஆகவே நாம் போன பிறகு எந்த அதிகாரிகளை வேட்டை ஆடுவார்களோ என்ற அச்சத்தில் செய்திருக்கிறார்கள். நீங்களும் நாங்களும் பொது மக்கள் சம்மதத்தைப் பெற்று, அவர்கள் அனுமதி பெற்று, சில காலம் வரையில் இந்த மன்றத்தில் இருக்க வந்திருக்கிறோம். ஆனால் அதிகாரிகள் தாங்கள் வேலை பார்க்கிற பதவிக்கு பயிற்சி பெற்று, சட்டப்படி அனுமதி பெற்று, சட்டப் பாதுகாப்பு பெற்று அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய அரசில் எந்தவிதமான கேடும் நேரிடாதபடி எல்லா அதிகாரிகளுக்கும் தக்க பாதுகாப்பு கொடுப்பதை நான் உயர்ந்த பண்புகளில் ஒன்றாகக் கருதுகிறேன். இதை முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் தெரிந்து கொள்ளாமல் கொளுத்தியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதோடு நான் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு ஒரு வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உடலில் இருக்கிற சிறங்கு கொஞ்சம் ஆறி வருகிற நேரத்தில் அது மூடுவதற்கு நாள் கொடுக்க வேண்டும். இல்லாமல் மேலும் மேலும் கிளறினால் அது பெரிய புண்ணாவது போல் அந்தப் பிரச்சினையைப் பற்றி திரும்பத் திரும்பப் பேசுவதால் மனமாச்சரியங்கள் அதிகமாகும். என்னயிருந்தாலும் அவர்கள் கட்சித் தோழர்களாகிய திரு. கருத்திருமனும், திரு. விநாயகமும் ஒரு நேரம் இல்லாவிட்டாலும் ஒரு நேரம் ஏன்தான் அவர் இப்படிச் செய்தார், இப்படிக் கேட்கிறார்களே என்று எண்ணக்கூடும். ஆகவே, மேலும், மேலும் அவர்களுக்கு எரிச்சலூட்டும் வகையில் பேச வேண்டாம் என்று டாக்டர் ஹாண்டே அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் ரொம்ப நல்லவர்கள். பக்தவத்சலம் அவர்களை எனக்கு நிரம்பத் தெரியும். திரு. விநாயகம் அவர்களுக்கு ரொம்ப நன்றாகத் தெரியும். ஆகவே, அவர்களைக் கூண்டில் நிறுத்துங்கள் பார்க்கிறோம், பார்க்கிறோம் என்று சொல்கிறபோது உங்களைப் பற்றி நினைப்பு வரவில்லை. இவர்களுடைய எண்ணம்தான் நினைப்பிற்கு வருகிறது. என்னவோ இரகசியம் இருக்கிறது. ஆகவேதான் இவர்கள் வலியுறுத்துகிறார்கள் என்று எண்ணம் கொண்டேன். அந்தக் கருத்தில் இந்த அரசு ஈடுபடப்போவதில்லை. நீங்கள் எடுத்துச் சொன்ன சில நல்ல யோசனைகளை நான் உரிய மதிப்பு கொடுத்து ஏற்றுக்கொள்கிறேன். இது இது, இப்படி இப்படி நடக்கவேண்டுமென்று எடுத்துச் சொல்கிற யோசனைகளை எல்லாம் நல்ல முறையில் ஏற்று நடப்பேன் என்று உங்களுக்கு உறுதியளித்து இந்த வெட்டுப் பிரேரணைகளை நீங்கள் வலியுறுத்தாமல் இந்த பிற்பகல்
மானியக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் 2-30
கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது விவாதம் முடிந்துவிட்டது. அடுத்து நிதிக் கோரிக்கைகளின் மீதும், அவைகளின் மீது கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களின் மீதும் வாக்கெடுப்பு நடைபெறும். 7-வது கோரிக்கையின் மீது உள்ள தீர்மானங்

களின் மீது வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று வற்புறுத்த விரும்பினால் இப்போது தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிறிது நேரத்திற்குப் பின்பு) வெட்டுத் தீர்மானங்களெல்லாம் வற்புறுத்தப்படவில்லை. எனவே, வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகின்றன.

இப்போது பேரவையின் முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் VII—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் 21,27,400 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்" என்பது.

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரியத் தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** VIII என்ற எண் உள்ள, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற நிதிக் கோரிக்கையின் மீது வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்த உறுப்பினர்கள், அந்தத் தீர்மானங்களின் மீது வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று விரும்புகிறார்களா ?

**THIRU. K. VINAYAKAM :** Sir, in view of the assurance given by the Hon. Chief Minister that they will draw salaries regularly, month by month, I am withdrawing my cut motion.

**THE HON. THIRU. C. N. ANNADURAI :** At reduced rates.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லா வெட்டுத் தீர்மானங்களும் வற்புறுத்தப்படவில்லை. ஆகவே, அவையெல்லாம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகின்றன.

இப்போது பேரவையின் முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் 3,34,81,300 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரியத் தொகை வழங்கப்பட்டது.

## 6. அறிவிப்பு.

### மேலவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைய நிகழ்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முன்னால், அறிவிப்பு ஒன்று உள்ளது.

5 என்ற எண் உள்ள மதுவிலக்கு (திருத்த) மசோதாவும்,

6 என்ற எண் உள்ள பொது விற்பனை வரி (திருத்த) மசோதாவும்,

7 என்ற எண் உள்ள மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) மசோதாவும்,

மேலவையின் பரிவுரை எதுமின்றி 29—6—1967 அன்று மேலவையில் நிறைவேற்றப்பட்டிருப்பதாக மேலவையின் மாண்புமிகு சேர்மன் அவர்களிடமிருந்து செய்தி வந்துள்ளது என்பதை அறிவிக்கின்றேன்.

இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை நாளை, 1—7—1967 காலை 9-00 மணிக்கு மீண்டும் கூடும். வணக்கம்.

பி.ப. 2-35 பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.





## 7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

*215. *Notification issued with G.O.P. No. 1014, Revenue dated the 1st June 1967, exempting the payment of tax under the Madras General Sales Tax Act, 1959 for all sales of parched (beaten) rice and puffed rice with effect on and from the 1st June 1967. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959].*

*216. *Notification issued with G.O. Ms. No. 860, Rural Development and Local Administration, dated the 26th April 1967, removing Thiru P. K. Govindarajan from the office of the Chairman, Coonoor Municipal Council. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920)].*

217. *Notification issued with G.O. Ms. No. 584, Public (Services-A) dated the 16th March 1967, making an amendment to the Madras Public Service Commission Regulations, 1954, published at pages 759 to 768 of Part I of the Fort St. George Gazette, dated the 9th June 1954, as subsequently amended. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India].*

### B. Reports, Notifications and Other Papers.

† 54. *Review of the Progress made in Co-operative Development Schemes 1966–67 (English and Tamil).*

† 55. *Speech and policy note on the Demand No. V (Registration Department).*

65012
Y211,31 N67
N67-3-3

* Laid on the Table of the House on 29th June 1967.

† Despatched to Members on 28th June 1967.

## LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs. Higginbothams, Private, Limited Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons, Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. Rukmani Corporation, Vepery, Madras-7.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-6.
Messrs. Book Corner, Book-sellers, No, 2/4. Mount Road, Madras-2.

### IN MUFASSAL OF MADRAS STATE.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai; Madurai district.
The Oriental Book House, Madurai.
Messrs. Vivekananda Press, Printers, Publishers and Book-sellers, Madurai.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswamy & Co., Tiruchirappalli.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-seller and Publisher, Nagercoil, Kanyakumari district.
Messrs. A. K. Chandriah Chettiar & Sons, Salem.
Messrs. Meenakshi Pathipagam, Pudukkottai.
Messrs. K. V Narayana Iyer & Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari district.
Messrs. Baby Stores, Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B, Town Hall Road, Madurai-1.

### IN OTHER STATES.

Messrs. Janatha Agencies, Book-sellers Gudur.
Messrs. Jain Book Agency, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation, Narayanaguda, Hyderabad-29.
Messrs. The Books Syndicate, Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |